வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu வார மலர்

Email : news@eelanadu.lk | மலர் : 05 | 28.07.2024 ஞாயிற்றுக்கிழமை | இதழ் : 210 | பக்கங்கள் : 16

மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram. மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER ரியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

# ஜனாதிபதித் தேர்தலில் நான் களமிறங்குவேன்!

## நேற்று பகிரங்க அறிவிப்பு விடுத்தார் ரணில்



கொழும்பு, ஜூலை 28

**எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் நான் போட்டியிடுவேன். அதற்கான கட்டுப்பணமும் செலுத்தப்பட்டுள்ளது - என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அறிவித்துள்ளார்.**

காலியில் நேற்று நடைபெற்ற "ஒன்றிணைந்து வெல்வோம் - காலியில் நாம்" பொது கூட்டத் தொடரில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இந்த அறிவிப்பை விடுத்தார்.

"சவால்களை எதிர்கொள்ள முடியாமல் ஓடும் தலைவன் நான் அல்லன். நெருக்கடியான நேரத்தில் நாட்டை பொறுப்பேற்று, முன்னோக்கி சென்றுள்ளேன். வங்குரோத்து நிலையிலிருந்து மீண்டு

15

## மகிந்த வீட்டில் முக்கிய சந்திப்பு

கொழும்பு, ஜூலை 28

முன்னாள் ஜனாதிபதியும் பொதுஜன பெரமுனவின் தலைவருமான மகிந்த ராஜபக்ஷவை, ஜனாதிபதியின் பணிமனைகளின் பிரதானி சாகல ரத்நாயக்க மற்றும் அமைச்சர் சுசில் பிரேம்ஜயந்த ஆகியோர் நேற்று விஜேராமாவத்தையில் உள்ள அவரது உத்தியோகபூர்வ இல்லத்தில் சந்தித்ததாக தெரிவிக்கப்படுகிறது.

15

## சஜித்தின் சகாக்கள் விரைவில் ரணிலின் மேடையில் ஏறுவர்!

### கூறுகிறார் மகிந்தானந்த

கொழும்பு, ஜூலை 28

ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் பலரும் அடுத்து வரும் நாட்களில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் இணையவுள்ளனர் என்று பாராளுமன்ற உறுப்பினர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

காலியில் நடைபெற்ற " ஒன்றிணைந்து வெல்வோம் - காலியில் நாம்" பொது கூட்டத்தில்

15

## புலிகள் இயக்கம் மீதான தடை மேலும் 6 மாதங்களுக்கு நீடிப்பு!

### ஐரோப்பிய ஒன்றியம் அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 28

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் மீதான தடையை மேலும் 6 மாதங்களுக்கு ஐரோப் பிய ஒன்றியம் நீடித்துள்ளது.

இலங்கை வெளிவிவகார அமைச்சு அறிக்கை ஒன்றை வெளியிட்டு இதனை உறுதிப்படுத்தியுள்ளது.

இதன் மூலம், தடைசெய்யப்பட்ட நிறுவனங் கள் மற்றும் தனிநபர்களுக்கு நிதி மற்றும் பொருளாதார உதவிகளை வழங்குவதை ஐரோப்பிய ஒன்றியம் தடைசெய்வதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## ஐக்கிய மக்கள் சக்தியுடன் கூட்டணியா? இன்னும் முடிவில்லை என்கிறார் தயாசிறி

கொழும்பு, ஜூலை 28

சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியுடன் கூட்டணி வைப்பது தொடர்பில் எந்தவொரு முடிவும் எட்டப்படவில்லை என்று சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

எனவே, எதிர்வரும் 08 ஆம் திகதி ஐக்கிய மக்கள் சக்தியுடன் புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடும் திட்டம் எதுவும் இல்லை எனவும் அவர் கூறினார்.

அத்துடன், ஐக்கிய மக்கள் சக்தியுடன் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது என வெளியாகும் தகவலையும் தயாசிறி ஜயசேகர நிராகரித்துள்ளார். (அ)

## தமிழ் மக்கள் மாத்திரமே ரணிலுக்கு வாக்களிப்பர்

### உதயங்க வீரதுங்க கருத்து

கொழும்பு, ஜூலை 28

ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க போட்டியிடுவதாக இருந்தால் தமிழர்கள் மாத்திரமே அவருக்கு வாக்களிப்பார்கள். அதுவும் எமக்கு சாதகமாகவே அமையும்.பொதுஜன பெரமுனவின் உறுப்பினரை வேட்பாளராக களமிறக்கவே தீர்மானிக்கப்பட்டுள்ளது என ராஜபக்ஷர்களின் குடும்ப உறுப்பினரான உதயங்க வீரதுங்க தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது-

2022ஆம் ஆண்டு நிபந்தனைகளின்

15

## யாழ்.மக்களே அவதானம்!

### பண மோசடிச் சம்பவங்கள் அதிகரிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 28

யாழ்ப்பாணத்தில் தற்போது வங்கி மோசடிகள் அதிகரித்து வருவதால் வர்த்தகர்களும் பொது மக்களும் மிகவும் அவதானமாகச் செயற்பட வேண்டுமென யாழ்.வணிகர் கழகம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இவ்வாறு தொடரும் மோசடிகளில் பலருடைய வங்கிக் கணக்குகளில் இருந்து பெருமளவிலான பணம் திருடப்பட்டுள்ளதால் எச்சரிக்கையாக இருக்குமாறும் யாழ்ப்பாண வணிகர் கழகம் அறிவுறுத்தியுள்ளது.

இவ் விடயம் தொடர்பாக வணிகர் கழகம் அறிக் கையொன்றை வெளியிட்டுள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

15

## ரணிலின் காலை வாருமா மொட்டு?

### இன்று மீண்டும் முக்கிய சந்திப்பு

கொழும்பு, ஜூலை 28

ஜனாதிபதி தேர்தலில் பொதுஜன பெரமுன கட்சியின் ஆதரவை பெறுவதற்கு ஜனாதிபதி முயற்சித்து வரும் நிலையில், அக்கட்சி சில நிபந்தனைகளை முன்வைத்துள்ளதால் இழுபறி நிலை ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் இன்று ஜனாதிபதி மற்றும் பஸில் ராஜபக்ச ஆகியோருக்கு இடையிலான மற்றுமொரு முக்கியத்துவம் வாய்ந்த கலந்துரையாடல் நடைபெறவுள்ளது.

ஜனாதிபதி வேட்பாளர் மற்றும் உருவாக்கப் படவுள்ள புதிய கூட்டணி உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் இருவருக்கும் இடையில் தீர்க்கமான

15

## ரணிலே எமது தெரிவு!

### அமைச்சர் டக்ளஸ் திட்டவட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 28

மீண்டும் ஜனாதிபதியாக ரணில் விக்ரமசிங்கவே தெரிவு செய்யப்பட வேண்டும் என தாம் விரும்புவதாகவும் அதுவே தற்கால சூழலுக்கும் தமிழ் மக்களுக்கும் சரியான தெரிவாக இருக்கும் என்றும் ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் தலைவரும் கடற்றொழில் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ் மாவட்டத்திலுள்ள கட்சியின் தலைமை அலுவலகத்தில் நேற்று சனிக்கிழமை இடம்பெற்ற மாவட்ட மற்றும் பிரதேச பொறுப்பாளர்கள், முக்கியஸ்தர்களுடனான சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

15

## 10 மாதங்களில் மட்டும் 488 கொலைகள் பதிவு

கொழும்பு, ஜூலை 28

2023 ஜனவரி முதல் ஒக்ரோபர் வரையிலான பத்து மாதங்களில் 488 கொலைகள் பதிவாகியுள்ளன.

தேசிய கணக்கு தணிக்கை அலுவலகம் வெளியிட்டுள்ள சமீபத்திய அறிக்கையில் இது தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில் 52 கொலைகள் துப்பாக்கிச் சூடுகளால் நடந்தவை என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

தங்காலை பொலிஸ் பிரிவில் அதிகளவான கொலைகள் பதிவாகியுள்ளதுடன், அந்த எண்ணிக்கை 32 ஆகும்.

கடந்த ஆறு ஆண்டுகளில், 2023 இல் அதிக எண்ணிக்கையிலான வீடுகள் உடைப்பு மற்றும் கொள்ளைகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

2018 ஆம் ஆண்டைவிட கடந்த ஆண்டு அந்த குற்றங்கள் ஐம்பது சதவீதம் அதிகரித்துள்ளதாக தேசிய கணக்காய்வு அலுவலகம் கூறுகிறது.

15

## 15 வேட்பாளர்கள் இதுவரை கட்டுப்பணம்

கொழும்பு, ஜூலை 28

இலங்கையின் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 21 ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனா திபதித் தேர்தலில் போட்டியிடுவார்கள் என எதிர்பார்க்கப்படும் வேட்பாளர்களின் எண்ணிக்கை இதுவரை 15ஆக அதிகரித்துள்ளது.

இம்முறை ஜனாதிபதித் தேர்தலில்

15

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கில் உற்பத்தியாகும் பழங்கள் குறைந்த விலையில் கொழும்புக்கு

## வடக்கு ஆளுநர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 28


**வடக்கு மாகாணத்தில் உற்பத்தி செய்யப்படும் பழங்களை கொழும்புக்கு கொண்டு வந்து சலுகை விலையில் பாவனையாளர்களுக்கு வழங்கும் வேலைத்திட்டம் விரைவில் நடைமுறைப்படுத்தப்படும் என்று வடக்கு மாகாண ஆளுநர் பி. எஸ். எம். சார்ள்ஸ் தெரிவித்தார்.**

கொழும்பில் உள்ள நுகர்வோர் அதிக விலை கொடுத்து பழங்களை கொள்வனவு செய்ய வேண்டியுள்ளதால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

வடக்கு மாகாண அபிவிருத்தி தொடர்பில் அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பிலேயே ஆளுநர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

வடக்கு மாகாணத்தில் விளைவிக்கப்படும் பழங்களை கொழும்புக்கு கொண்டு செல்வதில் எதிர்நோக்கும் பிரதான பிரச்சனை போதிய போக்குவரத்து வசதிகள் இல்லாமையாகும். மற்றும் களஞ்சிய வசதிகளுக்கு அதிக செலவு செய்ய வேண்டியுள்ளது. இது குறித்து போக்குவரத்து அமைச்சருடன் கலந்துரையாடியுள்ளோம்.

இதற்காக விசேட நிதி மூலமொன்று ஒதுக்கப்பட்டுள்ளதாகவும், அதனூடாக வடக்கு மாகாணத்தில் உள்ள ஒவ்வொரு புகையிரத நிலையங்களிலும் களஞ்சியசாலைகள் நவீனமயப்படுத்தப்பட்டு வடக்கின் பழங்களை கொழும்புக்கு கொண்டு வருவதற்கான துரித அமைப்பு ஏற்படுத்தப்படும் என்றும் போக்குவரத்து அமைச்சர் உறுதியளித்துள்ளதாக ஆளுநர் மேலும் தெரிவித்தார். (எ)



## யாழ். பல்கலையில் நினைவேந்தல்

யாழ்ப்பாணம், ஜூலை 28

தமிழ் மக்களின் தன்னாட்சி உரிமையை அங்கீகரித்து தொடர்ந்து குரல் கொடுத்த சிங்களத் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்னவின் மறைவையொட்டி பல்கலைக்கழக மாணவர்களால் அஞ்சலி செலுத்தப்பட்டதோடு, கறுப்பு ஜூலை இனவழிப்புக் கலவரத்தின் 41 ஆம் ஆண்டு நினைவேந்தல்களும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்றன. (எ)

## 200 போதை மாத்திரைகளுடன் 22 வயது இளைஞன் கைது

கொழும்பு, ஜூலை 28

200 போதை மாத்திரைகளுடன் 22 வயது இளைஞன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

வெல்லம்பிட்டி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குருனியாவத்தைப் பகுதியில் போதை மாத்திரைகளுடன் இளைஞர் ஒருவர் பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதானவர் வெல்லம்பிட்டி, குருனியாவத்தை பகுதியை சேர்ந்த 22 வயதுடைய இளைஞன் ஆவார்.

இதனையடுத்து, சந்தேக நபர் மேலதிக விசாரணைகளுக்காக வெல்லம்பிட்டி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.(எ)

## மூன்று சிறுவர் நூல்களின் அறிமுக நிகழ்வு இன்று

யாழ்ப்பாணம், ஜூலை 28

எழுத்தாளர் தேன்மொழி சபாவின் 'சிட்டுக் குருவியும் கிளிக் குஞ்சும்', 'மான் குட்டியும் தேரையும்', 'முட்டையில் இருந்து புறப்பட்ட குஞ்சுகள்' ஆகிய மூன்று சிறுவர் இலக்கிய நூல்களின் அறிமுக நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு காலையடி மறுமலர்ச்சி மன்ற உள்ளரங்கில் ஓய்வுநிலை அதிபர் ந. சிவசுப்பிரமணியம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் வாழ்த்துரைகளை யாழ். பண்ணாகம் வடக்கு அ. மி. த. க. பாடசாலையின் அதிபர் திருமதி அபிராமி சிவபவன், யாழ். சுழிபுரம் வடக்கு ஆறுமுக வித்தியாலய அதிபர் எம். சி. சுதாகரன், ஓய்வுநிலைக் கல்விப் பணிப்பாளரும், மறுமலர்ச்சி மன்றத்தின் தலைவருமான சு. சுந்தரசிவம், நூல் மதிப்பீட்டுரைகளை யாழ். சுழிபுரம் வடக்கு ஆறுமுக வித்தியாலய ஆசிரியர் திருமதி இந்துமதி யாதவன், பாரி அறக்கட்டளையின் தலைவர் ச.நிகேஸ் ஆகியோர் வழங்குவர். ஏற்புரையை நூலாசிரியர் தேன்மொழி சபா ஆற்றவுள்ளார். (எ)

## ஜனாதிபதி தேர்தலுக்காக விசேட பொலிஸ் பிரிவு

கொழும்பு, ஜூலை 28

ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கைகளுக்காக, தேர்தல் விவகாரங்களுக்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அசரங்க கரவிடவுக்கு மேலதிகமாக மேலும் ஒரு பிரதிப் பொலிஸ்மா அதிபர் மற்றும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

பிரதிப் பொலிஸ்மா அதிபர் பீ. லியனகே மற்றும் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி கே. டீ. ஜீ. எல். ஏ தர்மசேன ஆகியோரே இவ்வாறு நியமிக்கப்பட்டுள்ளதாக தெரியவிக்கப்பட்டுள்ளது.

நேற்று மாலை பொலிஸ் தலைமையகத்தில் ஜனாதிபதித் தேர்தல் விவகாரங்களுக்காக விசேட பிரிவொன்று ஸ்தாபிக்கப்பட்டுள்ள நிலையில் நேற்று முன்தினம் குறித்த பிரிவுக்கு பொறுப்பதிகாரி ஒருவரும் நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ)

## புதிய விலையில் பாண் விற்பனை இல்லையேல் சட்ட நடவடிக்கை

கொழும்பு, ஜூலை 28

450 கிராம் பாணின் விலையை 10 ரூபாயால் குறைக்க தீர்மானிக்கப்பட்டுள்ள நிலையில், குறைக்கப்பட்ட புதிய விலையில் விற்பனை செய்யாத பேக்கரி மற்றும் கடை உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று நுகர்வோர் அதிகார சபை தெரிவித்துள்ளது.

இது தொடர்பான சோதனைகளை மேற்கொள்ளுமாறு புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளதாக நுகர்வோர் அதிகார சபையின் தலைவர் டி. ஐ. உடுவர குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, ஜனவரி மாதம் முதல் தற்போது வரை சட்டப்படியான எடை மற்றும் அளவிடும் கருவிகள் மீதான சோதனையின் போது 210 பேருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கொழும்பு மாவட்ட உதவி அளவீட்டு அலகு தர நிர்ணய சேவை அத்தியட்சகர் தில்ருக் பட்டியாபொல தெரிவித்தார். (எ)



தமிழ்த் தேசத்தின் விடுதலைக்காகக் குரல் கொடுத்த கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்னவுக்கு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன் மற்றும் அந்தக் கட்சியின் பிரமுகர்களான சட்டத்தரணி, ந. காண்டீபன், சட்டத்தரணி க. சுகாஸ் ஆகியோர் அஞ்சலி செலுத்தினர்.

## விபசார விடுதி சுற்றிவளைப்பு 5 பெண்கள் கைது

கொழும்பு, ஜூலை 28

கல்கிஸை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் மசாஜ் நிலையம் என்ற போர்வையில் இயங்கி வந்த விபசார விடுதியிலிருந்து 5 பெண்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கல்கிஸை பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நீர்கொழும்பு, மாத்தளை, மாவனல்லை மற்றும் தெனியாய ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 21 முதல் 32 வயதுக்குட்பட்ட ஐந்து பெண்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். (எ)

## வீதியில் கிடந்த தொலைபேசியை எடுத்து விற்றவர் கைதானார்

### யாழ்ப்பாணத்தில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஜூலை 28

தொலைபேசியை திருடிய வரும் அதனை வாங்கியவரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சூரிய பண்டாரவுக்கு கீழ் இயங்கும் யாழ். மாவட்ட பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் தொலைபேசியுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம், கன்னாதிட்டி பகுதியில் கடந்த 14ஆம் திகதியன்று சமுர்த்தி அலுவலகத்தில் பணிபுரியும் உத்தியோகத்தரது தொலைபேசியானது வீதியில் தவறுதலாக விழுந்த நிலையில் அந்த இடத்தில் நின்றவர் அதனை எடுத்து சென்றுவிட்டார்.

குறித்த உத்தியோகத்தர் சிறிது தூரம் சென்று பார்த்த பொழுது தொலைபேசியை காணவில்லை. மறுபடியும் அந்த இடத்துக்கு வந்து தேடிய பொழுது தொலைபேசி கிடைக்கவில்லை. பின்னர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது.

இந்த நிலையில் யாழ்ப்பாணம் மாவட்ட பொலிஸ் புலனாய்வுப் பிரிவினர் சி. சி. ரிவிகமரா உதவியுடன் குறித்த நபரை இனம் கண்டனர். அந்த வகையில் குறித்த நபர் வீதியில் நடமாடுவதாக மாவட்ட பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்கு தகவல் கிடைக்கப் பெற்றது.

இதன்போது, அந்தப் பகுதியில் வைத்து பொலிஸார் அவரை கைது செய்து விசாரித்தனர். அவர் அந்த தொலைபேசியை இன்னொருவருக்கு விற்றதாக கூறியுள்ளார். பின்னர் பொலிஸார் தொலைபேசியை வாங்கியவரையும் தொலைபேசியுடன் கைது செய்தனர்.

ஒருவர் சாவகச்சேரி பகுதியைச் சேர்ந்தவர் என்றும் மற்றவர் முழங்காவில் பகுதியைச் சேர்ந்தவர் என்றும் விசாரணைகளில் தெரியவந்தது. குறித்த தொலைபேசி 76,000 ரூபாய் பெறுமதி வாய்ந்ததாகும். இந்த நிலையில் கைதான இருவரையும் யாழ்ப்பாணம் தலைமையக பொலிஸ் நிலையத்தில் பாரப்படுத்தி மேலதிக விசாரணையின் பின்னர் அவர்களை யாழ்ப்பாணம் நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதி தேர்தலுக்கு தேவையான நிதியை வழங்க திறைசேரி தயார்

## நிதி இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 28

**தேர்தல்கள் ஆணையாளரின் கோரிக்கைக்கு அமைய ஜனாதிபதித் தேர்தலுக்குத் தேவையான நிதியை வழங்க திறைசேரி தயாராகவுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்துள்ளார்.**



அறிக்கையொன்றை வெளியிட்டு அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இந்த ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் தேர்தல் நடவடிக்கைகளுக்காக 10 பில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. பணப் புழக்கங்களுக்கிடையில் முரண்பாடு ஏற்படாத வகையில் நிதியை விடுவிப்பதற்கு பொருளாதாரம் உரிய முறையில் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய தேர்தல்கள் ஆணையாளர் அலுவலகம் சுமார் 8 பில்லியன் ரூபாய் மதிப்பீட்டை அனுப்பியுள்ளது. அச்சிடுதல், பாதுகாப்பு, எரிபொருள், வாக்குப் பெட்டிகள் போன்ற எந்தவொரு அவசர தேவைக்கும் நிதியை வழங்க திறைசேரி தயாராகவுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து, மதிப்பிடப்பட்ட செலவு அதிகரித்தால், அவ்வாறான நடவடிக்கைகளுக்கான மேலதிக செலவுகளை சமாளிப்பதற்கு தற்போது நிதி இருப்பதால் பிரச்சனை இல்லை- என்றார். (எ)

இளம் கண்டுபிடிப்பாளர்களுக்கான போட்டி


# அக்கரைப்பற்று மத்திய கல்லூரி மாணவர்களே அதிகம் பங்கேற்பு

அக்கரைப்பற்று, ஜூலை 28

தேசிய புத்தாக்குநர் ஆணைக்குழுவால் பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்பட்ட மாகாண மட்ட போட்டி நிகழ்ச்சிகளில் அக்கரைப்பற்று கல்வி வலயம் சார்பாக அதிகளவு மாணவர்கள் பங்கு பற்றிய பாடசாலையாக அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரி (தேசிய பாடசாலை) புத்தாக்குநர் ஆணைக்குழுவின் பாராட்டுதல்களைப் பெற்றுள்ளதாக அதிபர் ஏ.எச்.பௌஸ் தெரிவித்தார்.

கல்வி அமைச்சின் வழிகாட்டுதல்களுக்கமைவாக பாடசாலைகளில் இணைப்பாட விதான செயல்பாடுகளை மேம்படுத்தும் பொருட்டு பல்வேறு குழுக்கள் அமைக்கப்பட்டு பல வகையான வேலைத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

இதற்கிணங்க, பாடசாலை மட்டத்தில் இளம் கண்டுபிடிப்பாளர்களுக்கான போட்டி நிகழ்வுகள் அண்மையில் நடத்தப்பட்டு அதில் தெரிவான 30 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற இளம் கண்டுபிடிப்பாளர்களுக்கான போட்டியில் பங்கு பற்றி அனைத்து மாணவர்களும் சான்றிதழ்களைப் பெற்றுள்ளனர். இந்தப் போட்டியில் பங்கு பற்றி தேசிய மட்டப் போட்டிக்காக தெரிவாகும் மாணவர்களின் விவரத்தினை தேசிய புத்தாக்குநர் ஆணைக்குழு விரைவில் வெளியிடவுள்ளது. (எ)



# ஓர் இனத்தை ஓரங்கட்டுவதுதான் அரசின் கொள்கையாக இருந்தது

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் சாடல்

கொழும்பு, ஜூலை 28

கோவிட் - 19 பெருந் தொற்று காலப்பகுதியில் உயிரிழந்த முஸ்லிம்களின் ஜனாஸாக்கள் தகனமா? அடக்கமா? என்ற விவகாரத்தில் விஞ்ஞானபூர்வ அடிப்படையில் அல்லாது, இனவாதம், மதவாதம், இன பேதம் மற்றும் மத பேதம் ஆகியவற்றின் அடிப்படையில், ஓர் இனத்தை ஓரங்கட்டுவதும், ஒரு மதத்தை நசுக்குவதும்தான் அரசின் கொள்கையாக அமைந்தது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றஞ்சாட்டினார்.

இன்று அதற்காக அவர்கள் மன்னிப்பு கேட்கின்றனர், மன்னிப்பு கேட்பது நல்ல விடயம் தான். என்றாலும், வலுக்கட்டாயமாக தகனம் செய்யப்பட்ட குடும்பங்களுக்கு, அதனால் சிரமத்துக்கு உள்ளான குடும்பங்களுக்கு இழப்பீடு வழங்க வேண்டும். ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சியில் இந்த இழப்பீட்டைப் பெற்றுத் தருவேன் என்றும் சஜித் கூறினார்.

பிரபஞ்சம் தகவல் தொழில்நுட்ப வேலைத்திட்டத்தின் கீழ், 376 ஆவது கட்டமாக 11 இலட்சத்து 77,000 இலட்சம் ரூபாய் பெறுமதியான ஸ்மார்ட் வகுப்பறை உபகரணங்கள் மற்றும் அகராதிகள் என்பன கொழும்பு, மொறட்டுவை, மோதர, அரபாத் முஸ்லிம் வித்தியாலயத்துக்கு வழங்கி வைக்கும் நிகழ்வு நடைபெற்றது. இதன்போதே சஜித் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (எ)

# நாயை குளிப்பாட்டுவது போல் தேர்தலை வழிநடத்தும் ரணில்

## அநுரகுமார எம். பி. விமர்சனம்



கொழும்பு, ஜூலை 28

நாயை குளிப்பாட்டுவதற்கு அழைத்துச் செல்வது போல் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ஜனாதிபதித் தேர்தலை வழிநடத்துகிறார்- இவ்வாறு தேசிய மக்கள் சக்தியின் தலைவர், பாராளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸநாயக்க தெரிவித்தார்.

தேசபந்து தென்னக்கோன் எதிர்காலத்தில் பொலிஸ்மா அதிபராக கடமையாற்றினால் அது தொடர்பில் தேவையான சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வோம் என்றும் அவர் கூறினார்.

பதில் பொலிஸ்மா அதிபர் நியமனம் தொடர்பில் பிரதமர் தினேஷ் குணவர்த்தன, ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவித்த கருத்து குறித்து அநுர மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

குறிப்பாக, தேர்தலை சந்திக்காமல் தனது இருப்பை எப்படி பலப்படுத்துவது என்று பல்வேறு சந்தர்ப்பங்களில் ரணில் முயற்சி செய்து வந்தார். சமூகத்தில் குழப்பத்தை ஏற்படுத்தும் வகையில் இந்த பொலிஸ்மா அதிபர் நியமனத்தை தவிர்த்து வந்தார். மேலும், இன்று பொலிஸ்மா அதிபர் நியமிக்கப்பட மாட்டார் என்றும் பதவி வெற்றிடமில்லை என்றும் கூறுகின்றனர். இது தொடர்பில் தினேஷ் குணவர்த்தன பாராளுமன்றத்தில் நீண்ட விளக்கமளித்துள்ளார். முடிந்தால் நீங்கள் சொன்ன கதையை வெளியே சென்று சொல்லுங்கள் என்று தினேஷ் குணவர்த்தனவுக்கு சவால் விடுகிறோம்- என்றார். (எ)

# அடுத்த வருடம் ஜனவரி முதல் இலத்திரனியல் கடவுச்சீட்டுகள்

கொழும்பு, ஜூலை 28

அடுத்த வருடம் ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் இலங்கையர்களுக்கு பாதுகாப்பானதும், புதுப்பிக்கப்பட்டதுமான முறையில் இலத்திரனியல் கடவுச்சீட்டுகள் வழங்கப்படும் என்று குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஜூலை 16 ஆம் திகதி முதல் www.immigration.gov.lk என்ற இணையத்தளத்தினூடாக இலத்திரனியல் கடவுச்சீட்டுகளைப் பெற்றுக்கொள்வதற்கு முன் பதிவு செய்து கொள்ள முடியும்.

மேலும், முன் பதிவு செய்துள்ள கடவுச்சீட்டு விண்ணப்பதாரர்கள் மட்டும் குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் தலைமை அலுவலகம் மற்றும் பிராந்திய அலுவலகங்களுக்கு வருகை தருமாறும், முன் பதிவு இன்றி குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்துக்கு செல்வதைத் தவிர்க்குமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

முன் பதிவு செய்ததன் பின்னர், முன்னுரிமை அடிப்படையில் கடவுச்சீட்டைப் பெறுவதற்கான வாய்ப்பு வழங்கப்படும் என அந்தத் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (எ)

# போதைப்பொருள் வைத்திருந்த குற்றச்சாட்டில் 720 பேர் கைது

கொழும்பு, ஜூலை 28

நாடளாவிய ரீதியில் நேற்று நண்பகல் 12 மணியுடன் நிறைவடைந்த 24 மணித்தியாலயத்துக்குள் மேற்கொள்ளப்பட்ட யுக்திய நடவடிக்கையின் போது போதைப்பொருள் வைத்திருந்த குற்றம் தொடர்பில் 720 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களில் 702 ஆண்களும் 18 பெண்களும் அடங்குவதாக பொலிஸார் கூறினர்.

இதேவேளை, கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களில் 21 பேர் பொலிஸ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளதுடன், 27 பேர் புனர்வாழ்வு நிலையங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.

இந்த சந்தேக நபர்களிடமிருந்து 190 கிராம் 286 மில்லி கிராம் ஹெரோயின், 220 கிராம் ஐஸ், 1128 கிராம் 026 மில்லி கிராம் கஞ்சா, 307 போதை மாத்திரைகள் மற்றும் 24, 741 கஞ்சா செடிகள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன. (எ)

# 24,730 கஞ்சா செடிகளுடன் குடும்பஸ்தர் கைதானார்

கொழும்பு, ஜூலை 28

24 ஆயிரத்து 730 கஞ்சா செடிகளுடன் எம்பிலிப்பிட்டிய பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட தொரகொலயாய பகுதியில் 42 வயதுடைய குடும்பஸ்தர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் இந்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு மில்லியன் சுற்றுலா பயணிகள் இந்த வருடம் இலங்கைக்கு வருகை

## சுற்றுலாத்துறை மீண்டும் எழுச்சி!

கொழும்பு, ஜூலை 28

**இந்த வருடம் ஜூலை 15 ஆம் திகதி வரை இலங்கைக்கு 10 இலட்சத்து 95 ஆயிரத்து 675 வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளனர் என்று சுற்றுலா மற்றும் காணி அமைச்சின் செயலாளர் சோமரத்ன விதான பத்திரண தெரிவித்தார்.**



இந்த நிலை தொடருமானால், போருக்குப் பின்னர் இலங்கையில் சுற்றுலாத்துறையின் உச்ச நிலை பதிவான 2018 ஆம் ஆண்டை விடவும் நல்ல நிலையை அடைய முடியும் எனவும் அவர் கூறினார்.

ஈஸ்டர் தாக்குதல், கோவிட் - 19 தொற்றுநோய் மற்றும் பொருளாதார நெருக்கடி காரணமாக இலங்கையில் சுற்றுலா வர்த்தகம் வீழ்ச்சியடைந்தது எனவும் ஆனால் சுற்றுலா அமைச்சு மற்றும் அதனுடன் இணைந்த நிறுவனங்களால் ஆரம்பிக்கப்பட்ட முறையான வேலைத்திட்டத்தால் தற்போது வெற்றிகரமான பெறுபேறுகள் கிடைத்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர், நாட்டில் சுற்றுலாத் துறை திருப்திகரமான நிலையில் இல்லை. குறிப்பாக ஈஸ்டர் தாக்குதல், கோவிட் - 19 தொற்றுநோய், பொருளாதார நெருக்கடி ஆகியவை சுற்றுலாத் துறையை வீழ்ச்சியடையச் செய்தன. ஆனால், சுற்றுலா அமைச்சும் அதனுடன் இணைந்த நிறுவனங்களும் இணைந்து முன்னெடுத்த திட்டத்தின் மூலம் தற்போது வெற்றிகரமான பெறுபேறுகள் கிடைக்கின்றன.

அதன்படி, 2022ஆம் ஆண்டில் 7 இலட்சத்து 19,978 வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளும், 2023 ஆம் ஆண்டில் 14 இலட்சத்து 87,303 பேரும் இலங்கைக்கு வந்துள்ளனர். 2024 ஜூலை 15ஆம் திகதிக்குள், இலங்கைக்கு வந்த வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 10 இலட்சத்து 95,675 ஆக பதிவாகியுள்ளது.

இதன்படி, கடந்த இரண்டு வருடங்களுடன் ஒப்பிடும் போது இந்த வருட இறுதிக்குள் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் அதிகளவில் வருகை தருவார்கள் என ஊகிக்க முடிகிறது.

போருக்குப் பிறகு, 2018 இல் சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு அதிகளவில் வருகை தந்திருந்தனர். அந்த ஆண்டில் 23 இலட்சத்து 33,796 பேர் இலங்கைக்கு வந்தனர். அப்போதைய சுற்றுலா வர்த்தக வருமானம் 4. 4 பில்லியன் அமெரிக்க டொலர்களாக பதிவாகியுள்ளது. நாட்டின் தற்போதைய நிலைமை தொடர்ந்தால், 2024 ஆம் ஆண்டின் இறுதிக்குள், இந்த நாட்டுக்கு வரும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையையும், அதிலிருந்து வரும் வருமானத்தையும் 2018 ஆம் ஆண்டை விட அதிகரித்துக்கொள்ள முடியும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார். (எ)

# துப்பாக்கி கண்டுபிடிப்பு

கொழும்பு, ஜூலை 28

இரத்தினபுரி, கொலொன்ன பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் கடந்த 9 ஆம் திகதி இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்துக்கு பயன்படுத்தப்பட்டதாக கூறப்படும் துப்பாக்கி கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் கொலை மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்தனர்.

இந்தத் துப்பாக்கிச் சூட்டு சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டிருந்த இரண்டு சந்தேக நபர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் மித்தெனிய பிரதேசத்தில் உள்ள வீடொன்றுக்கு அருகில் புதைக்கப்பட்டிருந்த நிலையில் இந்தத் துப்பாக்கி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

வெளிநாட்டில் உள்ள பாதாள உலகக் கும்பலைச் சேர்ந்த பிரபல போதைப்பொருள் கடத்தல்காரர் ஒருவரின் தலைமையில் இந்தத் துப்பாக்கிச் சூடு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக விசாரணையில் தெரியவந்துள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் கொலை மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றப் புலனாய்வுப் பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# வனத்துறை காரியாலய அதிகாரிகள் மீது தாக்குதல்

## சந்தேகநபர் பொலிஸாரால் கைது

பூநகரி, ஜூலை 28

பூநகரி வனத்துறை காரியாலய அதிகாரிகள் இருவரை அந்தப் பிரதேசத்தில் வசிக்கும் நபர் ஒருவர் மரக்கட்டையால் தாக்கியதால் காயமடைந்த இருவர் பூநகரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பூநகரி பிரதேசத்தில் காடுகளை வெட்டியமை தொடர்பில் சில மாதங்களுக்கு முன் கைது செய்யப்பட்ட ஒருவர் மது அருந்திவிட்டு வனவள காரியாலயத்தின் ஜன்னல்களை உடைத்து அரச உடைமைகளுக்கு சேதம் விளைவித்ததாக பொலிஸாருக்கு முறைப்பாடு கிடைக்கப்பெற்றுள்ளது.

இதன்படி குறித்த சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் காயமடைந்தவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (எ)



# திருக்கோவிலில் திருவிழா

திருக்கோவில், ஜூலை 28

வரலாற்று பிரசித்தி பெற்ற அம்பாறை, திருக்கோவில் சிறீ சித்திர வேலாயுத சுவாமி ஆலயத்தின் வருடாந்த ஆடி அமாவாசை பெருந்திருவிழா சிறப்பாக நடைபெற்று வருகிறது.

அந்த வகையில் வெள்ளிக்கிழமை பகல் இரவுத் திருவிழாவின்போது ஆயிரக்கணக்கான பக்தர்கள் பங்கேற்றனர்.

இதேவேளை, எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் நான்காம் திகதி பிதிர்க்கடன் செலுத்தும் ஆடி அமாவாசை சமுத்திர தீர்த்தோற்சவம் நடைபெறும் என்று ஆலய பரிபாலன சபை தலைவர் சுந்தரலிங்கம் சுரேஸ் தெரிவித்தார்.

# 3 வாகனங்கள் ஒன்றுடன் ஒன்று மோதிய விபத்தில் ஒருவர் பலி

கொழும்பு, ஜூலை 28

இரத்தினபுரி கொடகவெல பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பெல்மடுல்ல - நோனாகல வீதியில் மல்வத்தை பகுதியில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

இரத்தினபுரி நோக்கிப் பயணித்த ஓட்டோ, எதிர்த்திசையில் பயணித்த தனியார் பஸ்ஸுடன் மோதி கவிழ்ந்து பின்புறத்தில் பயணித்த மோட்டார் சைக்கிளுடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றது.

இந்த விபத்தின் போது ஓட்டோ சாரதி படுகாயமடைந்த நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

இரத்தினபுரி, கஹவத்தை பகுதியை சேர்ந்த 40 வயது நபரொருவரே இவ்வாறு உயிரிழந்தார்.

இதனையடுத்து, பஸ் சாரதி சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (எ)

போலி பிக்குகள் அதிகரிப்பு

# பௌத்த தர்மத்தை திரிபுபடுத்தும் 12 நிலையங்கள் இலங்கையில்?


கொழும்பு, ஜூலை 28

பௌத்த தர்மம் போன்று நாட்டின் வரலாற்றையும் திரிபுபடுத்தும் 12 நிலையங்கள் இதுவரை நாட்டுக்குள் இயங்கி வருவதாக தேசிய மரபுரிமைகளைப் பாதுகாப்பதற்கான பாராளுமன்ற ஒன்றிய கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அத்துடன், பௌத்த மதத்தைத் திரிபுபடுத்தும் 85 பேர் அடையாளம் காணப்பட்டிருப்பதாகவும் இங்கு தெரிவிக்கப்பட்டது.

தேசிய மரபுரிமைகளைப் பாதுகாப்பதற்கான பாராளுமன்ற ஒன்றியம் அதன் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் ஜயந்த சமரவீர தலைமையில் கூடியபோதே இந்த விடயங்கள் குறித்துக் கலந்துரையாடப்பட்டன.

இந்தக் கூட்டத்தில் ஹாகொடவிப்பசி தேரர், பேராசிரியர் மாவத்தகம பேமானந்த தேரர், சட்டத்தரணி கல்யானந்த தீரனாகம, சட்டத்தரணி ராஜா குணரத்ன, மதுகம செனவிருவன் மற்றும் கலாநிதி வசந்த பண்டார ஆகியோர் கலந்துகொண்டனர்.

'காரக சங்க சபையின்' முடிவுக்கு அமைய ஒழுக்கத்தைக் கடைப்பிடிக்காத பிக்குமார் யாராவது துறவறத்திலிருந்து வெளியேற்றப்பட்டாலும் அவர்கள் காவியுடை அணிவதைத் தடைசெய்யும் அதிகாரம் காரக சங்க சபைக்கு இல்லையென்பதால் இது குறித்து சட்டரீதியான



திருத்தங்களைக் கொண்டு வருவதன் அவசியம் குறித்து இங்கு ஆராயப்பட்டது.

அத்துடன், பிக்குமாரின் பெயருடன் போலி நபர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால் அவர்களை அடையாளம் கண்டு நடவடிக்கை எடுப்பது குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது.

பௌத்த தர்மத்தை திரிபுபடுத்தல், புத்தர் பற்றிய கட்டுக்கதைகளை பரப்புதல், தேரர்களை இழிவுபடுத்தும் விதத்தில் பல்வேறு ஊடகங்களைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் பிரசாரங்கள் குறித்து கலந்துகொண்டவர்கள் எடுத்துக்காட்டுகளுடன் இங்கு விரிவாக விளக்கமளித்தனர். பௌத்த தர்மத்தை திரிபுபடுத்தி தொகுக்கப்படும் நூல்கள் பெருமளவில் பிரபல்யப்படுத்தப்படுவதாகவும் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டவர்கள் சுட்டிக்காட்டினர்.

இவற்றைத் தடுப்பதற்கான அவசியமும் இங்கு வலியுறுத்தப்பட்டது. இதற்கமைய, இன்னும் இரண்டு கூட்டங்களின் பின்னர் குறித்த பரிந்துரையை அறிவுறுத்தலாகத் தயாரித்து மகாநாயக்க தேரர்களைத் தெளிவுபடுத்தி அவர்களின் முன்மொழிவுகளையும் பெற்று பாராளுமன்றத்தில் அதனை முன்வைக்க எதிர்பார்த்திருப்பதாகவும் ஒன்றியத்தின் தலைவர் ஜயந்த சமரவீர தெரிவித்தார்.

இந்தக் கூட்டத்தில் இராஜாங்க அமைச்சர் சிசிர ஜயகொடி, பாராளுமன்ற உறுப்பினர்களான உதய கம்மன்பில மற்றும் வீரசுமன வீரசிங்க ஆகியோரும் கலந்துகொண்டனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
28.07.2024 ஞாயிற்றுக்கிழமை
பிலவ வருடம், ஆடி 12
"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.
E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## உணர்வுகளை புறம் தள்ளி சிந்தித்தல்!

ஐரோப்பிய ஒன்றிம் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் மீதான தடையை மீளவும் உறுதிப்படுத்தியிருக்கின்றது. இதில் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை. விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கும் இலங்கை அரசுக்கும் இடையிலான இறுதி யுத்தத்தின் போது, ஐரோப்பிய ஒன்றியம் விடுதலைப் புலிகள் இயக்கத்தை சர்வதேச பயங்கரவாத அமைப்பாக பட்டியிலிட்டது. அதேஆண்டுதான் கனடாவும் தடை செய்தது. அந்தத் தடை இன்றுவரையில் தொடர்கின்றது.

கனடாவில் தேர்தலில் வெற்றி பெறும் நோக்கில் சில அரசியல் வாதிகள் எங்களுடைய ஆட்சியமைந்தால், விடுதலைப் புலிகள் மீதான தடையை இரத்துச் செய்வோம் என்று கூறுவதுண்டு. அதனை அப்படியே விழுங்கிக் கொள்ளும் தமிழ் தேசியர்கள் இருக்கின்றனர். ஆனால் அது ஒரு போதும் நடைபெறாது ஏனெனில் இவ்வாறான விடயங்கள் வெளிவிவகார நிலைப்பாடுகளாகும், அது வெறுமனே கனடாவுடன் மட்டும் தொடர்பானதல்ல மாறாக, அமெரிக்காவின் வெளிவிவகார அணுகுமுறையுடனும் தொடர்புபட்டது.

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மீதான தடையை நீக்குமாறு கோரி, வெளிநாடுகளில் வழக்குகளும் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றன. அவ்வாறான வழக்குகள் பின்னர் தள்ளுபடி செய்யப்பட்டிருக்கின்றன. இப்போதும் அவ்வாறான முயற்சிகளை மேற்கொள்ளுவோர் உண்டு. இங்கு உணர்வை ஒரு புறமாக வைத்துவிட்டு, விடயங்களை புத்தி பூர்வமாக அணுகுவது தொடர்பில் சிந்திக்க வேண்டும். ஏனெனில் இவ்வாறான விடயங்களுக்காக நாம் செலவிடும் உழைப்பும் நிதியும் வீணாகவே அதிக வாய்ப்புண்டு. ஏனெனில் விடுதலைப் புலிகள் மீதான தடை என்பது, நாடுகளின் வெளிவிவகார நிலைப்பாடு. அத்தோடு, அது அந்த நாடுகளின் பிராந்திய உலகளாவிய நிலைப்பாடுகள் தொடர்பானது.

இவ்வாறான வெளிவிவகார நிலைப்பாடுகளை நமது ஒப்பாரிகளாலோ அல்லது ஆவேசமான உணர்வு நிலையாலோ ஒருபோதும் கையாள முடியாது. இவ்வாறான முயற்சிகளில் எவ்வளவு ஈடுபட்டாலும், நமக்கு தோல்விதான் மிஞ்சும். எனவே இவ்வாறான விடயங்களை ஒரு புறமாக ஒதுக்கிவிட்டு, தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்னைக்கான நியாயத்தை முன்வைத்து, பாதிக்கப்பட்ட மக்களுக்கான நீதி தொடர்ந்தும் மறுக்கப்பட்டுவரும் அரசியல் யதார்த்தத்தை வெளிப்படுத்தும் லொபிகளை, ஜனநாயக பண்புகளுடன் முன்வைப்பதன் ஊடாகவே உலகை அணுகு முடியும். உலகை அதன் எல்லைக்குள், அதன் விதிகளால்தான் அணுக வேண்டும். அவ்வாறில்லாது அதன் முடிவுகளை சவாலுக்குள்ளாக்கும் அணுகுமுறைகளை கையாள முற்பட்டால், ஒரு போதும் அவர்களது பார்வையை நம்மீது திருப்ப முடியாது.

தமிழ் மக்களின் பார்வை விடுதலைப் புலிகள் இயக்கம் ஒரு விடுதலை இயக்கம். பல்லாயிரக்கணக்கான இளைஞர்கள் யுவதிகள் தங்களின் உயிர்களை தியாகம் செய்திருக்கின்றனர். ஆனால், உலகின் பார்வை அப்படியிருக்க வேண்டுமென்று எதிர்பார்த்தால், அது நமது தவறாகும். சர்வதேச சக்திகள் அதன் நலன்களை நிறுத்துப் பார்த்துத்தான் அனைத்தையும் தீர்மானிக்கும். அவர்களது நலன்களுக்கான தராசில் அகப்படாத எவையும் அவர்களை பொறுத்தவரையில் ஒரு விடயமே அல்ல. இந்த அடிப்படையை புரிந்து கொண்டுதான். நாம், நமது அரசியல் நகர்வுகளை மேற்கொள்ள வேண்டும்.

தமிழ் மக்களின் ஜனநாயக உரிமைகள் தொடர்ந்தும் மறுதலிக்கப்படுகின்றன என்பதே தமிழ் அரசியலின் அடிப்படையாக இருக்க வேண்டும். இந்த அடிப்படையில் முன்னெடுக்கப்படும் அரசியல் நகர்வுகள் தொடர்பில் எவரும் குற்றம்சாட்ட முடியாது.

## வெடுக்குநாறிமலை சிவன் ஆலய பூசகரிடம் பயங்கரவாத புலனாய்வு பிரிவு விசாரணை!

வவுனியா, ஜூலை 28

வவுனியா வெடுக்கு நாறி மலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தின் பூசகரான மதிமுகராசாவை பயங்கரவாத புலனாய்வு பிரிவின் வவுனியா அலுவலகத்தினர் விசாரணைக்கு உட்படுத்தியுள்ளனர்.

நேற்றுமுன்தினம் வவுனியாவில் அமைந்துள்ள பயங்கரவாத புலனாய்வுப் பிரிவுக்கு வருமாறு கிராம சேவையாளர் ஊடாக விடுக்கப்பட்ட அழைப்பின் பிரகாரம் மதிமுகராசா பயங்கரவாத புலனாய்வுப் பிரிவின் வவுனியா அலுவலகத்துக்கு சென்றிருந்தார்.

அங்கு கடும் விசாரணைகள் இடம் பெற்றதோடு வெடுக்குநாறிமலை ஆலயம் தொடர்பான பல்வேறு விடயங்களும் அவரிடம் வினவப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த சிவராத்திரி தினத்தில் வெடுக்குநாறி மலை ஆதி லிங்கேஸ்வரர் ஆலயத்தில் பூசை வழிபாட்டின்போது பொலிஸாருக்கும் பொதுமக்களுக்கும் இடையில் பெரும் சர்ச்சை ஏற்பட்ட நிலையில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்டவர்களில் ஆலய பூசகரும் உள்ளடங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## இலங்கை மீனவர் 7 பேர் விடுதலை

சென்னை, ஜூலை 28

சர்வதேச கடல் எல்லையினை மீறி மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த இலங்கை மீனவர்கள் 7 பேர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்

ராமநாதபுரம் நீதிமன்றம் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது

சர்வதேச கடல் எல்லையினை மீறி மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கடந்த மே மாதம் 18 ஆம் திகதி இந்திய கடலோர காவல் படையினரால் இலங்கை மீனவர்கள் 7 பேர் கைது செய்யப்பட்டதுடன் அவர்கள் பயணித்த படகொன்றும் பறிமுதல் செய்யப்பட்டது.

இதனையடுத்து கைது செய்யப்பட்ட மீனவர்கள் மேலதிக விசாரணை நிமித்தம் தூத்துக்குடி மாவட்டம் தருவைகுளம் கரையோர பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இதன்போது குறித்த மீனவர்கள் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டு சென்னை புழல் சிறையில் தடுத்துவைக்கப்பட்டிருந்தனர்.

இந்த நிலையில் குறித்த வழக்கு ராமநாதபுரம் தலைமை குற்றவியல் நீதிமன்ற நீதிபதி மோகன் ராம் முன்னிலையில் நேற்று முன்தினம் விசாரணக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது மத்திய அரசாங்கத்தின் உத்தரவின் பிரகாரம் இலங்கை மீனவர்கள் ஏழு பேரை விடுவித்து நீதவான் உத்தரவிட்டார்.

இதேவேளை, விடுதலை செய்யப்பட்ட மீனவர்கள் 7 பேர் விரைவில் நாட்டுக்கு அனுப்பிவைக்கப்படுவார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## வடக்கின் மாற்றுத் திறனாளிகளுக்கு இசைப் போட்டி






யாழ்ப்பாணம்,ஜூலை 28


கனடா புதிய வாழ்வு நிறுவனத்தின் ஆதரவுடன் , நல்லூர் சாவிகா சங்கீத அறிவாலயம் நடத்திய வடக்கின் மாற்றுத்திறனாளிகளுக்கான இசைப் போட்டி நேற்று காலை நல்லூர் மங்கயர்க்கரசி வித்தியாலயத்தில் சாவிகா சங்கீத அறிவாலய இயக்குநர் ஸகிஸ்ணா ரவிச்சந்திரன் தலைமையில் இடம்பெற்றது

இந்நிகழ்வில் தவத்திரு வேலன் சுவாமிகள், யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரியின் முதலாவது பீடாதிபதி முனைவர் கமலநாதன், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசன், ஆனைப்பந்தி மெ.மி.த.க பாடசாலை அதிபர் ஜெகானந்தம் புதிய வாழ்வு நிறுவன இணைப்பாளர் ஆகியோர் விருந்தினர்களாக கலந்து கொண்டனர்

நிகழ்வில் நடுவர்களாக சாரங்கம் நுண்கலை மன்ற இயக்குநர் வாசஸ்பதி ராஜ்ந்திரன், ஓய்வு பெற்ற விரிவுரையாளர் விக்னேஸ்வரி நரேந்திரா, விரிவுரையாளர் நீ. பரந்தாமன், இசைக்கலைஞர்களான ர. சுரசாகித்யன் , நிரோஷன் ஆகியோர் கலந்து கொண்டனர்

நூற்றுக்கும் மேற்பட்ட மாற்றுவலுவுடைய பிள்ளைகள் போட்டிகளில் கலந்து கொண்டனர். (அ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்களுக்குத் தேவை சுயசார்பு

பாறப்புறத் இராதாகிருஷ்ணன்



இன்று பெண்கள் அனைத்துத் துறைகளிலும் தடம் பதித்து, வேலைவாய்ப்பு பெற்று சாதித்து வருவதோடு, சமூகத்தில் பல்வேறு வகைகளில் பங்கெடுத்து தனித்துவமாக விளங்குகிறார்கள். தங்களின் அறிவாற்றல் மூலம் சமூகத்தையும், நாட்டையும் வளர்ச்சிப் பாதையில் அழைத்துச் செல்கிறார்கள். நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும் செழுமைக்கும் பெண்களின் பங்கு அளப்பரியது. பெண்களின் பொருளாதார முன்னேற்றத்தால் நாடும், வீடும் ஒரு சேர நலம் பெறுகின்றன.

பொதுவாகவே, சேமிக்கும் பழக்கம் பெண்களுக்கு மிக வும் அதிகம். நிதி நிலைமையை சிறப்பாக கையாள்வதன் மூலம் ஓரளவு செலவுகளைக் கட்டுப்படுத்தி விடுகிறார்கள். இயற் கையாகவே சில பெண்களிடம் பணத்தை முறையாகவும் சிக்கனமாக வும் கையாளுவதில் திறன் உள்ளது. விரலுக்குத் தகுந்த வீக்கம்தான் இருக்க வேண்டும் என்பதை நன்கு உணர்ந்தவர்கள் நம் நாட்டுப் பெண்கள். கணவரின் வருமானம் அறிந்து, அதற்கேற் றப்படி வீட்டின் செலவுகளை மேற் கொண்டு, தனக்கென தனியே எதையும் எதிர் பார்க்காமல், வீண் செலவுகளைக் குறைத்து, சிக்கனத்தைக் கடைப் பிடித்து குடும்பத்தைக் காப்பாற்றி வருகிறார்கள்.

அக்காலத்தில் பெண்கள் அஞ்சறை பெட்டியில் சிறுகச் சிறுகச் சேமித்து, குடும்பத்தில் ஏற்படும் திடீர் செலவுகளுக்கும், தங்களின் பிள்ளைகளின் கல்விச் செலவுகளுக்கும், திருமணத்திற்கும் கூட உதவினார்கள். கொரோனா தீநுண்மி பிடியில் உலகமே நிதி நெருக்கடியில் சிக்கித் தவித்தபோது, கணவர்கள் வேலையிழந்து தவிக்கையில், சேமிப்புப் பழக்கத்தை மேற்கொண்டிருந்த குடும்பத் தலைவிகள் தங்கள் குடும்பச் செலவுகளை லாகவமாகக் கையாண்டு தங்கள் குடும்பத்தைக் காப்பாற்றினர்.

நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் பெண்களின் பங்களிப்பு கணிசமாக உயர்ந்து வருகிறது. இன்று ஆங்காங்கே பெண்கள், தங்களின் முன்னேற்றத்திற்காகவும், தனிநபர் வருமானம் பெருக்கும் நோக்கத்திலும் தொடங்கப்பட்ட சுயஉதவிக் குழுக்கள் மூலம் சுயமாக சிறு சிறு கடைகளை வைத்தோ, சிறு தொழில்களைத் தொடங்கியோ தங்களையும், தங்கள் குடும்பத்தையும் காப்பாற்றி வருகிறார்கள். சுயஉதவிக் குழுக்கள் தொடங்கப்பட்டதன் நோக்கமே பெண்கள் சுயசார்பு உடையவர்களாக இருக்க வேண்டும் என்பதற்காகத்தான்.

தங்களுக்கு ஏற்படும் பணத் தேவைகளுக்கு பிறரைச் சார்ந்திராமல், சரியான நேரத்தில் தாமாகவே தன் அறிவாலும், ஆற்றலாலும் சரி செய்து கொள்ளும் சுயசார்புத் தன்மை பெண்களிடையே வளர வேண்டும். இது மனதுக்கு புத்துணர்வை அளித்து, முழுமையான தன்னம்பிக்கையுடன், வாழ்க்கையில் முன்னேறுவதற்குத் தேவையான செயல்களில் ஈடுபட உந்து சக்தியாக அமையும்.

தினசரி தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குக் கூட பிறரின் உதவிக்காக காத்திருப்பது பெண்களிடையே தன்னம்பிக்கையைக் குறைக்கும். பெண்கள் வேலைக்குச் செல்லாத குடும்பங்களில், கணவனுக்கு வேலை இல்லாத நிலை ஏற்பட்டால், அக்குடும்பமே வறுமை நிலைக்குத் தள்ளப்படுகிறது. கடன் வாங்கி நாட்களைத் தள்ளினாலும், கடன் சுமை அதிகமாகிப் பின்னர் விபரீத முடிவு எடுக்கும் நிலைக்கு வந்துவிடுகிறது.

பெண்களை மையமாகக் கொண்ட குடும்ப அமைப்பே நம் நாட்டின் சிறப்பு. சமூகக் கட்டமைப்பை உயர்த்த வேண்டுமெனில், ஒவ்வொரு குடும்பத்தின் முதுகெலும்பாக செயல்படக் கூடிய குடும்பத் தலைவிகளை தடையற்ற வளர்ச்சிப் பாதையில் அழைத்துச் செல்வது மிகவும் அவசியமாகும்.

பெண்களின் முன்னேற்றம் என்பது குடும்ப முன்னேற்றம் என்பதோடு மட்டுமல்லாமல், சமூகத்தின், நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்கும் அடித்தளமாக அமைகிறது. சமூக மற்றும் குடும்பப் புறக்கணிப்பு இருந்தபோதிலும் பெண்கள் தங்கள் நிதி சுதந்திரத்திற்கான உரிமையை பெற வேண்டும். நிதி சுதந்திரமானது பெண் களின் தன்னம்பிக்கையை அதிகரிக்கி றது.

பொருளாதாரத்தில் நாம் பிறரைச் சார்ந்திருக்கக் கூடாது என்ற நிலை இக்காலத்தில் பெண் களிடையே மேலோங்கி வருவது வரவேற்கத்தக்கது.

சொந்தக் கால்களில் நிற்க, பயிற்சி பல கல்வி பெற்று, அனைத்துத் திறன்களையும் பெற வேண்டும். கல்விப் பயணத்தின்போது இடைநிற்றல் கூடவே கூடாது. பெண்கள் நன்றாகப் படித்து வாழ்க்கையில் முன்னேற பெற்றோர்கள் ஊக்கமளிக்க வேண்டும். தனக்கு வேண்டிய பணத் தேவைகளுக்கு, யாரையும் சார்ந்திராமல், சுயசார்பு உடையவர்களாகி பெண்கள் வாழ்வில் உயர வேண்டுமானால் கல்வி மற்றும் வேலைவாய்ப்புகளில் பெண்கள் தனி அக்கறை செலுத்த வேண்டும். ●

## இந்தவார ராசிபலன் 28.07.2024 - 04.08.2024

ஞாயிற்றுக்கிழமை
குரோதி வருடம் - ஆடி 12
நல்ல நேரம்: 7.31 - 09.00 ராகு காலம் : 4.30 - 06.00 திதி : அஷ்டமி

### மேஷம்
[ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

இந்த வாரம் எதிர்பாராத விதமாக வீட்டுக்கு செலவுகள் அதிகரிக்கும். பின்னர், திருமகளின் கருணையால் ஓரளவுக்குப் பொருளாதார முன்னேற்றங்கள் சிறப்பாக அமைந்து மனமகிழ்ச்சி தரும். நவீன வசதிகளுடன் கூடிய புதிய இருசக்கர வாகனம் வாங்க முயற்சி எடுப்பீர்கள். பல வழிகளில் உங்களை நீங்கள் அழகுபடுத்திக் கொள்ளும் வாய்ப்புகள் ஏற்படும். பணிபுரியும் பெண்களுக்குத் உங்கள் குடும்பத்தையும், இடமாற்றம் பெறுவீர்கள்.

### ரிஷபம்
[ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

இந்த வாரம் உங்கள் உற்றார் உறவினர் ஆகியோர், உங்கள் அசாத்திய முன்னேற்றம் கண்டு பெருமிதம் கொள்வர். எல்லாக் காரியங்களும் சிறப்புற, வெற்றிகரமாக நடக்கும். அரசு மூலம் வரவேண்டிய அனைத்து பண நிலுவைகள் அதிகாரிகள் பலத்த சிபாரிசின் மூலம் கிடைத்துவிடும். வியாபாரத்தில் அதிக இலாபங்கள் உண்டாகும். நீங்கள் எதிர்பார்த்த இடங்களில் இருந்து பணவரவு தாராளமாக இருக்கும். அரசாங்கத்திடமிருந்து அனுகூலமான செய்திகள், தகவல்கள் வந்து சேரும். விருந்து உபசாரங்களில் கலந்து கொள்ளும் நிலை உருவாகும்.

### மிதுனம்
[ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

இந்த வாரம் பிறர் உங்களை புகழ வேண்டும் என்பதற்காக, கடினமான காரியங்களையும் இழுத்துப் போட்டுச் செய்வார்கள். அதேபோல் பணியிடத்தில் அதிகாரிகள் பாராட்டைப் பெறுவார்கள். காவல்துறை, இராணுவம் போன்ற சீருடைப் பணியாளர்கள் சீரிய சேவைக்கான பதக்கங்கள், பாராட்டுக்கள் கிடைக்கும். விபத்துக்களை தவிர்க்க வாகனங்களை இயக்கும் போது அதிக கவனத்துடனும், எச்சரிக்கையுடனும் இயக்கவும். மாணவர்கள் புதிய கல்லூரிகளில் சேர்ந்து, கல்வியில் சிறப்புற்று,

### கடகம்
[ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

இந்த வாரம் மனதில் புதிய வீடு, மனை ஆகியவை வாங்கும் எண்ணம் மேலோங்கும். மனோதைரியம் ஓங்கும். பல வழிகளிலும் தனவரவு அதிகரிக்கும். சிலருக்கு நல்ல குரு வாய்க்கப்பெற்று ஆன்மீக வழியில் அறிவுத் தெளிவு ஏற்படும். தாய்வழி உறவுகளால் எதிர்பார்த்த ஆதாயம் இருக்கும். பெரியவர்கள் ஆசியும், மேலதிகாரிகளின் ஆதரவு, புதிய தொடர்புகள் நன்மையும் ஏற்படும். சிலருக்குப் புதிய இட மாற்றங்கள் ஏற்படலாம்.

### சிம்மம்
[ மகம், பூரம், உத்திரம் 1 ]

இந்த வாரம் சொத்துக்கள் சேரும், தான தர்மத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். பிள்ளைகள் மூலம் கஷ்டமும், சுகமும் மாறி மாறி வரும். கலைத் துறையில் உள்ளவர்களுக்கு புதிய ஒப்பந்தங்கள் ஏற்படும். உயர்ரக வாகனங்கள் வாங்கும் யோகம் அமையும். போட்டி பந்தயங்களில் வெற்றி உண்டு. புத்தக வெளியீட்டாளர்கள், எழுத்தாளர்கள் ஆகியோருக்கு முன்னேற்றம் இருக்கும். அரசுக் கடன் உதவியுடன் வெற்றி பெறும்.

### கன்னி
[ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

இந்த வாரம் கேளிக்கை, பிறந்த நாள் விருந்துகள் எனச் செலவுகளோடு, மகிழ்ச்சி பொங்கும் வாரமாக அமையும். அரசு மரியாதை கிட்டும். உயர் பதவிகள் கிடைக்கும். பல புண்ணியத் தலங்களுக்கு பயணம் செய்யும் வாய்ப்பு கிட்டும். அரசுப் பணியில் உள்ளவர்களுக்கு உயர் பதவிகளும் அதனால் வருவாய் பெருக்கமும் ஏற்படும். வியாபார சம்பந்தமான வெளிநாட்டு பயணங்களும், அதனால் ஆதாயங்களும் ஏற்பட்ட, எதிர்பாராத தன வரவுகள் கைக்கு வந்து சேரும். அரசாங்கம் மூலம் எதிர்பார்த்த காரியங்கள் அனைத்தும் வெற்றிகரமாக முடியும்.

### துலாம்
[ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

இந்த வாரம் மணவாழ்க்கை மகிழ்ச்சிகரமானதாக இருக்கும். புதிய தொடர்புகள் மூலம் நன்மைகள் ஏற்படும். போட்டி, பந்தயங்களில் வெற்றி கிடைக்கும். கல்வியில் தேர்ச்சி ஏற்பட கடின உழைப்பு தேவை. விரிவாக்கங்கள் செய்வதால் தொழிலில் நல்ல வளர்ச்சி ஏற்படும். அண்டை வீட்டார், நண்பர்கள் மற்றும் சகோதரரால் உங்கள் பிரச்சனைகளுக்கு ஒரு முடிவு வரும். தீயவர்கள் தொடர்பால் சஞ்சலம் ஏற்பட வாய்ப்புண்டு.

### விருச்சிகம்
[ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

இந்த வாரம் தன வருவாய் திருப்திகரமாக இருக்கும். செல்வத்திற்கு அதிபதியான அலைமகளே உங்களைப் பார்த்துச் சிரித்தால் நீங்கள் மகிழ மாட்டீர்களா ? விவசாயிகளுக்கு விளைச்சல் அதிகரித்து, இலாபமும் அதிகரிக்கும். அரசு சிபாரிசால் பல நாட்கள் தள்ளிப் போன, அதிகாரம் மிக்க பதவிக்கு பதவி உயர்வு கிடைக்கும். உங்கள் சிறந்த பணிக்காக மேலதிகாரிகளால் மெச்சப் படுவீர்கள். கவலை வேண்டாம்.

### தனுசு
[ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

இந்த வாரம் மனதில் தெய்வ பக்தி கூடும். நினைத்ததை நினைத்தபடியே சாதிக்கும் திறன் அதிகரிக்கும். நல் ஆரோக்கியமும், புதுத் தெம்பும், புத்தொளியும் ஏற்படும். பணக்கார மனைவியும் அமைவாள். அழகான, எழில் நிறைந்த வீடும் கிடைக்கும். புண்ணியத் தலயாத்திரைகள் ஏற்படும். கௌரவம், பட்டம், பதவி ஆகியவை தேடிவரும். கலைஞர்களுக்குப் புதிய ஒப்பந்தங்களால் வருமானம் அதிகரிப்பதால் உள்ளம் மகிழும்.

### மகரம்
[ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

இந்த வாரம் தொலை தூரத்திலிருந்து நற்செய்திகள் வந்து மகிழ்ச்சி அளிக்கும். உதவிகரமான புதிய நண்பர்கள் கிடைப்பர். அனைத்துக் காரியங்களிலும் சுறுசுறுப்பாகச் செயல்படுவீர்கள். புதுத்தெம்பு, உற்சாகமும் கூடும். வாகன வசதிகள் மேம்படும். எழுத்துத் தொழிலில் முன்னேற்றம் ஏற்படும். சிலருக்குக் கௌரவப் பட்டங்கள் கிடைக்கும். பயணங்களில் எச்சரிக்கை தேவை. ஆரோக்கியக் குறைவு ஏற்படலாம். புத்தி தெளிவு மற்றும் செயல்திறன் அதிகரிக்கும்.

### கும்பம்
[ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

இந்த வாரம் எதிர்பாராத விதமாக பல திசைகளில் இருந்தும் பணம் வரலாம். உங்கள் வாக்கு வன்மை மற்றும் சிறந்த பொதுசனத் தொடர்பு காரணமாக உபரி வருமானம் கிடைக்கும். தானிய உற்பத்தி பெருகி விவசாயிகளுக்குத் தனவரவு திருப்தி அளிக்கும் வகையில் இருக்கும். நண்பர்கள் மற்றும் உறவினர்களுடன் வீணான வாக்குவாதத்தில் ஈடுபட்டு இருப்பது நல்லது. அதுபோல் உங்கள் எதிரிகளிடம் இருந்து விலகி இருப்பது நல்லது. உங்கள் நற்குணங்கள் அனைவரின் பாராட்டையும் பெறும்.

### மீனம்
[ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

இந்த வாரம் மனைவிமார்கள் தங்கள் கணவரிடம் இருந்து உண்மைக் காதலையும், உன்னத அன்பையும் பெறுவர். சிலருக்கு அனைத்து வசதிகளுடன் கூடிய அழகிய இல்லம் அமையும். அரசுப் பணியாளர்களுக்கு அனுகூலமான வாரம். அவர்களுக்கு உயர் அதிகாரிகளின் ஆதரவு இருப்பதால், புதிய பதவிகள் தேடிவரும். பணிபுரியும் பெண்கள் தங்களுக்கு விருப்பமான இடத்திற்கு இடமாற்றம் பெற முயற்சிப்பர். பங்குச் சந்தையில் ஆலோசித்து முதலீடு செய்வது இழப்பைக் குறைக்கும். தொழிலில் உங்கள் கூட்டாளிகளின் கடின உழைப்பு மெச்சத் தக்கதாகவும், திருப்தி கரமாகவும் இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் தீர்வை இன்னமும் காணமுடியாமல் இருப்பது கறுப்பு ஜூலையை விடவும் பெரிய வெட்கக்கேடு!



♦ வீரகத்தி தனபாலசிங்கம்

முதுபெரும் தமிழ் அரசியல் தலைவர் இராஜவரோதயம் சம்பந்தன் மறைந்த மறுநாள் தமிழ்நாட்டின் இடதுசாரி அரசியல் தலைவர் ஒருவர் தொடர்புகொண்டு இலங்கை தமிழ் அரசியலில் காலஞ்சென்ற தலைவர் வகித்து குறிப்பிடத்தக்க பாத்திரம் என்னவென்று கேட்டார். 1983 கறுப்பு ஜூலைக்கு பிறகு இந்திய - இலங்கை சமாதான உடன்படிக்கை கைச்சாத்திடுவதற்கு வழிவகுத்த பேச்சுவார்த்தைகளில் தலைவர்கள் அமிர்தலிங்கம், சிவசிதம்பரம் ஆகியோருடன் சேர்ந்து சம்பந்தன் வழங்கிய பங்களிப்புகளை நினைவுபடுத்தி அவருக்கு நான் கூறத் தொடங்கினேன்.

உடனடியாகவே இடைமறித்த அவர் 1983 ஜூலையில் என்ன நடந்தது என்று கேட்டார். நாடு முழுவதும் தமிழ் மக்களுக்கு எதிராக கொடூரமான இனவன்முறை கட்டவிழ்த்துவிடப்பட்டதையும் அதுவே பிறகு சுமார் மூன்று தசாப்தகால உள்நாட்டுப்போருக்கு வழிவகுத்தது என்பதையும் அயலில் தமிழ்நாட்டில் இருக்கும் இடதுசாரி அரசியல்வாதி ஒருவர் அறியாதவராக இருக்கிறாரே என்று எனக்கு பெரும் ஏமாற்றமாகப் போய்விட்டது.

நாற்பது வருடங்களுக்கு முன்னர் இலங்கையில் இடம்பெற்ற நிகழ்வுகளை அறிவதற்கு வாய்ப்பு இருந்திருக்காத வயதைக் கொண்டவரும் அல்ல அவர். தமிழ்நாட்டில் நான்கு தசாப்தங்களுக்கும் அதிகமான காலமாக பல முகாம்களில் இலங்கை தமிழ் அகதிகள் தங்கியிருப்பதற்கான காரணத்தையாவது இந்த மனிதர் அறிந்திருக்கவில்லையா என்று எனக்கு ஆச்சரியமாக இருந்தது.

சம்பந்தனின் மரணமும் தமிழ்நாட்டு அரசியல்வாதியின் கேள்வியும் கறுப்பு ஜூலையின் 41 வது வருட நிறைவுக்கு மூன்று வாரங்கள் முன்னதாக வந்தது தற்செயலான நிகழ்வு என்றாலும் இலங்கையில் இனங்களுக்கு இடையிலான உறவுகளைப் பொறுத்தவரை ஒரு எல்லைக்கோடாக அமைந்த அந்த இனவன்செயல் பற்றி எழுதுவதற்கு எனக்கு தவிர்க்கமுடியாமல் உந்துதலைக் கொடுத்தது.

பிரபல்யமான பத்திரிகை ஆசிரியரும் சர்வதேச புகழ் வாய்ந்த அரசியல் ஆய்வாளருமான காலஞ்சென்ற மேர்வின் டி சில்வாவே தனது 'லங்கா கார்டியன்' சஞ்சிகையில் அந்த கொடுமையான ஜூலையை கறுப்பு ஜூலை (டீடயஉம துரடல) என்று முதன்முதலாக வர்ணித்தார். ஏற்கெனவே குறிப்பிட்டதைப் போன்று 41 வருடங்களுக்கு முன்னர் இந்த வாரத்தில் இலங்கை முழுவதும் தமிழ் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட வன்முறைகள் நாட்டின் அரசியல் வரலாற்றிலும் சிங்கள பெரும்பான்மைச் சமூகத்துக்கும் பெரிய சிறுபான்மைச் சமூகமான தமிழர்களுக்கும் இடையிலான உறவுகளிலும் ஒரு எல்லைக்கோடாக மாறியது.

ஒரு வாரத்துக்கும் அதிகமாக நீடித்த அந்த வன்முறைகளில் மூவாயிரத்துக்கும் அதிகமான தமிழர்கள் கொல்லப்பட்டதாக மதிப்பிடப்பட்ட அதேவேளை சொத்துக்கள் அழிவு குறித்து இதுவரையில் உகந்த மதிப்பீடு செய்யப்படவில்லை. ஆயிரக்கணக்கான தமிழர்கள் தங்களது வீடுகளையும் உடைமைகளையும் இழந்தார்கள். சிங்களவர்கள் மத்தியில் சமத்துவமான குடிமக்களாக அமைதியாக வாழக்கூடியதாக இருக்கும் என்ற நம்பிக்கையை தமிழர்கள் இழந்தார்கள்.

ஆயிரக்கணக்கில் தமிழர்கள் அகதிகளாக நாட்டிலிருந்து வெளியேறினார்கள். மேற்கு ஐரோப்பா, வட அமெரிக்கா மற்றும் அவுஸ்திரேலியாவுக்கு பலர் குடிபெயர்ந்தார்கள். இந்த வெளியேற்றம் காரணமாக ஒரு காலத்தில் உலகம் பூராவும் அலைந்து திரிந்த யூதர்களுக்கு ஒப்பானவர்களாக இலங்கை தமிழர்கள் மாறினார்கள். இறுதியில் இன்று அவர்கள் உலகில் அரசியல் ரீதியில் செல்வாக்குமிக்க புலம்பெயர் சமூகங்களில் ஒரு பிரிவினராக விளங்குகிறார்கள். அவர்களை ' நவீன யூதர்கள்" என்று அழைப்பது ஒன்றும் மிகையில்லை.

ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்தன தலைமையிலான ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கம் தமிழ் மக்களுக்கு எதிராக கட்டவிழ்த்துவிட்ட வன்முறை இலங்கை அரசியலின் போக்கையே மாற்றியது. யாழ்ப்பாணத்தின் திருநெல்வேலியில் 1983 ஜூலை 22 ஆம் திகதி இரவு விடுதலை புலிகள் நடத்திய கெரில்லா தாக்குதலில் இலங்கை இராணுவத்தின் ஒரு ரோந்துப்பிரிவைச் சேர்ந்த 13 படையினர் கொல்லப்பட்டார்கள். இந்த சம்பவம் தமிழர்களுக்கு எதிராக அரசாங்கத்திற்குள் இருந்த இனவெறிச் சக்திகள் ஏற்கெனவே திட்டமிட்டு வைத்திருந்த வன்முறையை கட்டவிழ்த்து விடுவதற்கு வசதியான சாட்டாகப் போய்விட்டது. அரசு இயந்திரம் வெளிப்படையாகவே வன்முறையாளர்களுக்கு உதவியது.




கறுப்பு ஜூலைக்கு பிறகு இனப்பிரச்சினையைக் கையாள முதன் முதலாக அனுப்பிவைக்கப்பட்ட தூதுவர் கோபாலசுவாமி பார்த்தசாரதி அதிகாரப் பரவலாக்கத்தை ஏற்றுக்கொள்ளவேண்டிய அவசியத்தை ஜே.ஆருக்கு உணர்த்தி அவரை நம்பவைப்பதற்கு பெரிய கஷ்டப்படவேண்டியிருந்ததாக கூறினார்.

வன்முறைக் கும்பல்களை கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்கவில்லை. அரச தொலைக்காட்சியில் தோன்றி வன்முறையை நிறுத்துமாறு வேண்டுகோள் விடுப்பதற்கு ஜனாதிபதி ஜெயவர்தனவுக்கு ஒரு வாரகாலம் எடுத்தது. இனவாத அட்டூழியத்தில் முன்னென்றும் இல்லாத அளவுக்கு உயிர்களையும் உடைகைளையும் இழந்து மோசமாகப் பாதிக்கப்பட்ட தமிழ்மக்களுக்கு ஆறுதலாக ஒரு வார்த்தையைக் கூட அவர் தொலைக்காட்சியில் கூறவில்லை. மாறாக, தமிழ் அரசியல் தலைவர்களின் நாட்டுப்பிரிவினைக் கோரிக்கைக்கு எதிரான சிங்கள மக்களின் இயல்பான பிரதிபலிப்பே வன்முறைகள் என்று வெட்கக்கேடான முறையில் ஜெயவர்தன பிரகடனம் செய்தார்.

உயிரிழப்புகளுக்கும் சொத்து அழிவுகளுக்கும் அப்பால், வன்முறைகளின் விளைவாக தமிழ் மக்கள் அனுபவித்த வேதனையும் உணர்வதிர்ச்சியும் அளவிடமுடியாதவையும் சமாளிக்க முடியாதவையுமாகும். சுமார் மூன்று தசாப்த காலமாக நீடித்த உள்நாட்டுப் போரின்போது தமிழ் மக்கள் சந்தித்த உயிரிழப்புகளும் சொத்து அழிவுகளும் கறுப்பு ஜூலை அவலங்களை விடவும் மாபேரளவு அதிகமானவை என்றபோதிலும், ஆயுதமேந்திய தமிழ்த் தீவிரவாத இயக்கங்கள் தோன்றுவதற்கும் அதையடுத்து இனப்போர் மூளுவதற்கும் வழிவகுத்த காரணத்தால் கறுப்பு ஜூலைக்கு தமிழ் அரசியலின் வரலாற்றில் ஒரு பிரத்தியேகமான எதிர்மறை அடையாளம் இருக்கிறது.

ஜெயவர்தன அரசாங்கம் மாத்திரமல்ல, கறுப்பு ஜூலைக்கு பிறகு பதவிக்கு வந்த மற்றைய சகல அரசாங்கங்களும் கூட தேசிய இனப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலமான அரசியல் இணக்கத் தீர்வொன்றைக் காண்பது குறித்து பேசிக்கொண்டே இராணுவத் தீர்வொன்றைக் காண்பதில் உன்னிப்பான அக்கறை காட்டின. வெறுமனே சர்வதேச சமூகத்தை ஏமாற்றுவதற்காக சகல ஜனாதிபதிகளும் அரசியல் தீர்வைப்பற்றி பேசிக்கொண்டிருந்த போதிலும் அவர்கள் உண்மையில் இராணுவத் தீர்விலேயே அக்கறை காட்டினார்கள் என்பதில் சந்தேகம் இல்லை.

சிக்கலான நீண்டகால இனப்பிரச்னைக்கு நடைமுறைச் சாத்தியமான அரசியல் தீர்வொன்றைக் காண்பதற்கு உதவுவதற்கு பதிலாக, இந்தியாவும் சர்வதேச சமூகத்தின் ஏனைய வல்லாதிக்க நாடுகளும் அவற்றின் அணுகுமுறைகள் மற்றும் செயற்பாடுகள் மூலமாக இராணுவத் தீர்வை நோக்கிய நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்படுவதையே உறுதிசெய்தன. இறுதியில் புவிசார் அரசியலில் ஏற்பட்ட பாரிய மாற்றங்கள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் அரசாங்கம் குடிமக்களுக்கு ஏறபடக்கூடிய அவலங்களை பொருட்படுத்தாமல் 2009 மே மாதத்தில் வன்னியில் விடுதலை புலிகளை தோற்கடிப்பதற்கு வசதியாக அமைந்தன.



கறுப்பு ஜூலைக்கு பிறகு 41 வருடங்களும் உள்நாட்டுப் போர் முடிவுக்கு வந்து பதினைந்து வருடங்களும் கடந்துவிட்ட பின்புலத்தில் தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வைக் காண்பதற்கான முயற்சிகளின் இலட்சணத்தை நோக்கும்போது பெரும் வேதனையாகவும் ஏமாற்றமாகவும் இருக்கிறது. தற்போது ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னதாக மாறிவருகின்ற அரசியல் நிலைவரங்களை அடிப்படையாகக் கொண்டு பார்க்கும்போது இனப்பிரச்சினை தொடர்பில் நம்பிக்கை தரக்கூடிய நிகழ்வுப்போக்கை எதிர்பார்க்க முடியவில்லை.

கறுப்பு ஜூலைக்கு பிறகு இலங்கை இனநெருக்கடியில் தலையீடு செய்வதற்கு நிர்ப்பந்திக்கப்பட்ட எமது பெரிய அயல்நாடான இந்தியா போரில் ஈடுபட்ட தரப்புக்களிடையே மத்தியஸ்தம் வகிப்பதற்கு அதன் நல்லெண்ணத்தை பயன்படுத்த முன்வந்தது. அது தொடர்பிலான நிகழ்வுகளை இன்றைய இளம் சந்ததியினரின் நன்மைக்காக நினைவுபடுத்த வேண்டியது அவசியமாகிறது. இந்தியாவின் தலையீடு இரு நாடுகளுக்கும் இடையிலான ஒரு மைல்கல்லாக அமைந்தது. இறுதியில் அது பிரதமர் ராஜீவ் காந்தியும் ஜனாதிபதி ஜெயவர்தனவும் கொழும்பில் 1987 ஜூலை 29 ஆம் திகதி இந்திய - இலங்கை சமாதான உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்கு வழிவகுத்தது.

உடன்படிக்கையை அடுத்து மாகாணசபைகள் முறையை அறிமுகப்படுத்த இலங்கை அரசியலமைப்புக்கான 13 வது திருத்தம் பாராளுமன்றத்தில் (முன்னாள் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்க தலைமையிலான படுமோசமான எதிர்ப்புக்கு மத்தியில்) பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. இந்த நிகழ்வுகள் 1980 களின் பிற்பகுதியில் இரண்டாவது ஜே.வி.பி. கிளர்ச்சிக்கு ஊக்கமளித்தன.

அந்த காலப்பகுதி இலங்கையின் அண்மைய வரலாற்றில் பயங்கரமான நிகழ்வுகள் நிறைந்த ஒன்றாக இருந்தது. உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட தினம் ஜனாதிபதி மாளிகை முன்பாக அணிவகுப்பு மரியாதையின்போது கடற்படை வீரர் ஒருவர் ராஜீவ் காந்தியை துப்பாக்கி பின்பக்கத்தினால் தாக்கி கொலைசெய்ய முயற்சித்தார். 1987 ஆகஸ்ட் 18 ஆம் திகதி பாராளுமன்ற கட்டிடத் தொகுதியில் நடைபெற்ற ஆளும் ஐக்கிய தேசிய கட்சியின் பாராளுமன்றக்குழு கூட்டத்தில் கிரனேட் வீசி ஜனாதிபதி ஜெயவர்தனவையும் அரசாங்கத்தின் முக்கிய தலைவர்களையும் கொலைசெய்வதற்கு முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

இந்த சம்பவங்களும் உடன்படிக்கையை தொடர்ந்து தென்னிலங்கையில் இடம்பெற்ற படுமோசமான வன்முறைகளும் சொத்து அழிப்பும் சிங்கள மக்கள் மத்தியில் ஆழமான எதிர்ப்புணர்வுக்கு சான்றுகளாக அமைந்தன. இனப்பிளவின் இருமருங்கிலும் உடன்படிக்கையை ஆதரித்த பல அரசியல்வாதிகள் தமிழ்த் தீவிரவாதிகளினாலும் தென்னிலங்கை தீவிரவாதிகளினாலும் கொலை செய்யப்பட்டனர்.

ஆனால், அரசியல் அடிப்படையில் நோக்கும்போது உடன்படிக்கை விரும்பத்தக்க பல மாற்றங்களை ஏற்படுத்தியது. ஜனாதிபதி ஜெயவர்தன மிகவும் கடுமையான கருத்துக்களைக் கொண்டிருந்த பல பிரச்சினைகளில் தனது நிலைப்பாட்டை மாற்றிக்கொண்டார்.

ஆங்கிலத்துக்கு பதிலாக சிங்களத்தையும் தமிழையும் அரசகரும மொழியாக்கவேண்டும் என்று பிரேரணையை எஸ்.டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்க 1944 ஆம் ஆண்டில் இரண்டாவது அரசாங்க சபையில் கொண்டு வந்தபோது அதை எதிர்த்து வாக்களித்து சிங்களம் மட்டுமே அரசகரும மொழியாக்கப்படவேண்டும் என்று கோரியவர். 1957 பண்டாரநாயக்க - செல்வநாயகம் உடன்படிக்கைக்கு எதிராக கொழும்பில் இருந்து கண்டிக்கு பாதயாத்திரை மேற்கொண்டு அது கிழித்தெறியப்படுவதற்கு உதவியவர் இப்போது அரசகரும மொழிகள் என்ற அந்தஸ்தை சிங்களத்துக்கு நிகராக தமிழுக்கும் ஆங்கிலத்துக்கும் வழங்கும் உடன்படிக்கையில் கைச்சாத்திட்டார்.

(14ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதி தேர்தல் தேதி அறிவிப்பு: ஜனாதிபதி தேர்வு செய்யப்படுவது எப்படி?

ரஞ்சன் அருண் பிரசாத்

இலங்கையின் 9வது நிறைவேற்று அதிகார ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான தேர்தல் தேதியை தேர்தல் ஆணைக்குழு ஜூலை 26, அதிகாரப்பூர்வமாக அறிவித்தது.

இதன்படி, இலங்கையின் அடுத்த ஜனாதிபதித் தேர்தல் எதிர்வரும் செப்டம்பர் மாதம் 21ஆம் தேதி சனிக்கிழமை நடத்தப்படவுள்ளதாக தேர்தல் ஆணைக்குழுவால் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலுக்காகப் போட்டியிடும் வேட்பாளர்கள், தமது வேட்பு மனுக்களை எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 15ஆம் தேதி, தேர்தல் ஆணைக்குழுவில் சமர்ப்பிக்க முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலுக்கான கட்டுப்பணம் செலுத்தும் நடவடிக்கை ஜூலை 26 முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

தேர்தல் தேதி அறிவிக்கப்பட்ட அன்றைய தினம் காலை 8.30 முதல், வேட்பு மனுத் தாக்கல் செய்யும் ஆகஸ்ட் மாதம் 15ஆம் தேதிக்கு முன்னைய நாளான 14ஆம் தேதி நண்பகல் 12 மணி வரை கட்டுப்பணம் செலுத்த முடியும் என தேர்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

ஏற்றுக்கொள்ளப்பட்ட அரசியல் கட்சியொன்றின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர் ஒருவர் கட்டுப்பணமாக 50,000 இலங்கை ரூபாவையும், வேட்பாளர் வேறெதும் அரசியல் கட்சியொன்றினால் அல்லது வாக்காளர் ஒருவரால் பெயர் குறித்து நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர் ஒருவர் கட்டுப்பணமாக 75,000 இலங்கை ரூபாவையும் செலுத்த வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

### செப்டம்பர் 21 நாடு முழுவதும் வாக்குப் பதிவு

இலங்கையில் நாடு முழுவதும் செப்டம்பர் மாதம் 21ஆம் தேதி காலை 7 மணி முதல் மாலை 4 மணி வரை ஜனாதிபதித் தேர்தலுக்கான வாக்குபதிவு இடம்பெறும்.

ஜனாதிபதித் தேர்தலில் அரசு ஊழியர்கள், தேர்தல் தினத்திற்கு முன்னதாகவே தபால் மூலம் வாக்குகளை அளிப்பார்கள்.

இந்த நிலையில், தேர்தல் நடைபெறும் அன்றைய தினம் வாக்குப் பதிவுகள் நிறைவடைந்ததன் பின்னர், வாக்குச் சீட்டுகள் வாக்கெண்ணும் மத்திய நிலையங்களுக்குக் கடும் பாதுகாப்புக்கு மத்தியில் எடுத்துச் செல்லப்படும்.

இவ்வாறு வாக்கெண்ணும் மத்திய நிலையங்களுக்குக் கொண்டு செல்லப்படும் வாக்குப் பெட்டிகள், உரிய நடைமுறைகளின் கீழ் உடைக்கப்பட்டு, அன்றைய தினமே வாக்கெண்ணும் பணிகள் ஆரம்பிக்கப்படும்.

முதலில் தபால் வாக்குகள் எண்ணப்பட்டு, அதன் பின்னர் வாக்குப் பெட்டிகளின் வாக்குச் சீட்டுகள் எண்ணப்படும்.

இந்த நிலையில், வாக்கெண்ணும் நடவடிக்கைகள் நிறைவு பெறும் மத்திய நிலையங்களில் உள்ள தேர்தல் முடிவுகள், தேர்தல் ஆணைக்குழுவிற்கு அனுப்பப்பட்டு, உடனுக்குடன் ஊடகங்களின் ஊடாக தேர்தல் முடிவுகள் அன்றைய தினமே அறிவிக்கப்படும்.

குறிப்பாக தேர்தல் நடைபெறும் தினத்திற்கு மறுதினம் தேர்தல் முடிவுகள் அனைத்தும் அறிவிக்கப்படுவதை இதுவரை வழமையான நடைமுறையாகத் தேர்தல் அதிகாரிகள் கொண்டுள்ளனர்.

நாட்டில் ஏதேனும் அசம்பாவித சம்பவங்கள் நேரும் பட்சத்தில் மாத்திரம் தேர்தல் முடிவுகள் வெளியிடுவது தாமதப்படுத்தப்படும்.

இலங்கையில் ஒரு கோடியே 71 லட்சத்திற்கும் அதிகமான வாக்காளர்கள்




வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

இலங்கையில் 25 மாவட்டங்கள் காணப்பட்ட போதிலும், தேர்தல் காலப் பகுதியில் 22 தேர்தல் மாவட்டங்களாகக் கணிப்பிடப்படும்.

குறிப்பாக வடக்கு மாகாணத்தின் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி ஆகிய மாவட்டங்கள் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டமாகவும், மன்னார், வவுனியா மற்றும் முல்லைத்தீவு ஆகியன வன்னி தேர்தல் மாவட்டமாகவும் கருதப்பட்டு, வாக்களிப்புப் பணிகள் இடம்பெறும்.

வாக்குச் சாவடிகள் மற்றும் வாக்கெண்ணும் மத்திய நிலையங்கள் தொடர்பான தகவல்களை தேர்தல் ஆணைக்குழு இதுவரை வெளியிடவில்லை.

### ஜனாதிபதி தேர்தலில் வாக்களிப்பது எப்படி?

உள்ளூராட்சி, மாகாண மற்றும் பொதுத் தேர்தல்களின் போது முதலில் கட்சி சின்னத்துக்கு புள்ளடி இட்டுவிட்டு (ஒ) அக்கட்சியின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களின் விருப்பு இலக்கங்களுக்கு முன்னால் (ஒ) அடையாளமிடலாம்.

ஒரு வேட்பாளருக்கு மட்டுமே விருப்பு வாக்கை வழங்கலாம். அவ்வாறு இல்லாவிட்டால் மூவருக்கு விருப்புகளை வழங்கலாம்.

எனினும், ஜனாதிபதித் தேர்தலில் ஒரு கட்சியின் வேட்பாளர் என்பதற்கு அப்பால் ஏனைய கட்சி வேட்பாளர்களின் சின்னங்களுக்கு அருகில் வாக்களிப்புக்கென ஒதுக்கப்பட்டுள்ள உரிய இடத்தில் 2ஆம், 3ஆம் விருப்பு வாக்குகளைப் பயன்படுத்தலாம்.

ஜனாதிபதித் தேர்தலில் இரண்டுக்கும் மேற்பட்ட வாக்காளர்கள் போட்டியிடுகின்ற பட்சத்தில் - A,B,C,D,E என வைத்துக்கொள்வோம்.

இதில் யு என்பவரே வாக்காளரின் முதன்மைத் தேர்வாக இருக்கும் பட்சத்தில், A என்பவருக்கு முன்னால் 1 என இலக்கத்திலும் - 2, 3ஆம் விருப்பு வாக்குகளைப் பயன்படுத்த விரும்பினால் தாம் விரும்பும் வேட்பாளர்களுக்கு 2, 3 என அடையாளமிட்டு விருப்பு வாக்குகளைப் பயன்படுத்தலாம்.

மேலும், 2, 3 ஆம் விருப்பு வாக்குகளை கட்டாயம் பயன்படுத்த வேண்டும் என்றில்லை. ஒரு வேட்பாளருக்குத்தான் வாக்களிக்க என வாக்காளர் விரும்புவாரெனில் வாக்குச் சீட்டில் அவருக்கு ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் ஓ அல்லது 1 என அடையாளமிட்டால் அது ஏற்றுக்கொள்ளப்படும்.

விருப்புகளை அளிக்க விரும்புபவர்கள் மூன்று வேட்பாளர்களுக்கும் X,X,X என அடையாளமிட்டால் அந்த வாக்கு செல்லுபடியாகாது. எனவே, 2,3 ஆம் விருப்பு வாக்குகளைப் பயன்படுத்த விரும்புபவர்கள் 1,2,3 என அடையாளமிடுவதே சிறந்த நடைமுறையாகக் கருதப்




படுகிறது. அல்லது முதலாவது விருப்பு வாக்குக்குரியவரக்கு நேரே என்றும் இரண்டாம் மூன்றாம் தெரிவுகளுக்கு நேரே 2,3 என்றும் அதாவது ஓஇ 2, 3 என்று குறிப்பிடலாம்.

### ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி எவ்வாறு நிர்ணயிக்கப்படும்?

ஜனாதிபதித் தேர்தல் முடிவடைந்த பின்னர், முதல்கட்ட வாக்கெண்ணும் பணி நடைபெறும். இதில் செல்லுபடியான மொத்த வாக்குகளில் 50 சதவீதத்துக்கும் மேல் வாக்குகளைப் பெற்றவரே வெற்றியாளராகத் தெரிவு செய்யப்படுவார்.

(அளிக்கப்பட்ட மொத்த வாக்குகளில் இருந்து நிராகரிக்கப்பட்ட வாக்குகளை கழித்த பிறகு வருவதே செல்லுபடியான மொத்த வாக்குகள்.)

முதலாம் சுற்று வாக்கெண்ணிப்பில் எந்தவொரு வேட்பாளரும் 50 சதவீதத்துக்கு மேல் வாக்குகளைப் பெறாத பட்சத்திலேயே 2, 3ஆம் விருப்பு வாக்குகள் கவனத்தில் கொள்ளப்படும். 2, 3ஆம் விருப்பு வாக்குகள் எண்ணப்பட்ட பின்னர் முதல் இரண்டு நிலைகளில் உள்ளவர்கள் சமனான வாக்குகளைப் பெற்றிருந்தால் திருவுளச் சீட்டு மூலம் வெற்றி தீர்மானிக்கப்படும்.

தேர்தலில் வெற்றி பெற்றவர் ஜனாதிபதியாகப் பதவிப் பிரமாணம் செய்துகொள்வார்.

இலங்கையில் நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்படுபவர், பிரதம நீதியரசர் முன்னிலையில் இலங்கை ஜனநாயக சோசலிஷ குடியரசின் நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாகப் பதவிப் பிரமாணம் செய்துகொள்வார்.

### இலங்கை நிறைவேற்று அதிகார ஜனாதிபதிகள்

இலங்கையின் தற்போதுள்ள அரசியலமைப்பானது 1978ஆம் ஆண்டு அப்போதைய ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்தனவினால் கொண்டு வரப்பட்டது.

இதன்படி, இலங்கையின் முதலாவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக அப்போது ஜனாதிபதியாகப் பதவி வகித்த ஜே.ஆர்.ஜெயவர்தன திகழ்ந்தார்.

அதைத் தொடர்ந்து, இலங்கையின் முதலாவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதி தேர்தல் 1982ஆம் ஆண்டு நடைபெற்றதுடன், அந்தத் தேர்தலின் ஊடாக ஜே.ஆர்.ஜெயவர்தன மீண்டும் ஜனாதிபதியாக பதவிப் பிரமாணம் செய்துகொண்டார்.

கடந்த 1988ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் ரணசிங்க பிரேமதாஸ தெரிவு செய்யப்பட்டதுடன், அவர் 1992ஆம் ஆண்டு நடத்தப்பட்ட தற்கொலை குண்டுத் தாக்குதலில் உயிரிழந்தார்.

அதைத் தொடர்ந்து, இடைக்கால ஜனாதிபதியாக டி.பி.விஜேதுங்க நாடாளுமன்றத்தால் தெரிவு செய்யப்பட்டதுடன், 1994ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் சந்திரிகா பண்டார நாயக்க குமாரதுங்கவும் தெரிவு செய்யப்பட்டனர்.

அத்துடன், 1999ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் போட்டியிட்ட சந்திரிகா பண்டார நாயக்க குமாரதுங்க, மீண்டும் ஜனாதிபதியாகத் தெரிவானார். 2005 மற்றும் 2010ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல்களில் மஹிந்த ராஜபக்ஸ தெரிவு செய்யப்பட்டு, இரண்டு முறை ஆட்சி பீடம் ஏறினார்.

அதைத் தொடர்ந்து. 2015ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் மைத்திரிபால சிறிசேனவும், 2019ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் கோட்டாபய ராஜபக்ஸவும் தெரிவானார்கள்.

இலங்கை எதிர்நோக்கிய பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில், நாட்டு மக்களின் போராட்டத்திற்கு மத்தியில் இடைநடுவில் கோட்டாபய ராஜபக்ஸ பதவி விலகியதுடன், அந்த இடத்திற்கு தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நாடாளுமன்றத்தினால் தெரிவு செய்யப்பட்டார்.

### இலங்கையில் பிரதமர் தெரிவு

இலங்கை அரசியலமைப்பின் பிரகாரம், ஜனாதிபதிக்கே அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. அத்துடன், பிரதமர் ஜனாதிபதியால் நியமிக்கப்படுவார்.

ஜனாதிபதிக்கு அடுத்தபடியாக பிரதமர் பதவி இலங்கையில் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதி தேர்தலுக்கான திகதி அறிவிக்கப்பட்டுவிட்டதாயினும் நிச்சயம் நடைபெறுமா என்பது நியாயமான சந்தேகம்!

பனங்காட்டான்

இலங்கையின் ஜனாதிபதி தேர்தல் தொடர்பான கால அட்ட வணையை தேர்தல் ஆணையம் கடந்த 26ம் திகதி வெள்ளிக்கிழமை அதிகாரபூர் வமாக அறிவித்தது. இதன் பிரகாரம் அடுத்த மாதம் (ஆகஸ்ட்) 15ம் திகதி வேட்பாளர் மனுத்தாக்கலும் செப்டம் பர் 21ம் திகதி தேர்தலும் இடம்பெற வேண்டும்.

இந்த அறிவித்தல் வெளியான அன்றே போட்டியிடுவதற்கான நால்வர் பெயரில் கட்டுப்பணம் செலுத்தப்பட்டது. இவர்களுள் ஒருவர் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. சுயாதீன வேட்பாளராகவே இவர் போட்டியிடுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. முதல் நாளன்று கட்டுப்பணம் செலுத்தப்பட்ட மற்றைய மூவரும் கட்சிகள் சார்பற்ற சுயேட்சைகள்.

கட்சி வேட்பாளருக்கான கட்டுப்பணம் ஐம்பதினாயிரம் ரூபாவாகவும், மற்றையோருக்கான கட்டுப்பணம் எழுபத்தையாயிரம் ரூபாவாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இம்முறை தேர்தலில் டசின் கணக்கானவர்கள் போட்டியிடுவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

பிரதான வேட்பாளர்கள் என பலவழிகளாலும் அறிவிக்கப்பட்டுவரும் மூவர் ரணில் விக்கிரமசிங்க, சஜித் பிரேமதாச, அநுர குமார திசநாயக்க. பின்னைய இருவரும் தாங்கள் போட்டியிடுவதை பல தடவை அறிவித்துள்ளனர். ரணில் விக்கிரமசிங்க மட்டும் எந்த அறிவிப்பும் விடுக்காது, ஜனாதிபதி பதவி வழியான நிகழ்ச்சி நிரலுக்கு உட்பட்ட நிகழ்வுகளில் பங்குபற்றுவதாக காட்சிப்படுத்தியவாறு தமது பரப்புரையை மேற்கொண்டு வருகிறார்.

ஆனால், தேர்தல் அறிவிப்பு வெளிவந்த முதல்நாளே இவருக்கான கட்டுப்பணம் செலுத்தப்பட்டதானது, தேர்தல் நிச்சயம் இடம்பெறுமென்ற நம்பிக்கையையும் ரணில் விக்கிரமசிங்க போட்டியிடுவது உறுதி என்ற அர்த்தத்தையும் வெளிப்படுத்துவதற்கான நாடகமெனவும், இது அவரது அரசியல் சடுகுடு விளையாட்டுகளில் ஒன்று எனவும் பலர் கருதுகின்றனர். கட்டுப்பணம் செலுத்துவது என்பது தேர்தலில் போட்டியிடுவது என்பதை நிச்சயப்படுத்துவதாக எடுத்துக்கொள்ள முடியாது. ஆகஸ்ட் 15ம் திகதியன்று வேட்புமனுவை தாக்கல் செய்து ஏற்றுக்கொள்ளப்பட்டால் மட்டுமே ஒருவர் போட்டியிடுகிறார் என்பது நிச்சயமாகும். இந்தப் பின்னணியிலேயே செப்டம்பர் 21ம் திகதி தேர்தல் நிச்சயம் இடம்பெறுமா என்ற கேள்வி இன்னமும் பலரிடம் உள்ளது.

அரசியலமைப்புச் சபையின் முன்னுக்குப்பின் முரணான செயற்பாடுகள், நீதிபரிபாலனம் வழங்கும் தீர்ப்புகளை நிறைவேற்ற அரசியல் அதிகாரமும் நாடாளுமன்ற நடைமுறையும் ஏற்றுக்கொள்ள மறுக்கும் போக்கு, ஜனாதிபதியின் விருப்பத்துக்கேற்றவாறு அமைச்சரவை தாளம் போட்டு தலையை ஆட்டும் ஜனநாயக விரோத பண்பு போன்றவைகளை ஆழ்ந்துற்று நோக்குகையில் செப்டம்பர் தேர்தல் இடம்பெறும் என்பதை உறுதி செய்யும் நிலையில் எவரும் இல்லை. இது தேர்தல் ஆணையத்துக்கும் பொருந்தும்.

ஜனாதிபதியின் பதவிக்காலம் ஐந்து வருடங்கள் என்பதை நிலைநிறுத்துவதற்கான இருபத்திரண்டாம் திருத்தச் சட்டம் வர்த்தமானியில் பிரசுரமாகி; காத்திருக்கிறது. நீதிமன்றம் வழங்கிய ஐந்து வருட உத்தரவாதத் தீர்ப்பு நடைமுறையில் இருக்கையில், அதற்கும் மேலாக இத்திருத்தச் சட்டத்தை வர்த்தமானியில் பிரசுரித்தது தேவையில்லாத ஒரு செயற்பாடு என்றும், தேர்தலை இழுத்தடிக்கவே ரணில் முயற்சிக்கிறார் என்றும் பலமான எதிர்ப்பு பொதுவெளியிலும் நாடாளுமன்றத்திலும் காட்டப்பட்டது.

இந்தப் பிரச்சனைக்கு முடிவு காணப்படாதிருக்கும் வேளையில், பொலிஸ்மா அதிபர் நியமனம் தொடர்பாக அதிரடியான இடைக்காலத் தடை தீர்ப்பை உச்ச நீதிமன்றம் வழங்கி புதிய நெருக்கடியை ரணில் அணிக்கு ஏற்படுத்தியுள்ளது. பொலிஸ்மா அதிபராக தேசபந்து தென்னக்கோனை நியமிப்பதில் ஆரம்பத்திலிருந்தே பிரச்சனை இருந்தது. காவற்துறைக்குப் பொறுப்பான அமைச்சர் டிரான் அலஸ் ஆரம்பத்திலிருந்தே விடாப்பிடியாக இருந்ததால் இந்த நியமனம் இடம்பெற்றது. இந்த நியமனத்தை ஆட்சேபித்து ஒன்பது அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் உச்ச நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

இதன் மீதான விசாரணை நிறைவடையும்வரை தேசபந்து தென்னக்கோன் அப்பதவியில் தொடரவும், அப்பதவிக்கான அதிகாரங்களை செயற்படுத்தவும், கடமைகளை மேற்கொள்ளவும் மூன்று நீதியரசர்களும் தடை விதித்து தீர்ப்பளித்தனர். இத்தீர்ப்பை நடைமுறைப்படுத்த ஜனாதிபதித் தரப்பு மறுக்கிறது. பொலிஸ்மா அதிபர் பதவி வெற்றிடமாக்கப்படவில்லையென்பதால் பதில் பொலிஸ்மா அதிபரை ஜனாதிபதியால் நியமிக்க முடியாதெனவும், தேசபந்து தென்னக்கோனை இப்பதவிக்கு நியமிக்க அரசமைப்புப் பேரவை வழங்கிய அங்கீகாரத்தை நீதிமன்றத்தால் மாற்றியமைக்க முடியாதெனவும் பிரதமர் தினேஷ் குணவர்த்தன அறிவித்துள்ளார்.

ஏற்கனவே இருபத்தியிரண்டாவது திருத்தம் தொடர்பாக நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை நிராகரித்த ரணில் தரப்பு, இப்போது பொலிஸ்மா அதிபர் தடைத் தீர்ப்பிலும் நீதிமன்றத் தீர்ப்பை தூக்கி வீசுகிறது. இவ்விவகாரங்கள் தொடர்பாக கருத்து வெளியிட்டிருக்கும் நீதிய மைச்சர் விஜேதாச ராஜபக்சவும் பிரதமர் தினேஷ் குணவர்த்தனவும் சபாநாயகருக்கு ஓர் ஆலோசனை வழங்கியுள்ளனர். முன்னொரு தடவை அப்போதைய சபாநாயகர் அநுர பண்டாரநாயக்க வழங்கிய தீர்ப்பை பின்பற்றுமாறு இந்த ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

2001ம் ஆண்டில் சபாநாயகராக இருந்த அநுர பண்டாரநாயக்க முன்னால் அசாதாரணமான, ஆனால் முக்கியமான பிரச்சனை ஒன்று எழுந்தது. அரசியலமைப்பு மற்றும் நிலையியல் கட்டளைகளின் பிரகாரம் பிரதம நீதியரசரை எதிர்த்து சபாநாயகருக்கு அனுப்பி வைக்கப்பட்ட குற்றப் பிரேரணையைத் தொடர்ந்து பிரதம நீதியரசர் நடத்தை குறித்து விசாரிக்க தெரிவுக் குழுவொன்றை நியமிப்பதற்கு இடைக்காலத் தடையுத்தரவை சபாநாயகர் மீது உயர்நீதிமன்றம் பிறப்பித்தது.

> **அரசியலமைப்புச் சட்டம், நீதிமன்றங்களின் தீர்ப்பு, அரசமைப்புப் பேரவை முடிவு, நாடாளுமன்ற நடைமுறை, ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரம் என்பவைகளுக்கிடையே 'திருவாளர் ஜனநாயகம்' இழுபறியில் நிற்பதால் செப்டம்பர் 21ம் திகதி தேர்தல் இடம்பெறுமா என்ற சந்தேகம் வளர்ந்து செல்கிறது. இதற்கிடையே, தமிழ்ப் பொதுவேட்பாளரை எதிர்த்தே தீருவது என தோழன்புடன் இருவர் முன்னெடுக்கும் பிரயத்தனத்தை அனுதாபத்தோடு பார்க்க வேண்டியுள்ளது.**

இது தொடர்பாக சபாநாயகர் அநுர பண்டாரநாயக்க, இலங்கையிலும் பிரிததானியாவிலும் முன்னர் வழங்கப்பட்ட ஆறு முதல் எட்டு வரையான நீதித்துறை தீர்ப்புகளை மேற்கோள் காட்டி உயர்நீதிமன்றத் தீர்ப்பை நிராகரித்தார். நிலையியற் கட்டளை 78 அ பிரிவின் கீழ் சபாநாயகர் எடுக்க அதிகாரமளிக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் தொடர்பில் அவரைத் தடுக்கும் இடைக்காலக் கட்டளையைப் பிறப்பிக்க உயர்நீதிமன்றத்துக்கு நியாயாதிக்கம் இல்லையென்றும், இடைக்கால உத்தரவு சபாநாயகரைக் கட்டுப்படுத்தாது என்றும் இந்தத் தீர்ப்பில் அவர் தெரிவித்திருந்தார்.

இப்போது நீதிமன்றங்கள் வழங்கும் தீர்ப்புகளை உதாசீனம் செய்வதற்கு 2001ல் அநுர பண்டாரநாயக்க சபாநாயகர் பதவியிலிருந்து வழங்கிய தீர்ப்பை வரவேற்று அதனைப் பின்பற்றுமாறு ஆலோசனை கூறும் ரணிலும் அவரது சகாக்களும், 2019ல் உச்சநீதிமன்றம் வழங்கிய தீர்ப்பே ரணிலுக்கு மீண்டும் பிரதமர் பதவியை பெற்றுக் கொடுத்தது என்பதை மறந்துவிட்டனர். அன்று ஜனாதிபதியாகவிருந்த மைத்திரிபால சிறிசேன தமக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி ரணிலை பிரதமர் பதவியிலிருந்து நீக்கி மகிந்த ராஜபக்சவை பிரதமராக்கினார். ஆனால் உச்ச நீதிமன்றம் அதனை நிராகரித்தது ஜனாதிபதியாலும் நாடாளுமன்றத்தாலும் ஏற்கப்பட்டது என்பது ஐந்து ஆண்டுகளுக்கு முன்னைய வரலாறு. ஆனால் இன்று அதே நீதிமன்றம் வழங்கும் தீர்ப்பை ஏற்றுக்கொள்ளாது நிராகரிப்பவராக ரணில் மாறியிருப்பது நவீன வரலாறு.

இது ஒருபுறமிருக்க, மக்களால் தெரிவு செய்யப்படும் ஜனாதிபதிக்குள்ள உரிமைகள் மக்களால் தெரிவு செய்யப்படாத ஜனாதிபதிக்குக் கிடையாது என்ற வாதத்தை எதிர்க்கட்சிகள் இப்போது முன்வைக்கின்றன. இதுவும்கூட ஏற்புடையதாக இல்லை. ரணசிங்க பிரேமதாச ஜனாதிபதியாக இருந்தபோது மரணித்ததால், அப்போதைய பிரதமர் டி.பி.விஜேதுங்க, எஞ்சிய காலத்துக்கு ஜனாதிபதியானார். பிரேமதாச அனுபவித்த அத்தனை நிறைவேற்று அதிகாரங்களையும் விஜேதுங்கவும் அனுபவித்தார். அப்போது விஜேதுங்க மக்களால் தெரிவு செய்யப்படாத ஜனாதிபதி என்று எவரும் அவரது உத்தரவுகளை நிராகரிக்கவில்லை. இப்போது, ரணில் முன்னைய ஜனாதிபதியின் அதிகாரங்களை பயன்படுத்துவதை தவறு என்று கூறுவதற்கில்லை.

இவைகளை இச்சந்தர்ப்பத்தில் நினைவூட்டுவதற்கான முக்கிய காரணம் அரசியலமைப்புச் சட்டம், நீதித்துறை தீர்ப்புகள், அரசமைப்புப் பேரவை, நாடாளுமன்ற நடைமுறை எனப்படும் ஜனநாயகத்தின் ஒவ்வொரு அலகும் தம்மிஷ்டப்படி இயங்க வேண்டுமென விரும்பி, சட்டத்தையும் நீதித்துறையின் தீர்ப்பையும் நிறைவேற்று அதிகாரமென்னும் அரசியல் கிடாரத்துள் போட்டு மூடிவிட முனைவதை வெளிப்படுத்துவதற்கே.

இத்தகைய செயற்பாடுகளே ஜனாதிபதித் தேர்தல் செப்டம்பர் 21ல் இடம்பெறுமா என்ற பலத்த ஐயப்பாட்டை எண்திசையிலும் ஏற்படுத்தியுள்ளது. தமிழர் தீர்வு என்பது இந்த நெருக்கடிக்குள் எங்கோ தள்ளப்பட்டுப் போவதும் தெரிகிறது.

இதனால், தமிழர் தரப்பு தங்களின் பொதுவேட்பாளர் விடயத்தை மேலும் வேகப்படுத்தி செயற்படுத்த வேண்டிய தேவை அவசியமாகிறது. தமிழரசுக் கட்சியின் இருவர் மட்டும் இதனை வெறுத்து வருகின்றனர். தமிழினத்துக்காக தீர்மானம் எடுக்கும் பொறுப்பு தமிழ் மக்கள் சார்ந்த தேசியப்பற்றுள்ள கட்சிகளதும் சிவில் சமூக அமைப்புகளதும் விருப்பம் சார்ந்தது. இதற்கான ஆதரவுத் தளம் அதிகரித்து வருவதையும் புகலிடத் தமிழர்கள் இதனை வரவேற்று உதவ முன்வருவதையும் பரவலாக அவதானிக்க முடிகிறது.

தமிழ்ப் பொதுவேட்பாளர் யார் என்கின்ற கேள்வி பலரிடமும் இப்போது எழுந்துள்ளது. பேராசிரியர் ஒருவரின் பெயர் அடிபடுகிறது. அரச பயங்கரவாதத்துக்குப் பலியான குடும்பத்தைச் சேர்ந்த ஒருவரின் பெயரும் சொல்லப்படுகிறது. பொருத்தமான ஒரு பெண்மணியின் பெயர் சிலரால் உச்சரிக்கப்படுகிறது. அந்த வேட்பாளரை அறிய தேசப்பற்று வாக்காளர்கள் ஆவலோடு காத்திருக்கின்றனர். ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோர்விலாச் சொற்சமர்!

ஜீவா. ஷஜீவன்
(பட்டிமன்றப் பேச்சாளர்)

## உலகப் புகழ் பெற்ற பட்டிமன்றம் ராஜா, பாரதி பாஸ்கர் பங்கேற்புடன் வெற்றி விழா

டான் தமிழ்ஒளி தொலைக்காட்சியில் கடந்த ஏழு வருடங்களாக ஒளிபரப்பாகிவரும் மாணவர்களுக்கான விவாதக்களமாகிய சொற்சமர் நிகழ்ச்சியின் சிறப்பு நிகழ்ச்சி கடந்த 20.07.2024 யாழ்ப் பாணம் கலாசார மத்திய நிலையத்தில் நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினராக யாழ். இந்தியத் துணைத் தூதர் சிறிசாய் முரளியும் சிறப்பு விருந்தினராக கல்விக் காருண்யன் ஈஎஸ்பி நாகரத்தினமும் கலந்து கொண்டனர். 300 இற்கும் மேற்பட்ட பாடசாலை மாணவர்களும் வளர்ந்தவர்களும் என அரங்கம் நிறைந்த நிலையில் கலந்து கொண்டனர்

'வாயுள்ள பிள்ளை பிழைக்கும்' என்பது பொதுவாக நம் வழக்கத்தில் உள்ள பழமொழி. ஆற்றல் மிக்க பேச்சாளர்களாக தர்க்கம் செய்யும் வாண்மை கொண்டவர்களாகப் பிள்ளைகளை மாற்றுவது என்பது, அவர்களுக்கு ஒரு கை விளக்கை கொடுப்பதற்கு ஒப்பானது. அவ்விளக்கின் ஒளியாலே தான் பொய்ம்மை இருளைக் கிழிக்கவும் மெய்ப்பொருளைக் காணவும் இயலும். பயனுதி வாய்ந்த கை விளக்கை மாணவர்களுக்கு வழங்கும் பணியில் டான் தமிழ் ஒளி தொலைக்காட்சியும் கலாசாலை அதிபர் செந்தமிழ் சொல்லருவி சந்திரமௌலீசன் லலீசன் கடந்த ஏழு ஆண்டுகளாக ஈடுபட்டு இருப்பதை நாம் எல்லோரும் பாராட்டி மகிழ வேண்டும்.

தொலைக்காட்சி விவாத நிகழ்ச்சி ஒன்று - முற்றுமுழுதாகப் பாடசாலை மாணவர்களுக்கு களம் அமைத்து கொடுக்கின்றது என்றால் அது டான் தமிழ் மொழியின் சொற்சமர் நிகழ்வாக மட்டுமே இருக்க முடியும். உலகப் புகழ்பெற்ற பட்டிமன்ற பேச்சாளராக விளங்கும் பட்டிமன்றம் எஸ் ராஜா மற்றும் திருமதி பாரதி பாஸ்கர் ஆகியோருடன் சொற்சமர் மாணவர்கள் ஒரே மேடையில் அமர்ந்து தம் ஆற்றல்களை வெளிக்காட்டிய நிகழ்வு கடந்த வாரம் (20.07.2024) இந்திய கலாசார மத்திய நிலைய மண்டபத்தில் டான் சொற்சமரின் அடையாள நிகழ்வாக அரங்கேறி இருந்தது.

வடபுலப் பாடசாலை மாணவர்களின் கருத்துக்கள் கணீர் என ஒலிக்க - வருகை தந்திருந்த தமிழக பேச்சாளர்கள் வியப்பில் உறைய - அரங்கத்தில் கூடியிருந்த பெற்றோர்கள் மற்றும் நிறைந்த பார்வையாளர்களின் கர ஒலி உயர - நிகழ்வுகள் ஒரு சிறப்பு சொற்சமராக மட்டு





மின்றி குழந்தைகளை சர்வதேச அரங்குகளிலும் ஏற்ற முடியும் என்ற நல்ல நம்பிக்கையும் தந்த பேரரங்காகவும் அமைந்தது.

ஏற்கனவே - சொற்சமர் நிகழ்வை ஆர்வலர்கள் மூலம் அறிந்து, பட்டிமன்றம் எஸ்.ராஜா அவர்கள் செந்தமிழ்ச் சொல்லருவி ச. லலீசனைத் தொடர்பு கொண்டு குறித்த நிகழ்ச்சி தொடர்பில் ஆலோசனைகளை வழங்கியது மட்டுமின்றி திருமதி பாரதி பாஸ்கரன் அம்மையார் அவர்களுடன் இணைந்து வாரம் தோறும் சொற்சமர் நிகழ்ச்சியில் சிறந்த பேச்சாற்றலை வெளிப்படுத்தும் ஒரு பேச்சாளருக்கு 5000 ரூபா பரிசுப்பரிசு வழங்கி வந்தனர். கல்விக் காருண்யன் ஈ.எஸ்.பி நாகரத்தினம் அவர்களும் குறித்த சொற்சமருக்கு ஊட்டமளித்து வந்த நிலையில் ஏராளமான தலைப்புகளில் மாணவர்கள் தம் திறமை மிக்க வாதங்களை வெளிப்படுத்தியும் வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இந்த நிகழ்ச்சி டான் தமிழ் ஒளி தொலைக்காட்சியில் பிரதி திங்கட்கிழமை தோறும் இரவு 9 மணி தொடக்கம் 10 மணி வரை இடம்பெற்று வருகின்றது.

நிகழ்ச்சியில் மாணவர்களுக்காக வழங்கப்படும் தலைப்புகள் சனரஞ்சகமானவையாகவும் மாணவர்களால் இலகுவில் அணுக்கத்தக்கவையாகவும் இருப்பது வழமையாகும். திரைத்துறைப் பாத்திரங்களை மையப்படுத்தி சமூக நோக்குப் பற்றிய சிந்தனையை மேலுறச் செய்தல் என்ற நோக்கில் வழங்கப்பட்ட சினிமா சார்ந்த ஒரு தலைப்பினால் இச்சொற்சமர் பற்றி சில சமூக வலைத்தள போராளிகள் சர்ச்சையை கிளப்பினர். அந்த சமூக வலைத்தள வெளிச்சத்தினால் இந்த நிகழ்ச்சி இன்னும் மக்கள் மத்தியில் பிரபலமடைந்தது. அதுவரை காலமும் மாணவர்கள் வாதிட்ட ஏராளமான ஆக்கபூர்வ தலைப்புகளைப் பற்றியும் இந்த நிகழ்ச்சியின் தேவை குறித்தும் பலரும் தேடி உணர்ந்து கொள்ள வழிகோலிற்று.

வளங்களும் தளங்களும் எம்மை காட்டிலும் அதிகம் கொண்ட தமிழகத்திற்கு கூட இவ்வாறான ஒரு நிகழ்ச்சி இடம்பெறவில்லை என்பதையும் ஆகச் சிறந்த பேச்சாளர்களை உருவாக்கும் இந்நிகழ்ச்சி ஒவ்வொரு பிரதேசத்திற்கும் அவசியம் என்பதையும் பட்டிமன்றம் ராஜா மற்றும் திருமதி பாரதி பாஸ்கர் ஆகியோர் தம் உரைகளில் வெளிப்படுத்திய போது குறித்த நிகழ்வை பொறுப்போடு வழி நடத்திச் செல்லும் செந்தமிழ்ச்சொல்லருவி ச.லலீசன் அவர்களின் அர்ப்பணிப்பான செயல் திறத்தை நாம் அறிந்து கொண்டோம்.

ஆகமொத்தத்தில் டான் குழுமப் பணிப்பாளர் எஸ். எஸ். குகநாதனின் சிந்தனையில் உதயமாகி ஆண்டுகள் கடந்து பயணிக்கும் சொற்சமர் - சோர்வில்லாச் சிந்தனை மிகுந்த மாணவர் சமூகத்திற்கு ஊக்க மருந்து எனின் மிகை இல்லை. சொற்சமரில் பங்கேற்ற இளம் பேச்சாளர்கள் தம்முடைய வளர்ச்சிக்கும் இயல்துறை சார்ந்த வெற்றிக்கும் சொற்சமர் வழங்கிய வழிகாட்ல்களை நன்றியுடன் பதிவு செய்த பதிவுகளே மேற்படி கூற்றுக்குச் சான்றாக அமையும். சொற்சமர் விவாத நிகழ்ச்சி நம்மண்ணில் இன்னும் இன்னும் ஆற்றல் உள்ள விவாதிகளைப் பிரசவிக்கட்டும்.

●

# லண்டனில் கம்பன் விழா!

## பேச்சுக்களும் பெருமைகளும்: ஒரு பார்வை

எஸ். ராகவராஜ்

கவிப் பேரரசன் கம்பனுக்கு, ரசிகமணி டி. கே. சி. தலைமையில் காரைக்குடி நாட்டரசன் கோட்டையில் 1939ஆம் ஆண்டு கம்பன் விழாவைக் கொண்டாடினார் 'கம்பன் அடிப்பொடி' சா. கணேசன். அவர் ஏற்றிவைத்த அந்தத் தீபத்தை ஏந்தி, 46 ஆண்டுகளாக கம்பனோடு பயணித்து வருகிறார் கம்பவாரிதி ஜெயராஜ். "எமது அகில இலங்கைக் கம்பன் கழகத் தாய் ஈன்ற மகவாகவே பிரித்தானிய கம்பன் கழகத்தைக் கண்டு மகிழ்கின்றோம்" என்று, லண்டனில் இம்மாதம் 13, 14 ஆகிய இரண்டு தினங்களில் நிகழ்ந்த கம்பன் விழா நிகழ்ச்சியினை வாழ்த்துகிறார் கம்பவாரிதி ஜெயராஜ்.

'அறிவு' அறக்கட்டளையினரும் கம்பன் விழாக் குழுவினரும் இணைந்து லண்டனின் அல்பர்ட்டன் பாடசாலை மண்டபத்தில் நடத்திய கம்பன் விழா கண்கொள்ளாக் காட்சியாக நிறைவுற்றது. லண்டனில் இந்தக் கம்பன் விழாவிற்குத் திரண்ட மக்கள் கூட்டத்தை, அண்மைக் காலத்தில் லண்டனில் நிகழ்ந்த எந்த இலக்கிய விழாவிலும் கண்டதில்லை.

"கம்பனைத் தொட்டவர்கள் தாழ்ந்ததில்லை. கம்பனை நாடினால் நாடிய பொருள் கைகூடும். ஞானமும் புகழும் சேரும். தமிழுக்கு அழகு சேர்த்தவன் கம்பன். சத்தியம்தான் வார்த்தைக்கு அழகு. கம்பன் சத்தியத்தின் குரல்" என்று கம்பவாரிதி ஜெயராஜ் இவ் விழாவில் சிறப்புரையாற்றும்போது குறிப்பிட்டார். "தமிழகத்தில் ஐம்பதிற்கும் மேலான கம்பன் கழகங்கள் கம்பனின் காப்பியத்தை மக்களிடம் எடுத்துச் செல்கின்றன. இலங்கையிலும் நாற்பத்து ஆறு ஆண்டுகளாக கம்பன் விழா வெகு சிறப்பாக நடைபெற்று வருகின்றது. சிங்கப்பூர், மலேசியாவிலும் கம்பன் கழகங்கள் இயங்கிவருகின்றன. ஐரோப்பாவில், லண்டனில் கம்பனை ஒலிக்கச் செய்யும் முயற்சி வெற்றிகரமாக நிலைபெறும். தமிழருக்கென கம்பன் தந்த இராமகாவியம் என்னும் அமிழ்தக் கடலை உலகத்தார் அனைவரிடமும் சேர்ப்பித்தல் உண்மைத் தமிழரின் உயர்கடனாகும்" என்றும் ஜெயராஜ் வாழ்த்து நல்கினார்.

"கம்பன் என்றொரு மானிடன் என்று பாரதி பாராட்டிய கம்பன், மானிடத்தின் அனைத்துப் பெருமைகளை எல்லாம் தனது காவியத்தில் பொதிந்து வைத்திருக்கின்றான். நாகரிகம் என்பது மானிடத்தை நேசிப்பதுதான்" என்று, தமிழ்நாட்டின் நட்சத்திரப் பேச்சாளர் பாரதி பாஸ்கர் தனது சிறப்புரையில் தெரிவித்தார்.

மலேசிய நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் எம். சரவணன், 'உலகெங்கும் உள்ள கம்பன் கழகங்கள் கம்பனுக்கு விழா எடுப்பதும், கம்பராமாயணத்தைக் கொண்டாடுவதும் தமிழ் கூறும் நல்லுலகம் கம்பனுக்கும், அவனது தமிழுக்கும் செய்யும் நன்றிக்கடன்' என்றார்.

பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த் துறைத் தலைவர் பிரசாந்தன், "கம்பனை நாளைய தலைமுறைக்கு எடுத்துச் செல்ல, அக் காப்பியத்தை நடைமுறைக்கேற்ப வடித்துத்தரும் கம்பவாரிதி ஜெயராஜ் போன்றோரின் பணி பாராட்டத்தக்கது. காலங்கள் மாறுகையில், காலத்திற்கேற்ற வடிவத்தில், செவ்வியல் இலக்கியங்களைப் புதிதாய்ப் புனையும் ஆற்றல் கைவரவேண்டும்.

செய்யுளில் அமைந்திருந்த பெரியபுராணத்தை, வசன நடையில் எழுதிய ஆறுமுகநாவலரின் நோக்கே காலத்திற்கேற்றது' என்று, பொருள் பொதிந்த கருத்துகளை அரங்கில் முன்வைத்தார்.

பாரதி கிருஷ்ணகுமார், 'எக்காலத்திற்கும் பொருந்தும், நல்வழிகாட்டும் பண்புகளை கம்பன் தனது காவியத்தில் விட்டுச் சென்றிருக்கிறான். மனிதனின் உன்னத பண்புகளை எல்லாம் தனது கதைமாந்தர் வழியே உலகிற்கு எடுத்துவைத்துச் சென்றிருக்கிறார். இந்தியாவிற்குப் பெருமை சேர்க்கும் அதிசயமான அற்புதங்களில் இராமாயணம் , மகாபாரதம் என்னும் இரண்டு இதிகாசங்களும் தமது கதைச் சிறப்பாலும், கவித்துவ மேன்மையாலும் சிறந்து விளங்குகின்றன' என்றார்.

தமிழருவி சிவகுமார், "இன்றைய சமுதாயத்திற்கு, அவர்களின் எல்லா நிலைகளிலும் வாழ்வாங்கு வாழும் வாழ்க்கை நெறிகளை நமது அடுத்த தலைமுறையினருக்கு எடுத்துச் சொல்வது பெற்றோரின் பெரும் பொறுப்பாகும். இன்று சமூகத்தில் அறநெறிகள் வீழ்ச்சியடைந்து சென்றுகொண்டிருக்கும் நிலையில் - விழுமி[illegible] கம்பன் விட்டுச் சென்றிருக்கும் வாழ்வு அறக்கருத்துகளே நமது அடுத்த சந்ததியினரை உயர் நிலைக்கு இட்டுச் செல்ல வல்லது" என்று எடுத்துரைத்தார்.

கம்பன் விழாவில் சமூகப் பணியாற்றிய பெரியோருக்கு மாண்பளிக்கப்பெற்றமை விழாவின் பெருஞ் சிறப்பாக அமைந்தது. மருத்துவத் துறைப்பேராசிரியர் ந. சிறிஹரன், தமது 'மனித நேயம்' அறக்கட்டளைமூலம் தமிழ் மக்களுக்கு ஆற்றிவரும் சேவைக்காகப் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டார். லண்டனில் தமிழ்ச் சிறாருக்குத் தமிழ் பயிற்றுவிக்கும் பணியில் தொடர்ந்து பாடுபட்டுவரும் மு. து. செல்வராஜாவும் சிறப்பிக்கப்பட்டார்.

"இந்தியா, இலங்கை, மலேசியா ஆகிய நாடுகளிலிருந்து சிறப்பு வாய்ந்த பேச்சாளர்களை ஒழுங்கு செய்து, இந்தப் பிரமாண்டமான விழா நிகழ்வுகளை வெற்றிகரமாக ஒருங்கிணைத்துச் செயற்படுத்துவதில், லண்டனில் சகல மட்டத்திலிருந்தும் கிடைத்த ஒத்துழைப்பு மனதிற்குப் பெரும் மன நிறைவைத் தருகிறது. மண்டபம் நிறைந்து வழிய, கம்பன் விழாவிற்குத் திரண்டிருந்த மக்கள் கூட்டம், நாங்கள் நடத்திய கம்பன் விழா அடைந்த பெரும் வெற்றிக்குச் சாட்சியாக உள்ளது" என்று, கம்பன் விழாவின் பிரித்தானிய குழுத்தலைவர் மு. குமாரநாயகம் தெரிவித்தார்.

'அறிவு' அறக்கட்டளைத் தலைவரும் கம்பன் விழா அமைப்பாளருமான பதஞ்சலி நவரேந்திரன், "பல ஆயிரம் பவுண்கள் செலவில் இத்தகைய பிரமாண்டமான விழாவை ஏற்பாடு செய்யும் பணியில் கேட்டும் கேளாமலும் உதவிகளை வாரி வழங்கிய அமைப்புகள், நல்லுள்ளம் கொண்டவர்கள் நமது நன்றிக்குரியவர்கள். தமிழ் ஆலயங்களும் தமிழ்ப் பள்ளிகளும் தமிழின் வளர்ச்சிக்கான தளத்தை இட்டிருந்தாலும், கம்பன் விழாக்கள் போன்ற இலக்கிய நிகழ்வுகளே தமிழுணர்வினை நம் சமூகத்தின் மத்தியில் எடுத்துச் செல்லக்கூடியவை' என்று நன்றி கூறினார்.

கம்பன் விழாவில் வழங்கப்பட்ட விழா மலர், காத்திரமான இலக்கியக் கட்டுரைகளைத் தாங்கிப் பொலிவாக அமைந்திருந்தது. தமிழ் இலக்கியத்தைக் கொண்டாடுமுகமாக நிகழும் கம்பன் விழாவினைப் பாராட்டி, இந் நிகழ்வில் பங்குபெறும் அனைவருக்கும் வாழ்த்துக்கூறும்

மாண்பு மிகு பிரித்தானிய மன்னரது வாழ்த்துச் செய்தி, இந்த விழா மலரில் இடம் பெற்றிருப்பது சிறப்பானது.

நாட்டிய நாடகங்களும் நடனங்களும் விழாவின் சிறப்பிற்கு மெருகூட்டின.


●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# நீதி - சட்டவாக்கத்துறைகளுக்கான பிணக்கு ஜனாதிபதித் தேர்தலைப் பாதிக்குமா?

கந்தையா அருந்தவபாலன்.

காவல்துறை மாஅதிபர் தேசபந்து தென்னக்கோனின் நியமனம் தொடர்பில் அண்மையில் உச்ச நீதிமன்றம் வழங்கிய இடைக்காலத் தீர்ப்புத் தொடர்பில் அரசாங்கத்தின் பிரதிபலிப்பானது சட்டவாக்கத்துறையான நாடாளுமன்றத்துக்கும் நீதித்துறைக்கும் இடையில் முரண்பாடொன்றைத் தோற்றுவித்துள்ளதுடன் அரசியலமைப்புத் தொடர்பான பிரச்னையொன்றுக்கும் வழிவகுத்துள்ளது. குறித்த நியமனம் தொடர்பில் அரசியலமைப்புப் பேரவையும் அதன் தலைவரான சபாநாயகரும் மேற்கொண்ட நடைமுறை தவறானது என்றும் அது தமது அடிப்படை உரிமையைப் பாதித்துள்ளது என்றும் அதனால் அந்நியமனத்தை வறிதாக்குமாறு கோரி கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை, ஐக்கிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹூமான், உண்மைக்கும் நீதிக்குமான சட்டவாளர் சங்கம் உட்பட ஒன்பது முறையீட்டாளரால் உச்ச நீதிமன்றில் தொடுக்கப்பட்ட வழக்கில் மன்று தென்னக்கோனை அப்பதவியிலிருந்து தற்காலிகமாக இடைநிறுத்துமாறும், புதிய ஒருவரை பதில் காவல்துறை மாஅதிபராக நியமிக்குமாறும் இடைக்காலத் தீர்ப்பொன்றை வழங்கியிருந்தது. அத்தீர்ப்பை ஏற்க மறுத்த அரசாங்கம் அது அரசியலமைப்புக்கு முரணானது என்றும், காவல்துறை மாஅதிபரை நீக்கும் அதிகாரம் உச்ச நீதிமன்றுக்குக் கிடையாது என்றும், அதனால் அப்பதவி வெற்றிடமாகவில்லை என்றும், அதனால் புதிதாக ஒருவரை நியமிக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு இல்லை என்றும் பிரதமர் தினேஸ் குணவர்த்தனா அவர்களினால் நாடாளுமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது. அத்துடன் நீதிமன்றத் தீர்ப்பை உடன் நடைமுறைப்படுத்துமாறு வலியுறுத்திய எதிர்கட்சியினரை உச்ச நீதிமன்றத்தினூடாக அதற்கான தீர்வைப் பெறுமாறு சபாநாயகர் கேட்டுக்கொண்டார். இதனால் தற்போதைய காவல்துறை மாஅதிபரைப் பொறுத்து நீதிமன்றத் தீர்ப்புக்கமைய பணியிலிருந்து விலகியிருப்பதா? அல்லது அரசாங்கத்தின் நிலைப்பாட்டுக்கமைய தொடர்ந்து பணி செய்வதா? என்ற இரண்டுங்கெட்டான் நிலை தோன்றியுள்ளதுடன் அது ஜனாதிபதித் தேர்தலுக்கு மிக அவசியமாக தேவைப்படும் காவல்துறையினரின் பணிகள் தொடர்பாகவும் பல சிக்கல்களை உருவாக்கக் கூடும் என்ற அச்சத்தையும் தோற்றுவித்துள்ளது.



முறைப்பாட்டாளரின் அடிப்படை உரிமைமீறல் மனுவை விசாரணைக்கு ஏற்றுக்கொண்ட நீதிமன்றம் தனது முகத்தோற்றமளவில் மேற்படி இடைக்காலத் தீப்பை வழங்குவதற்கு அடிப்படையாக அமைந்த காரணிகளை முதலில் தெரிந்து கொள்வதன்மூலமே இப்பிரச்னை தொடர்பான முழுமையான விளக்கத்தை வாசகர்கள் பெறமுடியும். காவல்துறை மாஅதிபர் போன்று அரச துறைகளுக்கான உயர்மட்ட பதவிகளுக்கு ஜனாதிபதியால் விதந்துரைப்போரை ஆராய்ந்து அனுமதி வழங்கும் அதிகாரம் அரசியலமைப்பு ஏற்பாடுகளுக்கமைய அரசிலமைப்புப் பேரவைக்கு உரித்தாக உள்ளது. அதற்கமைய இந்த ஆண்டு பெப்ரவரி மாதம் பல்வேறு சர்ச்சைகளுக்கு மத்தியில் காவல்துறை மாஅதிபராக தேசபந்து தென்னக்கோனை நியமிப்பதற்கான ஒப்புதலை அரசியலமைப் பேரவையிடம் ஜனாதிபதி கேட்டிருந்தார். சபாநாயகரைத் தலைவராகக் கொண்ட இப்பேரவை பத்துப் பேரைக் கொண்டிருக்க வேண்டிய இடத்தில் ஒன்பது பேரே இப்போது உள்ளனர். பத்தாவது நபராக நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்த்தார்த்தனை நியமிக்குமாறு சிறிய கட்சிகள் சார்பில் முன்மொழியப்பட்டிருந்தாலும் அதனை நாடாளுமன்றம் முறைப்படி அனுமதிக்காமையினால் ஒன்பது பேரே அப்பேரவையின் உறுப்பினர்களாக தற்போது இருந்து வருகின்றனர். தென்னக்கோனை காவல்துறை மாஅதிபராக நியமனஞ் செய்வது தொடர்பான தீர்மானத்தை மேற்கொள்வதற்காக கூடிய இப்பேரவைக் கூட்டத்திற்கு அதன் உறுப்பினர் ஒருவர் சமூகமளிக்கவில்லை. சபாயாயகரைத் தவிர்த்து எட்டு உறுப்பினர்கள் சமூகமளித்திருந்தனர். இவர்களுள் ஆளும் கட்சி சார்பான உறுப்பினர்களான பிரதமமந்திரி தினேஸ் குணவர்த்தனா, நிமால் டி சில்வா, சாகர காரியவாசம், கலாநிதி விஜயசுந்தர ஆகிய நால்வரும் தென்னக்கோனுக்குச் சார்பாகவும் எதிர்க்கட்சிகளின் சார்பில் அதன் தலைவர் சஜித் பிரேமதாச மற்றும் கபிர் ஹாசிம் ஆகியோர் எதிராகவும் வாக்களித்திருந்தனர். சுயாதீன உறுப்பினர்களான கலாநிதி இராமானுஜம், கலாநிதி சாமரரட்ன ஆகியோர் வாக்களிக்காது விலகியிருந்தனர். இதனால் தென்னக்கோனின் நியமனத்தை உறுதி செய்வதில் சிக்கல் ஏற்பட்டது. ஏனெனில் குறித்த ஒருநியமனத்தை உறுதி செய்வதற்கு குறைந்தது ஐந்து உறுப்பினர்களின் ஆதரவு அவசியமாகும். பேரவையின் தலைவரான சபாநாயகருக்கு வாக்களிக்கும் உரிமை இல்லாவிட்டாலும் 4-4 என்ற வகையில் வாக்குகள் சமமாக வரும்வேளையில் சபாநாயகர் தனது ஒரு வாக்கை வழங்கி நியமனத்தை உறுதி செய்ய முடியும். இங்கு 4-2 என்றவாறாக



ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தேர்தலில் போட்டியிட உள்ளதால் பதில் காவல்துறை அதிபரை அவர் நியமனஞ் செய்வது பல்வேறு விமர்சனங்களைத் தோற்றுவிக்கும். எனவே உச்ச நீதிமன்றம், அரசியலமைப்புப் பேரவை, நாடாளுமன்றம் ஆகியன இணைவதன் மூலமே ஒரு சுமுகமான நிலைப்பாட்டைத் தோற்றுவிக்க முடியும்.

வாக்களிப்பு காணப்பட்டதனால் வாக்களிப்பில் கலந்து கொள்ளாத இரு உறுப்பினர்களதும் வாக்குகளை தற்றுணிபின் அடிப்படையில் சபாநாயகர் எதிரான வாக்குகளாகக் கணித்து, 4-4 என்ற வகையில் தனது ஒரு வாக்கை தென்னக்கோனுக்கு ஆதரவாக வழங்கி நியமனத்தை உறுதி செய்தார். இதில்தான் பிரச்சினை தோற்றம் பெற்றது. அதாவது வாக்களிப்பில் கலந்து கொள்ளாது நடுநிலை வகித்தவர்களின் வாக்குகளை எவ்வாறு தீர்மானத்துக்கு எதிரான வாக்குகளாக சபாநாயகர் தீர்மானித்து நியமனத்தை தனது வாக்குமூலம் உறுதி செய்தார் என்பது. இதுவே முறைப்பாட்டாளரின் கேள்வி. இதனைக் கருத்திற்கொண்டு அரசியலமைப்புப் பேரவையின் இத் தீர்மானம் முகத்தோற்றமளவில் தவறெனக் கருதிய உச்ச நீதிமன்றம் மேற்படி இடைக்காலத்தடையை தென்னக்கோனுக்கு எதிராக விதித்திருந்தது.

இவ்வடிப்படையில் தென்னக்கோனுக்கு எதிரான தீர்ப்பை உச்ச நீதிமன்றம் வழங்கியிருந்தாலும், அவரைக் காவல்துறை மாஅதிபராக நியமனஞ் செய்வது தொடர்பாக ஏலவே பல்வேறு எதிர்ப்புகளை மனித உரிமை அமைப்புக்கள் வெளியிட்டிருந்தன. தென்னக்கோனின் கடந்த காலச் செயற்பாடுகள் பல விமர்சனங்களுக்கு உள்ளாகியிருந்ததுடன் உச்ச நீதிமன்றினாலும் அவை கண்டிக்கப்பட்டிருந்தன. 27 சமூக நிறுவனங்களை உள்ளடக்கிய சித்திரவதைக்கெதிரான இலங்கைக் கூட்டமைப்பு (SriLanka Collective Against Torture-SLCAT) தென்னக்கோனால் மேற்கொள்ளப்பட்டிருந்த மோசமான சித்திரவதை தொடர்பாக உச்ச நீதிமன்றில் தொடுத்த அடிப்படை உரிமை மீறல் வழக்கொன்றில் மன்று அவரைக் குற்றவாளியாகக் கண்டிருந்ததுடன் பாதிக்கப்பட்ட நபருக்கு அவரின் சொந்தப் பணத்திலிருந்து நட்டஈடு வழங்கவேண்டும் என்றும் அவரை ஒழுக்காற்று விசாரணைக்கு உட்படுத்தவேண்டும் என்றும் தீர்ப்பளித்திருந்தது. இவ்வாறான ஒருவரை காவல்துறை மாஅதிபராக [illegible] நியமித்தமை மோசமான முன்னுதாரணமாகவே பார்க்கப்படுகிறது. தேசபந்து தென்னக்கோன் ராஜபக்ஷக்களின் தீவிர விசுவாசியாவர். அதன்காரணமாக ராஜபக்ஷக்களின் அழுத்தத்தினால் அவர்களில் தங்கியிருக்கும் ரணில் விருப்பமின்றியே அந்த நியமனத்தை வழங்கவேண்டியிருந்ததாகக் கூறப்படுகிறது.

காவல்துறையை வழிநடத்துவதற்கு அதன் தலைமை அதிகாரியான மாஅதிபர் பணி மிக அவசியமானதொன்றாகும். இப்பொழுது அப்பதவியில் தென்னக்கோன் இருக்கிறாரா இல்லையா என்பது கேள்விக்குறியாக இருப்பதுடன் புதிய பதில் மாஅதிபரை நியமிக்கும் நிலையிலும் ஜனாதிபதி இல்லை என்பது தெளிவாகிறது. இவ்வாறான ஒருநிலை நடக்கவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலில் பாதிப்புகளைத் தோற்றுவிக்கக்கூடும் என்ற ஐயமும் எழுந்துள்ளது. இந்தக்குழப்ப நிலையைச் சாதகமாகப் பயன்படுத்தி ஜனாதிபதித் தேர்தலை ரணில் தள்ளிப்போட முயற்சிக்கிறார் என்று வழமைபோல எதிர்க்கட்சிகள் குற்றஞ்சாட்டவும் தவறவில்லை. சீப்பை மறைத்து வைப்பதால் திருமணம் நின்று விடாது. அந்த வகையில் நன்கு கட்டமைக்கப்பட்ட இலங்கைக் காவல்துறைக் கட்டமைப்பைக் கொண்டு தேர்தலை நீதியாகவும் பாதுகாப்பாகவும் நடத்த முடியும். அதையும் மீறி வலிந்து தேர்தலை தள்ளிப்போட முயன்றால் இன்னொரு அரகலய உருவாவதைத் தடுக்க முடியாது என்பது சம்பந்தப்பட்டோருக்கு விளங்காத ஒன்றல்ல. அதேவேளை அக்கட்டமைப்பின் நேரத்தியான செயற்பாடுகளுக்கு அதன்மீது அரசியல் அழுத்தங்கள் மேற்கொள்ளப்படாதிருத்தலும் அவசியமாகும். உண்மையில் அரசியல் தலையீடே இப்பிரச்சினைக்கான பிரதான காரணம் என்பதை அனைவரும் அறிவர். அரசியலமைப்புச் சரியாக வழிகாட்டினாலும் அதிலுள்ள ஓட்டைகளை வைத்து ஆட்சியாளர்கள் தமக்குச் சாதகமான நிலைமைகளை ஏற்படுத்த முனைவதே இதுபோன்ற பல பிரச்னை



கள் நாட்டில் தோன்ற வழிவகுக்கிறது.

இப்போது தென்னக்கோனின் பிரச்சினை அவரது பதவிநிலையைக் கடந்து அரசாங்கத்துக்கும் நீதித்துறைக்குமிடையிலான ஒரு பிரச்சினையாக மாறியுள்ளது. நாடொன்றின் அதிகாரப் பிரிவுகளான சட்டவாக்கத்துறை, நிறைவேற்றுத்துறை, நீதித்துறை என்பற்றிற்கிடையில் சமநிலையைப் பேணும்வகையில் அரசியலமைப்பு வரையறுக்கப்பட்டுள்ளது. நாட்டில் சட்ட ஆட்சியையும் ஜனநாயகத்தையும் காப்பதற்கு இவை ஒன்றையொன்று கண்காணிப்பதுடன் இணங்கிச் செல்லவும் வேண்டும். இவற்றுக்கிடையே முரண்பாடுகள் ஏற்படுவது நாட்டிற்கோ மக்களுக்கோ நன்மமையானதன்று. அதுவும் நாடு ஜனாதிபதித் தேர்தலை எதிர்நோக்கியுள்ள இந்நேரத்தில் இப்பிரச்சினை தொடர்வது பல எதிர்மறையான விளைவுகளுக்கு வழிவகுக்கக்கூடும். எனவே இப்பிரச்னைக்கு விரைந்து தீர்வு காணப்படவேண்டும். சம்பந்தபட்ட தரப்புகள் பந்தை அடுத்தவர் களத்துக்கு அடித்து விடாமல் இணைந்து விரைவாக இப்பிரச்னைக்குத் தீர்வு காணவேண்டும். ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தேர்தலில் போட்டியிட உள்ளதால் பதில் காவல்துறை அதிபரை அவர் நியமனஞ் செய்வது பல்வேறு விமர்சனங்களைத் தோற்றுவிக்கும். எனவே உச்ச நீதிமன்றம், அரசியலமைப்புப் பேரவை, நாடாளுமன்றம் ஆகியன இணைவதன் மூலமே ஒரு சுமுகமான நிலைப்பாட்டைத் தோற்றுவிக்க முடியும். இவ்விடயத்தில் நாடாளுமன்றிலுள்ள அனைத்துக்கட்சித் தலைவர்களும் ஒன்றுகூடி பதில் காவல்துறை மாஅதிபராக ஒருவரை தெரிவுசெய்து ஜனாதிபதிக்கு விதந்துரைப்பதன் மூலம் இப்பிரச்சினைக்கு சுமூகத் தீர்வுகாணமுடியும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் முன்வைத்த யோசனையை கவனத்திற் கொள்ளமுடியும். எனினும் இந்த யோசனைக்கு அரசாங்கம் இணங்குமா என்பது ஐயமாகவே உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரொறன்ரோவில் தமிழ் சார்ந்த ஆய்வு நூல்கள் வெளியீடு



குரு அரவிந்தன்

அண்மையில் பேராசிரியர் பால சுந்தரம் இளையதம்பி அவர்களின் ஆய்வு நூல்கள் மூன்று கனடா, ரொறன்ரோவில் வெளியிட்டு வைக்கப் பெற்றன.

சுவாமி விபுலாந்தர் தமிழ் ஆய்வு மையத்தின் ஆதரவுடன் நடைபெற்ற இந்த வெளியீட்டு நிகழ்வுக்குக் கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தின் தலைவர் அகணி சுரேஸ் அவர்கள் தலைமை தாங்கியிருந்தார். இந்த நிகழ்வில் சங்க இலக்கியம் ஒரு புதிய கண்ணோட்டம், தமிழர் நாட்டுப்புறவியல் களஞ்சியம், திருக்குறள் ஓர் உலகப் பொது நூல், ஆகிய மூன்று நூல்கள் வெளியிடப்பெற்றன. தாய்மொழி மீது கொண்ட ஈடுபாடு காரணமாக புலம்பெயர்ந்த மண்ணில் தமிழ் மொழி சார்ந்து ஆய்வுகளை மேற்கொண்டு அதிக நூல்களை வெளியிட்ட பெருமை பேராசிரியருக்கு உண்டு.

ஆரம்ப நிகழ்வாக மங்கள விளக்கேற்றியதைத் தொடர்ந்து செல்வி சத்திய சங்கவி முகுந்தனால் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடப்பெற்றது. கனடா தேசியப் பண்ணைத் தொடர்ந்து அகவணக்கம் இடம் பெற்றது.

வரவேற்புரையை எழுத்தாளர் சிவநயனி முகுந்தன் நிகழ்த்தினார். அதைத் தொடர்ந்து தலைவர் உரை இடம் பெற்றது. வாழ்த்துரை அறிஞர் சாமி அப்பாத்துரை மற்றும் அருட்தந்தை ஜோசப் சந்திரகாந்தன் ஆகியோரால் வழங்கப் பெற்றது. இதனைத் தொடர்ந்து கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தின் முன்னாள் தலைவரான பேராசிரியர் இ. பால சுந்தரம் அவர்கள் கனடா தமிழ் எழுத்தாளர் இணைய அங்கத்தவர்களால் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார்.

'சங்க இலக்கியம் ஒரு புதிய கண்ணோட்டம்' என்ற நூலை கனடா அண்ணாமலை பல்கலைக்கழக விரிவுரையாளர் முனைவர் வாசுகி நகுலராஜா அவர்களும், 'தமிழர் நாட்டுப்புறவியல் களஞ்சியம்' என்ற நூலை கனடா அண்ணாமலை பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு குமரகுரு கணபதிப்பிள்ளை அவர்களும், 'திருக்குறள் ஓர் உலகப் பொது நூல்' என்ற நூலை கனடா அண்ணாமலை பல்கலைக்கழக விரிவுரையாளர் கவியாசான் திரு. சண்முகராசா சின்னத்தம்பி அவர்களும் அறிமுகம் செய்து வைத்தனர். இவர்கள் மூவரும் பேராசிரியரின் மாணவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதைத் தொடர்ந்து நூல் ஆசிரியர் பேராசிரியர் இ. பாலசுந்தரம் அவர்களின் ஏற்புரை இடம் பெற்றது. ஏற்புரையில் அவர் 'இது போன்ற ஆய்வு நூல்களின் அவசியம் பற்றியும், எமது மொழி இனம், நிலம், பாரம்பரியம் போன்றவற்றை ஆதாரத்துடன் தக்க வைக்க வேண்டியதன் அவசியத்தையும் எடுத்துரைத்தார். ஆதிகாலத்தில் தமிழர்கள் வாழ்ந்த லெமூரியாக் கண்டம் பற்றியும், அதைப்பற்றி மேலும் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டும்' என்றும் விபரமாக எடுத்துக் கூறினார்.

அவரது ஏற்புரையைத் தொடர்ந்து சுவாமி விபுலானந்தர் தமிழ் ஆய்வு மையத்தின் செயற்குழு உறுப்பினர் திருமதி விமலா பாலசுந்தரம் அவர்கள் நன்றியுரை வழங்கினார். அதைத் தொடர்ந்து நூல் பிரதிகள் ஆர்வலர்களுக்கு வழங்கப் பட்டு, நிகழ்வு இனிதே முடிவுற்றது.

---




# வியுக்தியார் பதில்கள்

**இரா. ஜெயருபன்,**
**பூந்தோட்டம், வவுனியா.**

**கேள்வி:** 'நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் ஒரு சமூகத்தை மாத்திரம் மையப்படுத்தி வேட்பாளர் நிறுத்தப்படக்கூடாது. இதன் அடிப்படையில், தமிழ் பொது வேட்பாளர் கருத்தியலை ஆதரிக்கவில்லை. பொது வேட்பாளரை நிறுத்துவது இல்லை என்று தமிழ் அரசு கட்சி தீர்மானித்துள்ளது. அத்துடன், ஜனாதிபதித்தேர்தலில் போடியிடும் பிரதான வேட்பாளர்களுடன் எதிர்காலத்தில் பேச்சுகளை நடத்துவோம்" என்று தமிழ் அரசு கட்சியின் சுமந்திரன் எம்.பி. கூறியுள்ளாரே?.

**வியுக்தியார்:** இரண்டு விடயங்களை அவர் இதன் மூலம் மீண்டும் நிரூபித்திருக்கிறார். ஒன்று: கடந்த பதினைந்து வருடங்களாக தானும் சம்பந்தனும் நினைத்தவற்றைத்தான், தமிழ் அரசு கட்சியோ அல்லது தமிழ் தேசியக் கூட்டமைப்போ தமது கொள்கை முடிவுகளாக ஏற்றுக்கொண்டிருந்தது போலவே இப்போதும் தமிழ் அரசு தான் முடிவுசெய்வதைத்தான் தமது கொள்கை முடிவாக ஏற்றுக்கொள்கின்றது என்பது. இரண்டாவது: கட்சியிலுள்ள மற்றையவர்கள், தலைவர் மாவையாக இருந்தாலும் சரி, தன்னோடு போட்டியிட்டு வெற்றி பெற்ற புதிய தலைவர் சிறிதரனாக இருந்தாலும் சரி, எல்லோரும், அவரது பாசையில் சொன்னால் 'கிறேசி பீப்பிள்கள்" தான் என்பதை நிரூபித்திருக்கிறார்.

---

**சபா. சிவநாதன்,**
**குரும்பசிட்டி, தெல்லிப்பளை.**

**கேள்வி:** 'இலங்கை தமிழ் அரசுக்கட்சி தமிழ் பொது வேட்பாளரை நிறுத்துவதா அல்லது தேர்தலில் போட்டியிடும் பிரதான வேட்பாளர்களில் ஒருவரை ஆதரிப்பதா என்பது தொடர்பில் எந்தவொரு தீர்மானத்தையும் எடுக்கவில்லை. இந்த நிலையில், ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளர் ஆதரவு அல்லது எதிர்ப்பு நிலைப்பாடு தொடர்பில் யாரேனும் பேசினால் அது அவர்களின் சொந்த விருப்பு மட்டுமே - அது கட்சியின் தீர்மானம் அல்ல." என்று தமிழ் அரசின் எம்.பி. சிவஞானம் சிறிதரன் தெரிவித்துள்ளாரே?.

**வியுக்தியார்:** அவரால் இப்படி அறிவிப்பதைத் தவிர வேறு எதைத்தான் செய்யமுடியும். மேலே ஜெயரூபனின் கேள்வியையும் அதற்கான வியுக்தியாரின் பதிலையும் படித்திருப்பீர்கள். தமிழ் பொதுவேட்பாளரை நிறுத்துவதில்லை என்று தமிழ் அரசு கட்சி முடிவெடுத்ததாக சுமந்திரன் சொல்வது பொய் என்பதை நிரூபிக்கவேண்டுமானால், பொது வேட்பாளருக்கு ஆதரவு நிலையை வெளிப்படுத்திவரும் சிறிதரனும் மாவை சேனாதிராசாவும் அதனை கட்சியின் முடிவாக மாற்றிக் காட்டுவது தான் அவர்கள் ஆளுமையுள்ள தலைவர்கள் என்பதை பறைசாற்ற உதவுமே தவிர, மறுப்பு அறிக்கை வெளியிடுவதால் எந்த பயனுமில்லையே.

**கந்தையா முகுந்தன்**
**சுவாமியார் வீதி, கொழும்புத்துறை.**

**கேள்வி:** ஜனாதிபதித் தேர்தல் நடக்குமா நடக்காதா என்ற பல்வேறு ஊகங்கள் நிலவிவந்த நிலையில், எதிர்வரும் செப்ரெம்பர் 21ஆம் திகதி தேர்தல் நடை பெறும் என்று தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு அதிவிசேட வர்த்தமானி மூலம் வெள்ளிக்கிழமை அறிவித்துவிட்டது. உடனேயே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் சுயேட்சை வேட்பாளராக போட்டியிடுவதற்காக கட்டுப்பணத்தையும் செலுத்திவிட்டாார். இனியாவது தேர்தல் நடக்கும் என்று நம்புவீர்கள்தானே?

**வியுக்தியார்:** தேர்தல் அறிவிப்பு வெளிவந்த உடனேயே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முதல் ஆளாக கட்டுப்பணம் செலுத்தியதுதான் இப்போது பல சந்தேகங்களை ஏற்படுத்துகின்றது. இதுவரை தான் போட்டியிடப்போவதாகக்கூட உத்தியோகபூர்வமாக அறிவிக்காத மனுசன், முதல் ஆளாக கட்டுப்பணம் செலுத்தியிருப்பது, உள்ளூராட்சி தேர்தலில் வேட்புமனுவையும் தனது ஐதேக மூலம் தாக்கல்செய்துவிட்டு தேர்தலை ஒத்திவைத்ததை ஞாபகப்படுத்துகின்றதே. இனி தேர்தலை ஒத்திவைக்க ஏதேனும் முயற்சி நடந்தாலும், ஜனாதிபதி மீது யாரும் கைநீட்டப்போவதில்லையே.

---

**கந்தையா முகுந்தன்**
**சுவாமியார் வீதி, கொழும்புத்துறை.**

**கேள்வி:** பொலிஸ் மா அதிபர் பதவிக்கு இடைக்காலத் தடை விதித்து உயர்நீதிமன்றம் தீர்ப்பு கூறியுள்ளபோதிலும், தற்போதைய பொலிஸ் மாஅதிபரை நியமிக்க அரசமைப்பு [illegible] நீதிமன்றத்தால் மாற்றியமைக்க முடியாது என்று பிரதமர் தினேஸ் குணவர்த்தன கூறியுள்ளாரே. சட்டங்களையே உருவாக்கும் சட்டவாக்க சபையான பாராளுமன்றத்தின் முடிவு மீது உயர்நீதிமன்றம் தலையிடுவது சரியல்ல என்ற வாதம் சரியானதுபோலத் தானே இருக்கின்றது?

**வியுக்தியார்:** : அப்படியெனில் இதே ரணில் விக்கிரமசிங்க பிரதமராக இருந்த நல்லாட்சி அரசாங்க காலத்தில், ஜனாதிபதியாக இருந்த மைத்திரிபால சிறிசேன, ரணிலை பதவியிலிருந்து நீக்கிவிட்டு பிரதமராக மகிந்த ராஜபக்சவை நியமித்தபோது உயர்நீதிமன்றம் சென்ற ரணில், அந்த நீதிமன்றின் தீர்ப்பை ஏற்றுக்கொண்டாரே. பின்னர் பாராளுமன்றில் தனது பலத்தை அவர் நிரூபித்தாலும், நீதிமன்ற தீர்ப்பை எற்றுத்தானே மகிந்தவை பதவி விலகச் சொன்னார். அப்போது நீதிமன்ற தீர்ப்பை ஏற்றுக்கொண்ட அவர்தான் இப்போது அதனை ஏற்றுக்கொள்ள மறுக்கிறார். இதுதான் முரண்நகையாக இருக்கின்றது.

---

**எம். அகிலேஸ்வரன்**
**சித்தன்கேணி.**

**கேள்வி:** தமிழ் பேசும் மக்கள் எனும் பொது அடிப்படையில் தமிழரும் முஸ்லிம்களும் ஒன்று சேரவேண்டிய தருணம் இது. இதற்கு தமிழர் விடுதலைக் கூட்டணி தயாராக உள்ளது என்று கூட்டணியின் பொதுச் செயலாளர் வீ. ஆனந்தசங்கரி அழைப்பு விடுத்துள்ளாரே.

**வியுக்தியார்:** இரா. சம்பந்தன் உயிருடன் இருக்கும் வரை ஆனந்த சங்கரி ஐயா, அவரை வசைபாடுவதையே ஒரே நோக்கமாக கொண்டிருந்தார். தனது அறிக்கைகள் எதிலும் அவரை குறைகாணாமல் விட்டதில்லை. ஆனால் சம்பந்தன் மறைந்ததும், அவரது படத்தை வைத்து அஞ்சலி செலுத்தினார். சம்பந்தன் இருக்கும்போது சங்கரி ஐயா இப்படி ஒற்றுமையைப்பற்றி கதைத்திருக்கலாம். ஏன் அதற்கு இதுவரை காத்திருந்தார் என்பதுதான் புரியவில்லை.

---

**எஸ். செந்துஜன்,**
**ராசவீதி, கோப்பாய்.**


**கேள்வி:** 'கோவிட் தொற்றுநோய் நிலவிய காலப்பகுதியில் இலங்கையில் முன்னெடுக்கப்பட்ட கட்டாய தகன கொள்கைக்கு மன்னிப்பு கேட்பதென்பது ஒரு சிறந்த விடயம். ஆனால், மன்னிப்புக் கேட்டு தப்பி ஓடவேண்டாம். பாதிக்கப்பட்ட முஸ்லிம் மக்களுக்கு அரசு இழப்பீடு வழங்க வேண்டும்" என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசா கூறியிருப்பது நியாயமானதுதானே?

**வியுக்தியார்:** மன்னிப்புக் கேட்டால் போதுமானது அல்ல அந்த முடிவை எடுத்தவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் என்று கேட்பது நியாயமானது அதற்காக இழப்பீடு கொடுக்கவேண்டும் என்பது சரியானதா என்பது தெரியவில்லை. முஸ்லிம்களைப் பொறுத்தவரை, ஒருவர் மரணித்தால் அவர்களின் ஜனாசாவை தகனம் செய்வது பாவம் (ஹறாம்). அதாவது தகனம் செய்யும் முடிவை எடுத்தவருக்குத்தான் பாவம். அப்படியெனில் அந்த முடிவை எடுத்தவருக்கல்லவா இழப்பீடு கொடுக்க வேண்டும்?

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பாலஸ்தீன தேசிய ஒற்றுமைக்கான பெய்ஜிங் பிரகடனம்!

ஐங்கரன் விக்கினேஸ்வரா



பெய்ஜிங்கில் பாலஸ்தீன இயக்கங்களான ஹமாஸ் மற்றும் ஃபத்தா அகியவற்றுக்கிடையே பல வருடங்களாக நீடித்து வந்த பிளவுக்கு முடிவு கட்டுவதற்கான பிரகடனத்தில் ஜூலை 23இல் இரு இயக்கத்தினரும் கையெழுத்திட்டுள்ளனர்.

சீன வெளியுறவு அமைச்சர் வாங் யி முன்னிலையில் ஹமாஸ் அதிகாரி முசா அபு மார்சுக், ஃபாத்தா அமைப்பின் முக்கியஸ்தர் மஹ்முட் அல் அலாவோல் ஆகியோர் உட்பட மற்ற பாலஸ்தீன அமைப்புகளைச் சேர்ந்த 12 பிரதிநிதிகள் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர்.

### ஹமாஸ் - ஃபத்தா முரண்பாடுகள்?

பாலஸ்தீன மண்ணில் ஹமாஸ் மற்றும் ஃபத்தா ஆகிய இரு கட்சிகள் நீண்ட காலமாக ஆதிக்கம் செலுத்துகின்றன.

2007 பாராளுமன்றத் தேர்தலில் ஜனாதிபதி மஹ்மூத் அப்பாஸின் நீண்டகால ஆதிக்கம் செலுத்தும் ஃபத்தா கட்சியைத் தோற்கடித்த பின்னர், 2007 ஆம் ஆண்டு முதல் காசா பகுதியில் ஹமாஸ் நடைமுறை ஆட்சியாளராக இருந்து வருகிறது.

அப்போதய வாக்கெடுப்பின் முடிவை ஃபத்தா அங்கீகரிக்க மறுத்ததால், ஹமாஸ் அமைப்பால் காசாவில் இருந்து வெளியேற்றப்பட்டனர். அதன் பின்னர் ஹமாஸ் ஆக்கிரமிக்கப்பட்ட பாலஸ்தீனப் பகுதிகளான காசா பகுதியையும், ஃபத்தா மேற்குக் கரையை அன்றிலிருந்து ஆட்சி செய்து வந்தன.

2007 பிற்பகுதியில் இரு அமைப்புகளும் ஆயுத மோதலை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான ஒப்பந்தத்தை முதலில் அறிவித்தனர். பின்னர் இந்த ஒப்பந்தம் தோல்வி அடைந்தது.

### ஃபத்தா தோற்றம்:

ஃபத்தா என்பது அரபு மொழியில் ஹரகாத் அல்-தஹ்ரிர் அல்-ஃபிலிஸ்தினியா அல்லது பாலஸ்தீனிய தேசிய விடுதலை இயக்கத்தின் சுருக்கமாகும். ஃபத்தா என்ற சொல்லுக்கு வெற்றி என்று பொருள்.

புலம்பெயர்ந்த பாலஸ்தீனியர்களால் 1948 நக்பாவிற்குப் பிறகு குவைத்தில் நிறுவப்பட்டது. பாலஸ்தீனிய அமைப்பின் மறைந்த தலைவர் - யாசர் அராபத், உதவியாளர்கள் கலீல் அல்-வசீர் மற்றும் சலாஹ் கலஃப் மற்றும் பாலஸ்தீனிய அதிகாரத்தின் தற்போதைய தலைவரான மஹ்மூத் அப்பாஸ் ஃபத்தா போன்றோரால் நிறுவப்பட்டது.

இந்த அமைப்பும் பாலஸ்தீனத்தை விடுவிக்க இஸ்ரேலுக்கு எதிரான போராட்டத்தை தொடர்ந்தது.

### ஹமாஸ் தோற்றம்:

ஹமாஸ் என்பது ஹரகத் அல்-முகவாமா அல்-இஸ்லாமியா அல்லது இஸ்லாமிய எதிர்ப்பு இயக்கம் என்றும் இச்சொல்லுக்கு வைராக்கியம் என்று பொருள்படும்.

1987 இல் காஸாவில் இமாம் ஷேக் அகமது யாசின் மற்றும் உதவியாளர் அப்துல் அஜிஸ் அல்-ரான்டிசி ஆகியோரால் நிறுவப்பட்டது. முதல் இன்டிபாடா அல்லது பாலஸ்தீனியப் பிரதேசங்களை இஸ்ரேல் ஆக்கிரமித்ததற்கு எதிராக பாலஸ்தீனிய எழுச்சி தொடங்கிய காலத்திலேயே எழுச்சி பெற்றது.

இந்த இயக்கம் எகிப்தில் முஸ்லிம் சகோதரத்துவத்தின் ஒரு கிளையாகத் தொடங்கியது. பாலஸ்தீனத்தை விடுவிக்கும் நோக்கத்துடன் இஸ்ரேலுக்கு எதிராக ஆயுதப் போராட்டத்தைத் தொடர இஸ் அல்-தின் அல்-கஸ்ஸாம் படையணி என்ற இராணுவப் பிரிவையும் உருவாக்கியது.

அதேவேளை இஸ்ரேலிய ஆக்கிரமிப்பினால் பாதிக்கப்பட்ட பாலஸ்தீனியர்களுக்கு சமூக நலத் திட்டங்களையும் வழங்கியது.


இந்த இரு அமைப்புகளும் நீண்ட காலமாக அதிகார - இராணுவ மேலாதிக்கத்திற்காக மோதி வருகின்றன. எதிர்காலத்தில் இஸ்ரேலுடன் போர் முடிவுக்கு வந்ததும் காசாவை ஆட்சி செய்ய இடைக்கால தேசிய நல்லிணக்க அரசாங்கம் அமைக்கப்படும் ஒப்பந்தத்தில் கையெழுத்திட இரு அமைப்புகளும் இப்போது இணங்கி உள்ளன.

தேசிய ஒற்றுமைக்காக ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளோம். இப்பாதை முழுமையடைய தேசிய ஒற்றுமைதான் ஒரே வழி. அதில் கடப்பாடு கொண்டுள்ளோம். அதை ஏற்க மற்ற அமைப்புகளுக்கு அழைப்பு விடுக்கிறோம் என ஹமாஸ் அமைப்பின் அபு மார்சுக் தெரிவித்தார்.

### ஹமாஸ் - ஃபத்தா நல்லிணக்கம் :

நிகழ்காலத்தில் காசாவில் மோதல் தொடர்வதுடன், சர்வதேச முயற்சிகள் மூலம் போர் நிறுத்தம் தீவிரப்படுத்துகின்றன. இவ்வேளையில் பாலஸ்தீனத்தில் ஒற்றுமை அரசாங்கம் அமைப்பது குறித்து, சீன அரசு ஊடகம் தகவலை வெளியிட்டுள்ளது.

தற்போது சீன வெளியுறவு மந்திரி வாங் யீ உடனான பேச்சுவார்த்தையின் போது எட்டப்பட்ட இந்த பிரகடனம், இரண்டு பெரிய பாலஸ்தீனிய அரசியல் குழுக்களுக்கு இடையேயான ஆழமான பிளவைத் தீர்ப்பதற்கான ஒரு முக்கியமான படியைக் குறிக்கிறது.







பாலஸ்தீனிய பிரிவுகள் ஹமாஸ் மற்றும் ஃபத்தா பெய்ஜிங்கில் ஒரு வரலாற்று பிரகடனத்தில் கையொப்பமிட்டுள்ளனர். இது அவர்களின் பல ஆண்டுகால விரிசலை முடிவுக்குக் கொண்டுவருவதையும், ஒரு தேசிய ஒற்றுமை அமைப்பை உருவாக்குவதையும் நோக்கமாகக் கொண்டதாகும்.

இருப்பினும், சமரசத்திற்கான முந்தைய முயற்சிகள் பலவும் தோல்வியடைந்து உள்ளன. 2011 இல் இதேபோன்ற ஒப்பந்தம் செய்யப்பட்டதும் அறிந்ததே. தற்போது சீனா ஆதரவுடன் நீண்டகால பேச்சுவார்த்தையின் பின்னர் இந்த ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.

பாலஸ்தீனிய ஒற்றுமையை வலுப்படுத்திய பெய்ஜிங் பிரகடனம் இரு பிரிவுகளாலும் மற்ற 12 அரசியல் குழுக்களாலும் கையெழுத்திடப்பட்டது. அத்துடன் ஆனால் 1967 எல்லைகளின் அடிப்படையில் பாலஸ்தீன அரசை நிறுவுவதற்கான உறுதிப்பாட்டை உறுதிப்படுத்தியும் உள்ளனர்.

### மலேசிய பிரதமர் ஆதரவு:

பாலஸ்தீன ஒற்றுமையை வலுப்படுத்தும் நோக்கில், பெய்ஜிங்கில் கையெழுத்தான ஃபத்தா, ஹமாஸ் இடையேயான ஒப்பந்தத்தை மலேசியப் பிரதமர் டத்தோ சிறி அன்வார் இப்ராஹிம் வரவேற்றுள்ளார். பெய்ஜிங் பிரகடனம் பாலஸ்தீன ஒற்றுமையை அடைவதற்கான ஒரு நம்பிக்கைக்குரிய படியை பிரதிநிதித்துவப்படுத்துகிறது. பாலஸ்தீன மக்களின் உரிமைகளை உணர்ந்து கொள்வதில் முக்கியமானது. பாலஸ்தீனிய அரசியல் பிரிவுகளுக்கு இடையே பேச்சுவார்த்தைகளை எளிதாக்கியதற்காக சீன மக்கள் குடியரசின் அரசாங்கத்தையும் அவர் பாராட்டினார். இந்த ஒற்றுமைப் பிரகடனம் உறுதியான முடிவுகளாக பலஸ்தீன மக்களுக்கு பயனளிக்கும் விதத்தில் அமைய வேண்டும். இந்தப் பிரகடனம் எதிர்கால அறைகூவல்களைத் தாங்கிப்பிடிக்கும் என்பது எனது உண்மையான நம்பிக்கை என்று அவர் கூறினார். இதற்கு சர்வதேச நாடுகளின் ஆதரவு இன்றியமையாதது என்று குறிப்பிட்டார்.

சர்வதேச அரசாங்கங்கள் பாலஸ்தீன அரசை அங்கீகரித்து இந்த ஒற்றுமை முயற்சிகளுக்கு ஆதரவளிக்குமாறு வலியுறுத்தினார்.

பாலஸ்தீனியர்கள் மீது இஸ்ரேலியப் படைகளால் நடத்தப்படும் காட்டுமிராண்டித்தனமான தாக்குதல்களை முடிவுக்குக் கொண்டுவருவதற்கு சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினரும் செயல்பட வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டார்.

### வரலாற்றில் மாபெரும் நிகழ்வு:

பாலஸ்தீனத்தில் செயற்பட்டு வரும் 14 போராட்ட இயக்கங்கள் இனி வருங் காலத்தில் ஒற்றுமையாக ஒன்றிணைந்து செயல்படுவது என சீனத் தலைநகர் பெஜிங்கில் வைத்து கூட்டு ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட்டுள்ளன. இந்த 14 அமைப்புகளில் ஹமாஸ் மற்றும் ஃபத்தா என்பன பிரதான அமைப்புகளாகும்.

பாலஸ்தீன மக்கள் இன்றைய நிலைக்கும், இஸ்ரேல் பலஸ்தீன மக்கள் மீது தொடர்ந்து ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளையும், போர் நடவடிக்கைகளையும் எடுத்து வருவதற்கு பாலஸ்தீனர்களின் போராட்ட அமைப்புகளிடையே நீடித்து வந்த பிளவுகளும் ஒரு காரணமாகும்.

சீன தனது வெளிவிவகார அமைச்சர் வாங் யீ மூலம் பாலஸ்தீன விடுதலைப் போராட்டங்கள் மத்தியில் ஐக்கியத்தை ஏற்படுத்தும் முயற்சியை எடுத்தது. அதன் விளைவாக 14 அமைப்புகளின் பிரதிநிதிகளும் சீனாவில் கூடி 3 நாட்களாக பேச்சுவார்த்தை நடாத்தி இறுதியில் ஒற்றுமை ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளனர்.

ஏற்கெனவே சீனா, ஈரானுக்கும் சவூதி அரேபியாவுக்கும் இடையில் நிலவி வந்த நீண்டகால பகைமையை பேச்சுவார்த்தை மூலம் தீர்த்து வைத்தது என்பது குறிப்பிடத்தக்கது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத்தில் சிறப்பாக நடந்தேறிய சதுப்பு நிலக்காடுகள் விழிப்புணர்வு தினம்





யாழ்ப்பாணம், ஜூலை 28

இன்றைய இளம் சிறார்கள் மத்தியில் சதுப்பு நிலக் காடுளைப் பேண வேண்டியதன் அவசியத்தை எடுத்துக் காட்டும் வகையில் நிகழ்நிலை வினாடி வினாப்போட்டி ஒன்றை நடத்தி அதில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு பரிசும், சான்றிதழும் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வு யாழ். வட்டு இந்துக்கல்லூரி சோமசுந்தரப்புலவர் அரங்கில் சிறப்பாக இடம்பெற்றது. இந்த நிகழ்வை கடற்கரையோர சூழல் பாதுகாப்பு அதிகார சபையும், சுத்தமான கடல் படைகள் மற்றும் எதிர்காலத்துக்கான சுற்றுச்சூழல் கழகமும் இணைந்து நடத்தியிருந்தன.

இதில் பிரபல உயிரியல் ஆசான் எஸ். வி. குணசீலனும் கடற்கரையோர சூழல் பாதுகாப்பு அதிகார சபையின் அதிகாரி சதீஷும், எதிர்காலத்துக்கான சுற்றுச்சூழல் கழகம் சார்பில் ம. சசிகரனும் கலந்து சிறப்பித்தனர்.


இந்த நிகழ்வில் குடாநாட்டின் பல்வேறு பாகங்களிலிருந்தும் அதிக மாணவர்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர்.

கிழக்கு மாகாணத்திலிருந்து பங்குபற்றி வெற்றியாளர்களாகத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு எதிர்வரும் வாரங்களில் நடைபெறும் எனவும் நிகழ்வு ஏற்பாட்டுக் குழுவினர் தெரிவித்தனர்.

(எ)

இலங்கைக்கு கடத்தவிருந்த

# 5, 70, 000 வலி நிவாரணி மாத்திரைகள் பறிமுதல்



ராமநாதபுரம், ஜூலை 28

தமிழ்நாடு ராமநாதபுரத்தை அடுத்த மானாங்குடி கடற்கரையில் இருந்து இலங்கைக்கு கடத்துவதற்காக கடற்கரையில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த ஒரு கோடியே 80 இலட்சம் ரூபாய் பெறுமதியான 5 இலட்சத்து 70 ஆயிரம், வலி நிவாரணி மாத்திரைகளை திருச்சி சுங்கத்துறை நுண்ணறிவு பிரிவு அதிகாரிகள் வெள்ளிக்கிழமை பறிமுதல் செய்தனர். அத்தோடு, தலைமறைவான சந்தேக நபர் ஒருவரை தீவிரமாக தேடி வருகின்றனர்.

ராமநாதபுரம் மாவட்டம் ராமேஸ்வரம், மண்டபம் வேதாளை மரைக்காயர் பட்டினம், மானாங்குடி உள்ளிட்ட கடற்கரையில் இருந்து தனுஷ்கோடி கடல் வழியாக கடலட்டை, மஞ்சள், இஞ்சி, வலி நிவாரணி மாத்திரைகள், கஞ்சா உள்ளிட்டவை இலங்கைக்கு கடத்தப்பட்டு வருகின்றன.

கடல் வழியாக நடக்கும் கடத்தல் சம்பவங்களை தடுக்க மத்திய சுங்கத்துறை, கடலோர காவல் படை, கடற்படை மற்றும் மத்திய, மாநில உளவுத் துறை அதிகாரிகள் தீவிர கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டு வந்தாலும் அதையும் மீறி சமீப காலமாக அதிகளவில் கடத்தல் சம்பவங்கள் நடைபெற்று வருகின்றன.

இந்த நிலையில் மானாங்குடி கடற்கரையில் இருந்து போதைப்பொருளை இலங்கைக்கு கடத்துவதற்காக பதுக்கி வைக்கப்பட்டிருப்பதாக கிடைத்த தகவலின் அடிப்படையில் சுங்கத்துறை நுண்ணறிவு பிரிவு அதிகாரிகள் குழு, புதுபடத்திலிருந்து மானாங்குடி வரையுள்ள கடற்கரை பகுதியில் தீவிர சோதனை நடத்தினர்.

அப்போது. இலங்கைக்கு கடத்துவதற்காக மானாங்குடி கடற்கரையில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த 10 பெட்டிகள் கைப்பற்றப்பட்டன. அவற்றைத் திறந்து சோதனை செய்த போது அதில் வலி நிவாரணி மாத்திரைகள் இருந்தது தெரியவந்தது.

இதனையடுத்து, அந்தப் பெட்டிகளை மண்டபம் சுங்கத்துறை அலுவலகத்துக்கு எடுத்து வந்து ஆய்வு செய்தபோது, ஒரு பெட்டியில் 57 ஆயிரம் மாத்திரைகள் வீதம் 10 பெட்டியில் 5 இலட்சத்து 70 ஆயிரம் மாத்திரைகள் இருந்தன.

சுங்கத்துறை அதிகாரிகள் நடத்திய முதல் கட்ட விசாரணையில் இந்த வலி நிவாரணி மாத்திரைகளை நேற்று முன்தினம் இரவு இலங்கைக்கு படகு மூலம் கடத்துவதற்காக பதுக்கி வைக்கப்பட்டிருந்தது தெரிய வந்துள்ளதாகவும், இந்தக் கடத்தல் சம்பவத்தில் தொடர்புடையதாக கருதப்படும் சந்தேக நபர் ஒருவர் தலைமறைவாகியுள்ளதால் அவரைத் தீவிரமாகத் தேடி வருவதாகவும் தெரிய வந்துள்ளது.

(எ)

# வர்த்தகர்களை இலக்கு வைத்து மோசடிகளில் ஈடுபடும் கும்பல்!

யாழ்ப்பாணம், ஜூலை 28

யாழ்ப்பாணத்தில் வர்த்தகர்களை இலக்கு வைத்து இலங்கை தொலைத்தொடர்பு திணைக்களம் மற்றும் அரச வங்கிகளின் பெயர்களைப் பயன்படுத்தி பண மோசடிகள் இடம்பெறுவதாக எச்சரிக்கப்பட்டுள்ளது.

சுன்னாகம், யாழ்ப்பாணம் உள்ளிட்ட பகுதிகளில் உள்ள வர்த்தக நிலைய உரிமையாளர்களின் தொலைபேசிக்கு இலங்கை தொலைத்தொடர்பு நிறுவகத்தில் (ரெலிக்கொம்) இருந்து கதைப்பதாகவும், நீங்கள் உங்களது தொலைபேசி கட்டணங்களை சிறந்த முறையில் செலுத்துவதால் உங்களுக்கு பரிசு வழங்கவுள்ளதாகவும் அதற்கு உங்கள் அடையாள அட்டை இலக்கம், வங்கிக் கணக்கு இலக்கம் என்பனவற்றைத் தருமாறும் கோரியுள்ளனர்.

இத்தரவுகள் வர்த்தகர்களினால் வழங்கப்பட்ட சிறிது நேரத்தில் ஓ. ரி. பி. இலக்கம் வங்கியின் பெயரிலேயே அனுப்பப்படுவதாகும் சிலருக்கு வங்கிக்கு பணம் அனுப்பியது போன்று வங்கியின் பிரத்தியேக செயலிக்கே தரவுகள் அனுப்பப்படுவதாகவும் வர்த்தகர்கள் தெரிவித்துள்ளனர்.

இதன்பின் மீள் அழைப்பெடுக்கும் மர்மநபர்கள் அவ் குறித்த இலக்கங்களினை கோருவதாக சுட்டிக்காட்டிய வர்த்தகர்கள் தாம் சந்தேகமடைந்து அந்த இலக்கத்தை மீளத் தொடர்பு கொள்ள முடியவில்லை எனவும் தெரிவித்துள்ளனர்.

எனவே, இவ்வாறான தொலைபேசி அழைப்புகள் தொடர்பில் அவதானமாகச் செயல்படுமாறும் முறைகேடுகளால் பாதிக்கப்பட்டிருப்பின் அருகில் உள்ள பொலிஸ் நிலையத்தையோ அல்லது கணினி குற்றப் பிரிவின் துரித இலக்கங்களையோ நாடுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

(எ)

# அரசியல் தீர்வை இன்னமும் காணமுடியாமல்...

(07ம் பக்கத் தொடர்ச்சி)

தனது சடலத்தின் மேலாக மாத்திரமே வடமாகாணத்தினதும் கிழக்கு மாகாணத்தினதும் இணைப்பு இடம்பெறமுடியும் என்று சூளுரைத்தவர் கிழக்கில் ஒரு சர்வஜன வாக்கெடுப்பு என்ற நிபந்தனைக்கு உட்பட்டதாக இணைப்பை அனுமதிக்கும் உடன்படிக்கையில் கைச்சாத்திட்டார்.

அதிகாரப்பரவலாக்கத்தை ஏற்றுக்கொள்ளவேண்டிய அவசியத்தை ஜெயவர்த்தனவுக்கு உணர்த்தி அவரை நம்பவைப்பதற்கு பெரிய கஷ்டப்பட்டதாக இலங்கை இனநெருக்கடியை கையாளுவதற்கு அனுப்பிவைக்கப்பட்ட முதல் இந்திய தூதுவர் கோபாலசுவாமி பார்த்தசாரதி தன்னிடம் ஒரு தடவை கூறியதாக தமிழர் ஐக்கிய விடுதலை கூட்டணியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் புகழ்பெற்ற அரசியலமைப்புச் சட்டநிபுணருமான கலாநிதி நீலன் திருச்செல்வம் அந்த நாட்களில் பத்திரிகையில் எழுதிய கட்டுரை ஒன்றில் குறிப்பிட்டிருந்தார்.

13 வது திருத்தமும் மாகாணசபைகள் முறையும் 37 வருடங்களாக நடைமுறையில் இருந்துவருகின்ற போதிலும், எமது தேசிய இனப்பிரச்சினை முடிவுக்கு வரவில்லை. 13 வது திருத்தமோ அல்லது மாகாணசபைகள் முறையோ தங்களது பிரச்சினைக்கு நிலையான ஒரு தீர்வாக அமையமுடியாது என்று தமிழர்களும் அவர்களை பிரதிநிதித்துவம் செய்யும் முக்கியமான அரசியல் கட்சிகளும் கூறிவருகின்ற அதேவேளை, இந்திய தலையீட்டைத் தொடர்ந்து நிறுவப்பட்டது என்ற ஒரே காரணத்துக்காகவே சிங்கள அரசியல் சமுதாயம் மாகாணசபைகள் முறையை இதுவரை பொறுத்துக் கொண்டிருக்கிறது.

மாகாணசபைகளுக்கான அதிகாரங்களை மேம்படுத்துவதற்கோ அல்லது குறைந்தபட்சம் 13 வது திருத்தத்தையாவது முழுமையாக நடைமுறைப்படுத்தவோ இலங்கையை இணங்கவைக்கவோ அல்லது நெருக்குதல் கொடுக்கவோ இந்தியர்களினாலும் தமிழர்களினாலும் முடியவில்லை.

சமாதான உடன்படிக்கைக்கு பின்னரான அனர்த்தனமான நிகழ்வுகளை தொடர்ந்ததும் தற்போதைய புவிசார் அரசியல் பின்புலத்திலும் இலங்கை இனநெருக்கடியில் இந்தியா அண்மைய எதிர்காலத்தில் உன்னிப்பான அக்கறை காட்டும் என்று எதிர்பார்ப்பதற்கில்லை.

ஆனால், தமிழ் அரசியல் கட்சிகள் இலங்கை மீது நெருக்குதலைப் பிரயோகிக்குமாறு இந்தியாவிடம் வேண்டுகோள் விடுத்த வண்ணமே இருக்கின்றன. 13 வது திருத்தத்தை நடைமுறைப்படுத்தி மாகாணசபை தேர்தல்களை நடத்துமாறு இடைக்கிடை இலங்கை அரசாங்கத்தை கேட்டுக்கொள்வதுடன் மாத்திரம் இந்தியா இப்போது நிறுத்திக்கொள்கிறது.

அதேவேளை, கறுப்பு ஜூலைக்கு பிறகு நான்கு தசாப்தங்களுக்கும் அதிகமான காலமும் உள்நாட்டுப்போர் முடிவுக்கு வந்து 15 வருடங்களும் கடந்துவிட்ட போதிலும், இனநெருக்கடி ஏதோ இன்று நேற்று தோன்றியதைப் போன்று பிரதான அரசியல் சக்திகள் அடிப்படைப் பிரச்னைகள் குறித்து இன்னமும் விவாதித்துக் கொண்டிருப்பது பெரும் துரதிர்ஷ்டவசமானதாகும்.

சிறுபான்மைச் சமூகங்களின் நியாயபூர்வமான அரசியல் அபிலாசைகளையும் மனக்குறைகளையும் கையாளக் கூடிய பயனுறுதியுடைய ஒரு அரசியல் தீர்வு இல்லாமல் தேசிய இனப்பிரச்சினை தொடரப்போவதற்கான அறிகுறிகளையே காணக்கூடியதாக இருக்கிறது.

இன்னும் இரு மாதங்களில் நடைபெறப்போகும் ஜனாதிபதி தேர்தலின் மூன்று பிரதான வேட்பாளர்களான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச, தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரா குமார திசாநாயக்க ஆகியோர் வடக்கிற்கு சென்று 13 வது திருத்தத்தை நடைமுறைப்படுத்தப்போவதாக உறுதியளித்திருக்கிறார்கள். ஆனால், மாகாணசபைகளுக்கான அதிகாரங்கள் குறித்து அவர்கள் அடிக்கடி குழப்பமான கருத்துக்களையே வெளியிடுகிறார்கள்.

எமது அறிவுக்கு எட்டியவரையில், உலகின் வேறு எந்த நாடுமே இலங்கையைப் போன்று அதன் அரசியலமைப்பில் மூன்று தசாப்தங்களுக்கும் அதிகமான காலமாக இருந்துவரும் ஏற்பாடு ஒன்றை நடைமுறைப்படுத்துவதில் குழப்பத்துக்குள்ளாகியதாக தெரியவில்லை.

மறுபுறத்தில், தமிழ் கட்சிகள் ஐக்கியப்பட்ட நிலைப்பாடொன்றை முன்வைக்கக்கூடியதாக அரசியல் விவேகத்தையும் முதிர்ச்சியையும் வெளிக்காட்டுவதாக இல்லை.

கறுப்பு ஜூலை அனர்த்தங்களுக்காக கடந்த வாரம் பாராளுமன்றத்தில் நீதியமைச்சர் விஜேதாச ராஜபக்ச தமிழர்களிடம் மன்னிப்புக் கோரினார். இதற்கு முன்னர் ஜனாதிபதியாக இருந்தபோது சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவும் மன்னிப்புக் கோரினார். வேறு பல அரசியல்வாதிகளும் கறுப்பு ஜூலைக்காக வெட்கப்படுவதாக கூறியிருக்கிறார்கள். இந்த மன்னிப்புக் கோரல்களினால் எந்த மாற்றமும் ஏற்படப்போவதில்லை.

தென்னிலங்கையில் உள்ள தமிழர்களை துண்டுதுண்டாக வெட்டுவேன் என்று சில மாதங்களுக்கு முன்னர் கிழக்கில் நடுவீதியில் பொலிசார் முன்னிலையில் கூறிய ஒரு விகாராதிபதியும் மறுநாள் மன்னிப்புக் கோரி காணொளியை வெளியிட்டுவிட்டு எதுவும் நடக்காத மாதிரி அமைதியாக இருக்கிறார்.

இந்த நிலைவரங்கள் எல்லாவற்றையும் அடிப்படையாகக் கொண்டு நோக்கும்போது கடந்த கால அனர்த்தங்களில் இருந்து படிப்பினைகளைப் பெற்று தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றைக் காண்பதற்கு அரசியல் வர்க்கம் இன்னமும் கூட தயாரில்லாமல் இருப்பது ஒரு வெட்கக்கேடாகும். இது கறுப்பு ஜூலையை விடவும் பெரிய வெட்கக்கேடு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜனாதிபதி...

வருகின்றோம். வரிசை யுகம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது." - எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

"நாட்டில் அனைத்து பிரச்னைகளும் தீரவில்லை என்பதை நான் ஏற்கின்றேன். மக்கள் கஷ்டத்துக்கு மத்தியில்தான் வாழ்கின்றனர். கடன் சுமை அதிகரித்துள்ளது. இது எமக்கு புரிகின்றது. எனவேதான் பிரச்னைகளை கட்டங்கட்டமாக தீர்த்துவருகின்றோம்." - எனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூறினார்.

"அஸ்வெசும வழங்கப்படுகின்றது. புலமைப்பரிசில்கள் வழங்கப்படுகின்றன. உறுமய காணி உரிமை பத்திரம் வழங்கப்படுகின்றது. இவ்வாறு எம்மால் முடிந்த அனைத்தையும் செய்துவருகின்றோம். பெருந்தோட்ட மக்களுக்கும் காணி உரிமை வழங்கப்படும்." - எனவும் ஜனாதிபதி மேலும் குறிப்பிட்டார்.(அ)

## மகிந்த...

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு பொதுஜன பெரமுனவின் ஆதரவைப் பெற்றுக் கொள்வது தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த விடயம் தொடர்பில் நாளை திங்கட்கிழமை அரசியல் பிரிவுடன் கலந்துரையாடி தனது முடிவை அறிவிப்பதாக மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார். (அ)

## ரணிலின்...

சந்திப்புகள் அண்மையில் நடந்தன.

ஜனாதிபதித் தேர்தலில் தமக்கு ஆதரவளித்தால் மொட்டு கட்சிக்கு உள்ளாட்சிசபைத் தேர்தலில் 30 வீதமும், மாகாண சபை தேர்தலில் 35 வீதமும், நாடாளுமன்ற தேர்தலில் 40 வீதமும் போட்டியிடுவதற்கான ஒதுக்கீடுகளை வழங்குவதற்கு ஜனாதிபதி யோசனை முன்வைத்துள்ளார்.

எனினும், உள்ளாட்சி நிறுவனங்களுக்கு 90 வீதமும், நாடாளுமன்றத் தேர்தலில் 70 வீதமும், மாகாண சபை தேர்தலில் 70 வீதமும் தமது கட்சிக்கு ஒதுக்கப்பட வேண்டும் என பஸில் ராஜபக்ஷ வலியுறுத்தியுள்ளார்.

இதனால் இரு தரப்புகளும் இணக்கப்பாட்டுக்கு வருவது இழுபறியில் உள்ளது.

இந்நிலையில் ஜனாதிபதி மற்றும் பஸில் ராஜபக்ஷவுக்கும் இடையிலான மற்றுமொரு முக்கியத்துவம் வாய்ந்த கலந்துரையாடல் இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது. ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான தமது கட்சியின் நிலைப்பாட்டை மொட்டு கட்சி நாளை திங்கட்கிழமை அறிவிக்கவுள்ளது. (அ)

## யாழ்...

யாழ் நகர வணிகர்கள் மற்றும் பொதுமக்களின் தொலைபேசிக்கு அனாவசியமாக அழைப்புக்கள் மூலம் வங்கி இலக்கத்திற்கு பரிசு அனுப்புவதாக கூறி வங்கி இலக்கத்தையும் கைத்தொலைபேசிக்கு வரும் OTP கடவுச்சொல்லை கேட்கிறார்கள்.

6 இலக்கங்கள் கொண்ட ஓ.ரி.பி கடவுச்சொல்லை கூறியவுடன் வங்கிக் கணக்கிலுள்ள பணம் மர்மநபர்களால் களவாடப்படுகிறது.

மக்களை நம்பும் படி கதைத்து இந்த மோசடி செய்யப்படுகிறது.

குறுகிய காலப்பகுதிக்குள் அதிகளவிலான மோசடிகள் நடைபெற்றுள்ளது என்பது வங்கி முகாமையாளர்களால் எமக்கு அறியத்தரப்படுள்ளது.

எனவே அனைவரும் மிகவும் அவதானமாகவும் விழிப்புணர்வுடனும் இருக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம் என வர்த்தக சங்கம் மேலும் தெரிவித்துள்ளது. (அ)

## தமிழ் மக்கள்...

அடிப்படையிலேயே ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரான ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாக தெரிவு செய்தோம். இந்த இரண்டு ஆண்டு காலப்பகுதியில் பொதுஜன பெரமுனவின் ஒத்துழைப்பை இந்த ஜனாதிபதித் தேர்தலிலும் பெற்றுக் கொள்ளும் நோக்கில் அவர் செயற்பட்டார்.

நல்லாட்சி அரசாங்கத்தில் எவ்வாறு சுதந்திர கட்சியை பலப்படுத்தினாரோ, அவ்வாறு பொதுஜன பெரமுனவையும் பலவீனப்படுத்த முயற்சித்தார். நாங்கள் அதற்கு இடமளிக்கவில்லை. அரசாங்கத்தில் அமைச்சு பதவிகளை வகிப்பவர்கள் மாத்திரமே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாக்க வேண்டும் என்று குறிப்பிட்டுக் கொள்கிறார்கள்.

கட்சியின் உறுப்பினரை வேட்பாளராக களமிறக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் பெரும்பாலான உறுப்பினர்கள் உள்ளார்கள். இதற்கமைய பொதுஜன பெரமுனவின் உறுப்பினரை வேட்பாளராக களமிறக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அறிவிக்கவில்லை. அவர் போட்டியிடுவதாக இருந்தால் தமிழர்கள் மாத்திரமே அவருக்கு வாக்களிப்பார்கள். அதுவும் எமக்கு சாதகமாக அமையும். ஜனாதிபதித் தேர்தலில் பொதுஜன பெரமுனவின் உறுப்பினரையே வேட்பாளராக களமிறக்குவோம் - என்றார்.(அ)

## 15வேட்பாளர்கள்...

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவ ரான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க (சுயாதீன வேட்பாளர்), எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸ, தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க ஆகியோர் போட்டியிடுகின்றனர்.

அத்துடன், சுதந்திரக் கட்சியின் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் அணி சார்பில் அமைச்சர் கலாநிதி விஜயதாஸ ராஜபக்ஷ மற்றும் முன்னாள் இராணுவத் தளபதி பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா, மௌபிம ஜனதா கட்சியின் தலைவரான தொழிலதிபர் திலித் ஜயவீர ஆகியோரும் களமிறங்கவுள்ளனர்.

தொழிலதிபர் தம்மிக்க பெரேரா, பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் ஜனக ரத்நாயக்க, முன்னாள் அமைச்சர் ரொஷான் ரணசிங்க மற்றும் மிஹிந்தலை ரஜமஹா விகாரையின் தம்மரதன தேரர் ஆகியோரும் ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்க விருப்பத்தை வெளியிட்டுள்ளனர்.

அதேவேளை, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சரத் கீர்த்தி ரத்ன சுயாதீன வேட்பாளராகப் போட்டியிடுவதற்கு நேற்று கட்டுப்பணம் செலுத்தியுள்ளார். இவர் 2019 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலிலும் சுயாதீன வேட்பாளராகப் போட்டியிட்டார்.

அனினவ நிவஹால் பெரமுன என்ற கட்சி சார்பில் போட்டியிடுவற்கு ஓசல லக்மால் அனில் ஹேரத் என்பவரும், இலங்கைத் தொழிலாளர் கட்சி சார்பில் போட்டியிடுவதற்கு எஸ்.ஜி.லியனகே என்பவரும் நேற்று கட்டுப்பணம் செலுத்தியுள்ளனர்.

இது தவிர வடக்கு - கிழக்கில் உள்ள தமிழ்த் தேசியக் கட்சிகள் பொது வேட்பாளரையும் நிறுத்தவுள்ளன. முன்னிலை சோசலிசக் கட்சியும் கூட்டணி சார்பாக வேட்பாளரை நிறுத்தவுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்தனவின் பேரனும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட உத்தேசித்துள்ளார். ஐக்கிய சோசலிசக் கட்சியின் சார்பில் சிறிதுங்க ஜயசூரியவும் களமிறங்கவுள்ளார்.

ஜனாதிபதி வேட்பாளர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக்கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (அ)

# பொலிஸ்மா அதிபரின் பணிகளை முன்னெடுக்க பிரதிப் பொலிஸ்மா அதிபரை நியமிக்க முடியும்

## தேர்தல் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர்

கொழும்பு, ஜூலை 28

பொலிஸ்மா அதிபரின் பணிகளை முன்னெடுத்துச் செல்வதற்கு சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபரொருவரை பொலிஸ் ஆணைக்குழு அல்லது அரச சேவை ஆணைக்குழுவால் நியமிக்க முடியும். தற்போது தேர்தலுக்கான சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர் நியமிக்கப்பட்டுள்ளதால் ஜனாதிபதித் தேர்தலுக்கு எந்தவித பாதிப்பும் இல்லை என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

பொலிஸ்மா அதிபர் விவகாரம் தொடர்பில் விளக்கமளிக்கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தேர்தல் நடத்தப்படும்போது அது தொடர்பில் பொலிஸ்மா அதிபருக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டாலும், தேர்தலுக்கான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபரையே அந்த அறிவித்தல் சென்றடையும். தற்போது அவ்வாறானதொரு சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் நியமிக்கப்பட்டுள்ளார். எனவே, அடிப்படை செயல்பாடுகளை முன்னெடுப்பதில் எந்தவித தடையும் ஏற்படாது.

தற்போது பொலிஸ்மா அதிபர் தன் கடமைகளை முன்னெடுத்துச் செல்வதற்கு இடைக்கால தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. எனவே, பதில் பொலிஸ்மா அதிபரொருவரை நியமிக்க முடியாது என்பது அரசாங்கத்தின் வாதமாக உள்ளது. ஆனால், தேர்தல் செயல்பாடுகளை முன்னெடுப்பதற்கு அதற்கான அதிகாரியொருவரை நியமிக்க முடியும்.

அந்த நியமனத்தை பொலிஸ் ஆணைக்குழுவுக்கோ, அரச சேவை ஆணைக்குழுவுக்கோ வழங்க வேண்டும். அவ்வாறில்லை என்றால் நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்து தேவையேற்படின் தேர்தல் கடமைகளைச் செய்வதற்கு சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஒருவரை நியமிக்க முடியும். அவ்வாறில்லை என்றால் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஊடாக தேவையான ஆலோசனைகளை வழங்க முடியும்.

விசேட அதிரடிப் படையினர் மற்றும் இராணுவத்தினர் பணிக்கு அமர்த்தப்பட்டால் மாத்திரமே சிக்கல் ஏற்படும். எவ்வாறிருப்பினும் செயலாளர்கள் ஊடாக பணிகளை முன்னெடுப்பதற்கு தேர்தல் ஆணைக்குழுவுக்கு முடியும். எனவே, பொலிஸ்மா அதிபர் விவகாரம் தேர்தலுக்குத் தடையாகாது. இதனால் தடை ஏற்படும் என்று காண்பிக்க முயற்சிப்பவர்களும், நீதிமன்றத்தின் உத்தரவை ஏற்றுக்கொள்ள முடியாது என்று எண்ணுபவர்களும் மக்களின் உரிமையை முடக்கவே முயற்சிக்கின்றனர் - என்றார். (எ)

## 10மாதங்களில்...

பெண்களுக்கு எதிரான வன்முறை குற்றங்களின் அறிக்கைகள் 2022 உடன் ஒப்பிடும்போது 2023 இல் 27 வீதம் அதிகரித்துள்ளது.

கற்பழிப்புகளின் எண்ணிக்கை 182 லிருந்து 226 ஆக அதிகரித்துள்ளதாக அறிக்கை காட்டுகிறது.

இலங்கை பொலிஸ் 2023 வருடாந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள தகவல்களின் அடிப்படையில் கணக்காய்வு அறிக்கையில் பின்வரும் விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. (அ)

## சஜித்தின்...

கலந்துகொண்டு உரையாற்றிய அவர் மேலும் கூறியவை வருமாறு,

"ஜனாதிபதி தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க போட்டியிடமாட்டார், அவர் ஓடிவிடுவார் என சிலர் பிரசாரம் செய்தனர். ஆனால் அவர் தேர்தலில் நிச்சயம் போட்டியிடுவார். வேட்பாளராகவே இந்த மேடையில் அமர்ந்துள்ளார்.

செப்ரெம்பர் 21 ஆம் திகதி நடைபெறும் ஜனாதிபதி தேர்தலில் ரணில் வெற்றிபெறுவார் என்பது உறுதி. அவர் பின்னால்தான் அனைத்து கட்சிகளும் இன்றுள்ளன.

நெருக்கடியான நேரத்தில் நாட்டை பொறுப்பேற்காத சஜித் பிரேமதாச வெற்றிவேட்பாளரா? இல்லை. நாட்டை மீட்கக்கூடிய வேட்பாளர் எமது மேடையிலேயே இருக்கின்றார். அடுத்துவரும் நாட்களில் சஜித்தின் சகாக்களும் எமது மேடையில் ஏறுவார்கள்." - என்றார். (அ)

## ரணிலே எமது தெரிவு...

தற்போது ஜனாதிபதி தேர்தலுக்கான கால அட்டவணையை தேர்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளது. இதே நேரம் குறித்த திகதியில் தேர்தல் நடைபெற்றாலும் சரி இல்லாதுவிட்டாலும் சரி தேர்தலை எதிர்கொள்வதற்கான அனைத்து செயற்பாடுகளிலும் நாம் தயாராகவே இருக்கவேண்டும்.

தற்போதைய தேர்தல் களத்தில் பலதரப்பட்ட போட்டியாளர்கள் போட்டியிடவுள்ளதாக தெரிவித்தாலும் குறித்த ஒரு சிலருக்கிடையேதான் கடும் போட்டி நிலவும் என நினைக்கின்றேன்.

இதில் தற்போதைய ஜனாதிபதியே முதன்மையானவராக இருப்பார். குறிப்பாக ரணில் விக்கிரமசிங்கவை மீண்டும் ஜனாதிபதியாக வருவதற்கு வாய்ப்பளிப்பதானது தமிழ் மக்கள் விரைவில் கடந்த காலங்களிலிருந்து விடுபட்டு சிறப்பான எதிர்காலத்தை உருவாக்க வாய்ப்பளிக்கும் ஒன்றாக இருக்கும் என நினைக்கின்றேன்.

2005 ஆம் ஆண்டு ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டிருந்த பொழுது தமிழ் மக்களை சுயநலன்களுக்கு அப்பால் சிந்தித்து, அன்றே அவருக்கு அந்த வாய்ப்பை கொடுத்திருந்தால் இன்று தமிழ் மக்களின் வாழ்வியல் சிறப்பானதாக அமைந்திருக்கும். ஆனால் அன்று தவறவிட்டு விடப்பட்டுவிட்து

ஏனென்றால் தமிழ் மக்களது வாக்குகள் ஊடாகத்தான் ஜனாதிபதி ஒருவர் வெல்லக்கூடிய வாய்ப்பு 2005 இருந்தது. அன்று அந்த வாய்ப்பை ரணில் விக்ரமசிங்கவுக்கு கொடுக்கப்பட்டிருந்தால் இந்த பாழாய்ப்போன யுத்தமோ அல்லது இத்தனை துன்பங்களை துயரங்களை இடம்பெயர்வுகளை எமது மக்கள் சந்தித்து இருக்க மாட்டார்கள் .

அதே நேரம் எமது மக்களுக்கு தற்போதும் ஜனாதிபதி தேர்தல் என்ற வாய்ப்பு கிடைக்கவுள்ளது. அந்த வாய்ப்பை பயன்படுத்தி நாங்கள் இன்றைய ஜனாதிபதியுடன் சேர்ந்து பயணிப்பதன் ஊடாக நாடும் எங்களுடைய மக்களும் அதிக பயன்களை பெறலாம் என நான் நம்புகின்றேன்.

ஆனால் கடந்த இரண்டு வருடத்திற்குள் ஜனாதிபதி தன்னுடைய ஆற்றலால் தன்னுடைய செயல்பாட்டால் நாட்டுக்கு நல்லதொரு சூழ்நிலையை உருவாக்கி தந்திருக்கின்றர். அதனால் அவருக்கு நாங்கள் இன்னும் ஒரு சந்தர்ப்பத்தை கொடுக்க வேண்டும் என்று விருப்புகின்றேன்.

அந்த வகையில் எதிர்வரும் காலங்களிலும் அந்த சந்தர்ப்பத்தை ரணில் விக்ரமசிங்கவுக்கு கொடுப்பதன் ஊடாகவும் அவரோடு சேர்ந்து பயணிப்பதற்கு ஊடாகவும் எமது மக்கள் எதிர்கொள்ளுகின்ற பிரச்னைகளில் இருந்து வெளியில் வரலாம் என்று நினைக்கின்றேன் - என்றார்.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# நாமல் வீட்டில் நடந்த கடும் வாக்குவாதம்!

## தடுத்து நிறுத்திய ஷிரந்தி ராஜபக்ஷ

கொழும்பு, ஜூலை 28

**பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷவுக்கும் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தவுக்கும் இடையில் காரசாரமான வார்த்தைப் பரிமாற்றம் இடம்பெற்றுள்ளதாக தெரியவருகிறது.**

கொழும்பில் உள்ள நாமல் ராஜபக்ஷவின் வீட்டுக்கு நேற்று முன்தினம் இரவு சென்ற லொஹான் ரத்வத்தவுடன் ஏற்பட்ட வாக்குவாதம், மோதலாக உருவாகுவது வீட்டில் உள்ளவர்களின் தலையீட்டினால் தடுக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிப்பது தொடர்பில் இருவருக்கும் இடையில் இந்த வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது.

ஷிரந்தி ராஜபக்ஷவின் தலையீட்டில் இந்த வார்த்தைப் பரிமாற்றம் மோதலாக மாறாமல் தடுக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் பொதுஜன பெரமுன கட்சி என்ற ரீதியில் ஜனாதிபதிக்கு ஆதரவளிக்க வேண்டும் என லொஹான் ரத்வத்த கோரியுள்ளார்.

ஆனால் அதற்கு நாமல் ராஜபக்ஷ மறுப்பு தெரிவித்துள்ளதுடன், அதற்கான காரணங்களையும் முன்வைத்துள்ளார். இதன் காரணமாகவே இந்த வார்த்தைப் பரிமாற்றம் இடம்பெற்றுள்ளதாகவும் தெரியவருகிறது. (அ)

## இந்தியாவிலிருந்து வருகைதரும் சுற்றுலாப் பயணிகள் அதிகரிப்பு!

கொழும்பு, ஜூலை 28

இந்தியாவிலிருந்து நாட்டுக்கு வருகைதரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை தொடர்ந்தும் அதிகரித்து வருவதாகச் சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் இந்தியாவிலிருந்து 30,442 பேர் நாட்டை வந்தடைந்துள்ளனர்.

அத்துடன் சீனா, ஜேர்மன், நெதர்லாந்து போன்ற நாடுகளிலிருந்து இலங்கையை வந்தடையும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி இந்த வருடத்தின் இதுவரையான காலப் பகுதியில் 11 இலட்சத்து 38 ஆயிரத்து 174 சுற்றுலாப் பயணிகள் நாட்டை வந்தடைந்துள்ளதாகச் சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை குறிப்பிட்டுள்ளது. (அ)

## 90 வீத மருந்தை உள்நாட்டில் உற்பத்தி செய்ய நடவடிக்கை

கொழும்பு, ஜூலை,28

நாட்டின் மொத்த மருந்துத் தேவையில் 90 சத வீதத்தை எதிர்வரும் ஆண்டிலிருந்து உள்நாட்டிலேயே உற்பத்தி செய்வதற்கு எதிர்பார்ப்பதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

நாட்டில் பயன்படுத்தப்படும் 200 இற்கும் மேற்பட்ட மருந்து வகைகள் தற்போது உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படுகின்றன. இந்த தொகை மொத்த மருந்து தேவையில் 25 சதவீதமாகும்.

இதற்கிடையில் மருந்துப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கும் தேவையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. (அ)

## தந்தை செல்வா கலையரங்கில் இன்று கறுப்பு ஜூலை நினைவேந்தல் நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜூலை 28

யாழ்ப்பாணத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை கறுப்பு ஜூலை நினைவேந்தலுக்கும், பொதுக்கூட்டத்துக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் வணிகர் கழகம் தலைமையிலான பொது அமைப்புக்களின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அருகில் உள்ள தந்தை செல்வா கலையரங்கில் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை மூன்று மணியளவில் நடைபெறவுள்ளது.

உணர்வார்கள் அனைவரையும் பங்கேற்குமாறு ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுத்துள்ளனர். (அ)

## விஜயதாஸவுக்கு மைத்திரி ஆதரவு!

கொழும்பு, ஜூலை 28

ஜனாதிபதித் தேர்தலில் நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவுக்கு ஆதரவு வழங்கப்படும் என்று சுதந்திரக் கட்சியின் முன்னாள் தலைவர் மைத்திரிபால சிறிசேன அறிவித்துள்ளார்.

நேற்று நடைபெற்ற விசேட ஊடக சந்திப்பின் போதே அவர் இந்த அறிவிப்பை விடுத்துள்ளார்.

“விஜயதாஸ ராஜபக்ஷ சுதந்திரக்கட்சி உறுப்பினர்தான், அவருக்கு எதிராக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகளை நான் நிராகரிக்கின்றேன். நாட்டுக்காக துணிந்து செயற்படும் அரசியல்வாதியே அவர்.” - எனவும் மைத்திரிபால சிறிசேன குறிப்பிட்டார். (அ)

## ஒட்டோவில் பயணித்த மைத்திரி


கொழும்பு, ஜூலை 28

சுதந்திரக் கட்சியின் தொகுதி அமைப்பாளர்களின் கூட்டம் நேற்று முன் தினம் அத்துருகிரியவில் உள்ள விஜேதாச ராஜபக்ஷவின் தேர்தல் செயற்பாட்டு அலுவலகத்தில் நடைபெற்றது.

இதில், கலந்துகொள்வதற்காக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஒட்டோவில் வந்தார்.

இது தொடர்பில் ஊடகவியலாளர்கள் மைத்திரிபால சிறிசேனவிடம் கேட்டபோது, தேர்தல் சட்டங்கள் அமுல்படுத்தப்பட்டுள்ளதால் அந்த சட்டங்களுக்கு மதிப்பளித்து அரச வாகனங்களை பயன்படுத்தாது ஒட்டோவில் பயணிப்பதாக அவர் தெரிவித்தார். (அ)

# வவுனியாவில் நடைபெற்ற தமிழ் தேசிய வீரர்கள் தினம்



வவுனியா, ஜூலை 28

வெலிக்கடை சிறைச் சாலையில் 1983ஆம் ஆண்டு படுகொலை செய்யப்பட்ட தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் தலைவர் தங்கத்துரை, தளபதி குட்டிமணி, முன்னணி போராளி ஜெகன் உட்பட 53 தமிழ் அரசியல் போராளிகளின் அஞ்சலி நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

இந்த நிகழ்வு வவுனியா வைரவபுளியங்குளத்தில் உள்ள தமிழ் ஈழ விடுதலை இயக்க அலுவலகத்தில் இடம்பெற்றது.

இதன்போது தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் தலைவர் தங்கத்துரை, தளபதி குட்டிமணி, முன்னணி போராளி ஜெகனுக்கு தீபமேற்றி மலர் அஞ்சலி செலுத்தப்பட்டதுடன், தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் தலைவரும் வன்னி பாராளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதனால் நினைவுப் பேருரையும் நிகழ்த்தப்பட்டது.

தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் வவுனியா மாவட்ட அமைப்பாளர் புருஸின் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் வன்னி பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் செ.மயூரன் மற்றும் கட்சி உறுப்பினர்கள் ஆதரவாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (அ)

# டிப்ளோமாதாரிகளுக்கு இனிமேல் ஆசிரியர் தொழிலில் இடமில்லை!

## கல்வி அமைச்சர் சுசில் உறுதி

கொழும்பு, ஜூலை 28

டிப்ளோமா படித்தவர்கள் எதிர்காலத்தில் ஆசிரியர் தொழிலில் சேர்த்துக்கொள்ளப்படமாட்டார்கள் என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

எதிர்காலத்தில் அனைத்துக் கல்லூரிகளும் ஒரே பல்கலைக்கழகமாக இணைக்கப்படும். 2028ஆம் ஆண்டுக்குப் பின்னர் ஆசிரியர்களாக நியமிக்கப்படுபவர்கள் இளநிலைக் கல்விப் பட்டதாரிகளாக இருப்பார்கள்.

வேகமாக மாறிவரும் அறிவுக்கு ஏற்ப, ஆசிரியர்கள், மருத்துவர்கள் என ஒவ்வொரு தொழில் வல்லுநர்களும் தங்கள் அறிவைப் புதுப்பிக்க வேண்டும்.

இதற்கிடையில், ஆரம்பக் கல்வியின் அடிப்படையான அழகியல் பாடத்தை ஒருபோதும் பாடத்திட்டத்தில் இருந்து நீக்க முடியாது.

மேலும், செயற்கை நுண்ணறிவு மற்றும் தகவல் தொழிநுட்பம் ஆகிய பாடங்களை இணைத்து பள்ளி பாடத்திட்டம் ஆக்கபூர்வமாக சர்வதேச தர கல்விக்கு உயர்த்தப்படும்.

அதன்படி, 100 பாடசாலைகளில் முன்னோடித் திட்டம் தொடங்கப்பட்டு, ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிக்கப்படும், மைக்ரோசாப்ட் நிறுவனத்துடன் இணைந்து அந்த ஆசிரியர்களுக்கு சர்வதேச அங்கீகாரம் பெற்ற உரிமம் வழங்கப்படும் - என்றார். (அ)

# ஒதுக்கப்பட்ட வாக்களிப்பு நிலையத்தைவிட பிறிதொரு இடத்திலும் வாக்களிக்க வாய்ப்பு

கொழும்பு, ஜூலை 28

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமக்கு ஒதுக்கப்பட்டுள்ள வாக்களிப்பு நிலையத்தில் வாக்களிக்கமுடியாது போகுமென்ற அச்சத்தைக் கொண்டுள்ள வாக்காளர்கள், பிறிதொரு வாக்கெடுப்பு நிலையம் ஒன்றில் வாக்களிப்பதற்கான வாய்ப்புள்ளதாகத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

தேர்தல்கள் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்டுள்ள அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கான விண்ணப்பங்களை அனைத்து மாவட்டங்களினதும் தெரிவத்தாட்சி அலுவலர் அல்லது மாவட்ட தேர்தல்கள் அலுவலகங்களில் பெற்றுக்கொள்ள முடியும்.

குறித்த விண்ணப்பங்களை எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் 1ஆம் திகதிக்கு முன்னர் தேர்தல்கள் ஆணைக்குழு, தேர்தல்கள் ஆணைக்குழு அலுவலகம், சரண மாவத்தை, இராஜகிரிய எனும் முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

விண்ணப்பதாரி தாம் வசிக்கின்ற பிரதேசத்தின் கிராம அலுவலர் மூலம் விண்ணப்பப்பத்திரத்தை சான்றுப்படுத்தவேண்டும் என்பதுடன், கிராம அலுவலரின் சான்றுப்படுத்தல் இல்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 28.07.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org